Volume : 5 Issue -11

ஜனவரி 2013

ஸஃபர் 1434

# வைகறை வெளிச்சம்

₹20

ஆசிரியர் : மு.குலாம் முஹம்மது




## அடுத்த பலிகடா அஃப்சல் குரு

உள்ளே



திருச்சி தமீம் அன்சாரி விவகாரம் தற்போது நடப்பது என்ன?

- அளவை மிஞ்சிய அநீதி மதானியின் பார்வையைப் பறித்து விட்டார்கள்..
- வெள்ளை அறிக்கை
- பாபரி மஸ்ஜித்-இன் வழக்கும் மத்தியப் புலனாய்வுத்துறையின் மெத்தனப்போக்கும்
- அமெரிக்க முஸ்லிம்களின் இன்னொரு சாதனை... இன்னும் பல




## தற்போது பரபரப்பான விற்பனையில்

பாபரி பள்ளி பற்றிய அனைத்து தகவல்களையும் முழுமையாக உள்ளடக்கிய நூல். 1528ல் ஆரம்பித்துதற்போது வரை பாபரி மஸ்ஜித் விஷயத்தில் நடந்து கொண்டிருப்பது என்ன என்பதைப் பற்றிய முழுனையான ஆய்வு நூல்.

**4ம் பதிப்பு**
**144 பக்கங்கள்**
**விலை ரூ.90/-**

ஒரு பெரிய பாரம்பரியத்தையும் வரலாற்று பின்னணியையும் கொண்ட பாலஸ்தீன முஸ்லிம்கள் யூதர்களது சூழ்ச்சியின் காரணமாக படிப்படியாக தங்களது சொந்த நாட்டிலேயே அகதிகளானது எவ்வாறு என்பதை விவரிக்கும் அற்புதமான நூல். தற்போது விற்பனையில்......


திருத்தப்பட்ட 3ம் பதிப்பு
**163 பக்கங்கள்**
**விலை ரூ.110/-**



பாலியல் கொடுமை...என்ன தான் தீர்வு? 2

அளவை மிஞ்சிய அநீதி மதானியின் பார்வையைப் பறித்து விட்டார்கள்...23

கவர் ஸ்டோரி



அடுத்த பலிகடா அஃப்சல் குரு 33



-05


அதிர்ச்சியும் அதிசயமும் நிறைந்த திருக்குர்ஆன் நூலகம் 25

வெள்ளை அறிக்கை 26




-09

பாபரி மஸ்ஜித்-இன் வழக்கும் மத்தியப்புலனாய்வுத்துறையின் மெத்தனப்போக்கும் 30





- 57






- 14

அமெரிக்க முஸ்லிம்களின் இன்னொரு சாதனை- 20



கஷ்மீரின் பாதி விதவைகள் - 61

திருச்சி தமீம் அன்சாரி விவகாரம் தற்போது நடப்பது என்ன? 44


# வைகறை வெளிச்சம்


**ஜனவரி 2013 - ஹிஜ்ரி 1434 ஸஃபர்-ரபியுல் அவ்வல்**

ஆசிரியர்:
**மு.குலாம் முஹம்மது.** M.A
(Journalism & Mass Communication)

துணை ஆசிரியர்:
**கே.எம். இல்யாஸ் ரியாஜி**

**தனி இதழ் ரூ.20/-, ஆண்டு சந்தா உள்நாடு ரூ.240/-, வெளிநாடு ரூ.1500/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் **வைகறை வெளிச்சம்** என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

எண்.52/1 மண்ணடி தெரு, 4வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை-1.
தொலைபேசி: 044-45566909, கைபேசி : 9444239594


முஃமின்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள்; நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கும் நிலையிலேயே அவரை புறக்கணிக்காதீர்கள். (மனப்பூர்வமாகச்) செவியேற்காமல் இருந்துகொண்டே, "நாங்கள் செவியுற்றோம்" என்று (நாவால் மட்டும்) சொல்கின்றவர்களைப் போன்று நீங்கள் ஆகிவிடாதீர்கள்

- ( அல்குர்ஆன் 8 : 20,21)


All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai Courts. Private Circulation to promote Original Issue.

# பாலியல் கொடுமை...என்ன தான் தீர்வு?

"இந்த நேரத்துல ஒரு பொண்ணுகூட என்னடா பண்ட்ற" என்று விழிகளை உருட்டி மிரட்டிக் கேட்ட அந்தக்கும்பல், அந்த இளைஞனை அடித்துத் துவைத்துப் பிழிந்து வெளியே தூக்கி வீசியது.

"நாங்கள் நண்பர்கள் திரைப்படம் பார்த்துவிட்டு வருகின்றோம்" என்று அந்த இளம்பெண் பதில் கூறியவுடன், "நீ பேசாதடி வாயை மூடடி" என்று கத்திக் கொண்டே அந்தக் கும்பலில் ஒருவன் இரும்புக் கம்பியால் அவளைத் தாக்கி திக்குமுக்காடச் செய்தான்.

வலியால் அலறித்துடித்தாள் அவள். ரத்தம் சொட்ட சொட்ட கதறிக் கொண்டிருந்த அவளை அந்தக் கும்பல் பலாத்காரம் செய்தது. தங்களின் காமத்தீ அடங்கிப் போன பின்னர் அவளை அப்படியே தூக்கி வெளியே வீசி விட்டுபோய்விட்டது அந்தக்கும்பல்.

இது ஒரு திரைப்படக் காட்சியல்ல. உலகிலேயே அதிகமான மக்கள் வாழும் இரண்டாவது நாடு. எதிர்கால பொருளாதார வல்லரசு என்றப் பெருமையைப் பெற்றிருக்கும் இந்திய துணைக் கண்டத்தின் தலைநகரம் டில்லிப்பட்டணத்தில் நடைபெற்ற உண்மை நிகழ்வு.

தெற்கு டில்லியிலுள்ள மருத்துவக் கல்லூரி ஒன்றில் பிசியோதெரபி படித்துக் கொண்டிருக்கும் இருபத்து மூன்று வயது மாணவி அவள் தனது ஆண் நண்பர் ஒருவருடன் **16.12.2012** அன்று மாலை திரைப்படம் பார்க்க சென்றிருக்கிறாள். இவர் ஒரு பொறியாளர். இருவரும் திரைப்படம் முடிந்து இரவு சுமார் **9.30** மணியளவில் முனிர்கா என்ற பேருந்து நிறுத்துமிடத்தில் நின்று கொண்டிருந்தனர் தம் இடத்துக்கு செல்லும் பேரூந்தை எதிர்பார்த்து.

வந்தது ஒரு பேரூந்து. அது யாதவ் டிராவல்ஸ் என்ற பயண ஏற்பாட்டு நிறுவனத்தினுடையது. ஒரு பள்ளியின் ஆசிரியர்களையும் மாணவர்களையும் தினந்தோறும் பகல் நேரங்களில் ஏற்றிச் செல்வதற்கான ஒப்பந்த ஊர்தி.

அது ஒரு பொதுப்பேரூந்து என்று கருதி அதில் ஏறியிருக்கின்றனர் அந்த யுவனும் யுவதியும். பேரூந்துக்கு உள்ளே ஏற்கனவே ஆறு பேர் இருந்தனர். ஆறுபேரும் ஒரே கும்பலைச் சார்ந்தவர்கள் இருவரும் உள்ளே சென்று அமர்ந்ததும் இந்த நேரத்துல ஒரு பொண்ணுகூட என்னடா பண்ட்ற என்ற கேட்டபடியே நெருங்கினர் அவர்களை.

அதன் பின்னர் நடந்தவை மேலே நீங்கள் படித்தவை

அந்த மாணவியை ஹில்பூர் என்ற இடத்திலுள்ள மேம்பாலத்தில் வீசிவிட்டு கிளம்பிவிட்டது பேரூந்து இப்போது அந்த மாணவி சப்தர்ஜங் மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். பின்னர் மேல் சிகிச்சைக்காக சிங்கப்பூர் அனுப்பப்பட்டார். அங்கே அவர் உயிர் துறந்தார்.

தலைநகர் டில்லியே அல்லோல கல்லோலப்படுகின்றது. மாணவர்கள், இளைஞர்கள், மகளிர் அமைப்பினர் போன்றோர் குடியரசுத் தலைவர் மாளிகையை முற்றுகையிடுகின்றனர்.

நமது மக்கள் பிரதிநிதிகளாம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவையில் இந்த பிரச்சனைப் பற்றி ஆத்திரத்தோடும் அழுகையோடும் பேசினர். பெண்களை பாலியல் பலாத்காரம் செய்வோரை தூக்கில் தொங்க விட வேண்டும் என்றனர்.

"எனக்கும் மூன்று பெண் பிள்ளைகள் உள்ளனர். இந்தச் சம்பவம் என்னையும் பாதித்துள்ளது" என்கிறார் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள்

தில்லி உயர் நீதி மன்றம் தானே முன் வந்து இந்த வழக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த வழக்கை எதிர் வரும் ஜனவரி 3ம் தேதி முதல் தினந்தோறும் நடத்த டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி டி.முருகேசன் ஒப்புக் கொண்டிருக்கிறார். காவல் துறையின் நடவடிக்கையும் வேகப்படுத்தப்பட்டுள்ளது. பத்திரிகைகள் தொலைக்காட்சிகள் எல்லாவற்றிலும் இது பற்றிய செய்திகள் தலைப்பு செய்திகளாக இடம் பெற்றுவருகின்றன. நீட்டிமுழக்காமல் சொன்னால் மொத்த இந்தியாவின் கவனமும் இதன் மேல் குவிந்து கிடக்கின்றது.

இது இப்படியிருக்க இந்தியாவின் தென்கோடியில் மற்றொரு சம்பவம். கடந்த டிசம்பர் 20ம்தேதி தூத்துக்குடி மாவட்டம் செய்துங்கநல்லூரை அடுத்த கிளாங்குளம் என்ற கிராமத்தைச் சார்ந்த சவ்ந்திர ராஜனின் மகள் புனிதா வயது 13 பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறாள்.

தில்லியில் நடந்த கொடூரத்துக்கு எதிராக நீதித்துறை, சட்டத்துறை, நிர்வாகத்துறை, பாராளுமன்றம், பத்திரிக்கைத்துறை என அனைத்தும் எழுந்து நிற்கின்றது. கிளாங்குளத்தில் நடந்த அநீதி காற்றோடு வெறும் பேச்சாக போகிறதே ஏனிந்த பாகுபாடு என்று தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கலைஞர் கேட்கிறார் இது நியாயமான கேள்வி.

தில்லியோ, கிளாங்குளமோ, தலைநகரோ, கடைக்கோட கிராமமோ, புனிதாவோ, அநீதி அநீதி தான். குற்றம் குற்றம் தான். தண்டனைகள் பாரபட்சமின்றி குற்றவாளிகளுக்கு தரப்பட வேண்டும்.

ஒரு குற்றவாளிக்கு உரிய தண்டனையை உரிய நேரத்தில் பெற்றுத் தருவதற்கு கூட பெரும் கொந்தளிப்பும் மக்களிடையே பெரும் ஆர்ப்பரிப்பும் தேவைப்படுகின்றது. இங்கே நமது நிர்வாக நடைமுறையிலுள்ள தாமதங்களும் சிக்கல்களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதற்குப் பதிலாக மறைமுக அநியாயங்களையே செய்து கொண்டிருக்கின்றன.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறையில் ஈடுபடுவோருக்கு எந்த மாதிரியான தண்டனைகளை தருவது என்பதில் கூட நமக்கு இன்னும் தெளிவு பிறக்கவில்லை.

இவற்றுக்கெல்லாம் என்ன காரணம் என்று கேட்டால் சிலர் நம் சட்டங்களைக் குறை சொல்கின்றனர். நம் நிர்வாக நடைமுறை சரியில்லை என்கின்றனர். சிலர் நமதுநீதிமன்றங்களை குறை காண்பர். சிலர் சமூகத்தை குறை கூறுவர். சிலர் தன் மீதான பாலியல் வன்முறைகளுக்கு அந்தப் பெண்ணின் நடை உடைகளே காரணம் என்பர். இவற்றுள் எது சரி என்று நீண்ட பெரும் விவாதங்களும் கூட நடப்பதுண்டு.

உண்மையைச் சொன்னால் தாம் எப்படி வாழ்வது என்பதை மனிதனே தீர்மானித்துக் கொள்ளும் சமூக அமைப்பில் இது போன்ற குற்றங்களையும் தவிர்க்க இயலாது. குற்றவாளிகள் உருவாவதையும் நிறுத்த முடியாது. மனிதச் சட்டங்களுக்கு அந்த வலிமையில்லை. ஏனெனில் சட்டங்களை இயற்றும் வலிமை மனிதனுக்கில்லை.

மனிதனைப் படைத்த இறைவன் தான் மனித சுபாவங்களை நன்கறிந்தவன். மனிதனிடமிருந்து குற்றங்கள் ஏற்படுவதற்கான காரணங்களையும் நன்கறிந்தவன். ஒரு மனிதனைக் கூட மற்றொரு மனிதனால் முழுமையாகப் புரிந்திட முடியாது எனும் போது மொத்த மனித இனத்தையும் அறிந்திட மனிதனால் முடியுமோ.

எனவே நமது சிந்தனையின் அடிப்படையிலேயே கோளாறு இருக்கிறது. நமது சட்டங்களின் அடிப்படையிலேயே பலஹீனம் இருக்கிறது.

மனிதனைப் படைத்த ஏக இறைவன் மனிதனிடம் பல குணங்களை உணர்வுகளை அமைத்தான். அவற்றுள் ஒன்று பாலுணர்வு. இந்த பாலுணர்வுக்கு மனித அறிவுக்குமிடையே அவ்வப்போது நடக்கும் போட்டியில் பலநேரங்களில் மனித அறிவு தோற்கிறது. பாலுணர்வு வெல்கிறது. பாலுணர்வு கிளர்ந்தெழும் போது அதை வீழ்த்திடும் அளவுக்கு எல்லா நேரங்களிலும் மனிதன் பலமுள்ளவனாக இருப்பதில்லை.

மனிதன் பலஹீனமானவனாகவே படைக்கப்பட்டுள்ளான் (4:28) என்று ஏக இறைவன் கூறுவது பாலுணர்வு பற்றித்தான்.

தடுக்கப்பட்ட வழியில் தம் இச்சையைத் தீர்த்தால் தாம் உயிரெனப் போற்றும் மானத்திற்கும் மரியாதைக்கும் பங்கம் ஏற்படலாம். சிலபொழுது உயிரே பறிக்கப்படலாம் என்ற அச்சம் தான் மனிதனைக் குற்றத்தினருகே செல்ல விடாமல் தடுக்கும்.

எனவே தான் இறைவன் கூறுகின்றான்: விபச்சாரம் செய்தவர் ஆண் பெண் இருவரையும் நூறு கசையடி அடியுங்கள். நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புவோராக இருந்தால் அல்லாஹ்வின் சட்டத்(தை நிலைநாட்டுவ)தில் அவ்விருவர் மீதும் இரக்கம் உங்களுக்கு ஏற்பட வேண்டாம். அவ்விருவரையும் தண்டிக்கும் போது இறை நம்பிக்கையுள்ளோரில் ஒரு கூட்டம் நேரில் பார்க்கட்டும்(24:2).

இங்கே இறைவன் சில விஷயங்களைத் தெளிவுபடுத்துகின்றான் இருவர் மனம் ஒப்பிச் செய்யும் விபச்சாரத்தில் இருவரும் தண்டிக்கப்பட வேண்டும் 2. தண்டனையில் ஆண் பெண் வேறுபாடில்லை 3. நூறு கசையடிகள் தண்டனை தர வேண்டும் 4. தண்டனை தந்திட இரக்கப்பட்டு தயங்கக் கூடாது ஒரு கூட்டத்தின் முன்னிலையில் தண்டனை பகிரங்கமாக நடத்தப்பட வேண்டும்.

திருமணத்துக்கு முன்னர் விபச்சாரம் செய்பவர்களுக்கு மேற்கண்ட தண்டனை தரவேண்டும் எனக் கூறும் இஸ்லாம் திருமணம் செய்து கொண்ட பின்னரும் இந்த மானக்கேட்டில் இல்லறத்துக்கு வெளியே விபச்சாரத்தில் வீழ்ந்தால் அவர்கள் பூமியின் மேல்பரப்பில் வாழும் உரிமையை இழக்கின்றார்கள் என்கிறது. ஆம் அவர்களுக்கு மரண தண்டனை தான் தர வேண்டும் என்கிறது.

இறைவன் வழங்கிய இந்த தண்டனை நடைமுறையில் இருந்த நாட்களிலும் நாடுகளிலும் குற்றங்கள் அறவே நின்றன. இந்தச் சட்டங்களைப் பெற்றிட எவரும் போராடவில்லை. ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. ஆட்சியாளர்களின் இல்லங்களை முற்றுகையிட்டுப் பெறவில்லை. இந்த சட்டங்களை மனித சுபாவத்தை அறிந்த அல்லாஹ் உவந்தளித்தவை இவை.

பாதிக்கபட்ட சகோதரிக்கு நீதி வேண்டி வீதியில் நின்று போராடும் அன்பர்களே குற்றவாளிகளை கழுவிலேற்றிக் கொல்ல வேண்டும் என்று துடிக்கும் நெஞ்சங்களே ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னரே எந்த போராட்டமுன்றி உங்கள் உணர்வுகளை சட்டமாக வடித்து வந்த அல்லாஹ்வை அந்த ஏக இறைவனை அவன் தந்த இனிய மார்க்கத்தைக் கொஞ்சம் ஏறிட்டுப்பாருங்களேன்.

ஆண்களின் தீய பார்வையிலிருந்தும் தீய தீண்டல்களிலிருந்தும் பாதுகாப்பு பெற்றிட ஒரு பெண் எப்படி ஆடையணிந்திட வேண்டும் என்பது தொடங்கி குற்றவாளிகளை முறைப்படி தண்டிப்பது வரை நீங்கள் அறிந்திட ஏராளம் இங்கே இருக்கிறது.

இந்த இனிய மார்க்கம் 1400 ஆண்டுகள் வரலாறு கொண்டது. பல நாடுகளில் இன்று வரை செயலில் இருப்பது. இனியும் இருக்கும். இதை அனைவரும் ஏற்றிட தடையேதும் இல்லை.





# தரீக்குல் குர்ஆன்

மவ்லவி K.M.இல்யாஸ் ரியாஜி

وَلَقَدْ عَلِمْتُمُ الَّذِينَ اعْتَدَوْا مِنكُمْ فِي السَّبْتِ فَقُلْنَا لَهُمْ كُونُوا قِرَدَةً خَاسِئِينَ (٦٥) فَجَعَلْنَاهَا نَكَالًا لِّمَا بَيْنَ يَدَيْهَا وَمَا خَلْفَهَا وَمَوْعِظَةً لِّلْمُتَّقِينَ (٦٦)

உங்க(ள் முன்னோர்க)ளிலிருந்து சனிக்கிழமையன்று (மீன் பிடிக்கக் கூடாது என்ற) வரம்பை மீறியவர்களைப்பற்றி நீங்கள் உறுதியாக அறிவீர்கள். அதனால் அவர்களை நோக்கி "சிறுமையடைந்த குரங்குகளாகி விடுங்கள்" என்று கூறினோம். (65)

இன்னும், நாம் இதனை அக்காலத்தில் உள்ளவர்களுக்கும், அதற்குப் பின் வரக்கூடியவர்களுக்கும் படிப்பினையாகவும்; பயபக்தியுடையவர்களுக்கு நல்ல உபதேசமாகவும் ஆக்கினோம். (66)

**வசனம் 65**

இறைத்தூதர் மூஸா (அலை) அவர்களின் காலத்துக்குப் பின்னர் இறைத்தூதராக தாவூத் (அலை) வந்தார்கள். (கி.மு.1024-963) இக்காலத்தில் வாழ்ந்த தாவூது நபி இஸ்ரவேலர்களை ஒருங்கிணைத்து ஃபலஸ்தீனில் வலுவான அரசொன்றை நிறுவினார்கள்.

வாரத்தில் ஒரு நாள் ஓய்வு வேண்டும். அது எந்த நாள் என்பதை இறைவனே முடிவு செய்யட்டும். அந்நாளில் இறை வணக்கத்தில் மட்டுமே ஈடுபடுவோம். அந்நாளை கண்ணியம் மிக்கதாகக் கருதுவோம். உழைத்துப் பொருளீட்டாமல் அந்நாளை மேன்மைப்படுத்துவோம் என அக்கால இஸ்ரவேலர்கள் வேண்டிக் கொண்டனர்.

அவர்களின் கோரிக்கையை ஏற்று சனிக்கிழமையை வணக்கநாளாக இறைவன் அறிவித்தான். இது நடந்தது ஒரு துறைமுக நகரில் என்று மட்டும் குர்ஆன் (7:163) கூறுகின்றது. அது அகபா வளைகுடாவின் வட கோடியில் உள்ள துறைமுக நகரமான அய்லா எனும் ஊர்தான் என்று திருமறை விரிவுரைகளில் காணப்படுகின்றன.

அவ்வூர்வாசிகளில் பெரும்பாலோர் மீன் பிடித்து வாழ்க்கை நடத்தும் செம்படவர்கள். வாரத்தில் ஆறுநாட்கள் பொருளீட்டுவது, சனிக்கிழமை ஒரு நாள் வணக்க வழிபாட்டில் திளைத்திருப்பது என்று ஆரம்பத்தில் அவர்கள்

முறையாகவே செயல்பட்டு வந்தனர். இதனால் கடலின் ஏனைய பாகங்களிலிருந்து அந்நகரின் கரையோரம் சனிக்கிழமை மட்டும் மீன்கள் திரளாக ஒதுங்கி வந்தன. மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்ட மற்ற நாட்களில் இவ்வளவு தாராளமாக மீன்கள் வருவதில்லை. இது அவர்களுக்குத் தரப்பட்ட ஒரு சோதனையே.

சனிக்கிழமை மட்டும் மீன்கள் கூட்டம் கூட்டமாய் கரையோரம் வருவதைக் கண்ட இஸ்ரவேலர்கள் சபலம் அடைந்தனர். அந்த மீன்களைப் பிடித்திட ஆர்வம் கொண்டனர். அதற்காக ஒரு தந்திரம் செய்தனர். சனிக்கிழமை வரும் மீன்களைப் பிடித்திட வெள்ளிக்கிழமையே முன்னேற்பாடுகளைச் செய்து வைத்தனர்.

முதல் நாளில் வலையை விரித்து வைத்து விடுவர். சனிக்கிழமை அதில் மீன்கள் சிக்கிக் கொள்ளும். ஞாயிற்றுக் கிழமை அவற்றை எடுத்து உண்பதற்கும் எஞ்சியதை விற்று லாபமீட்டியும் பயன்படுத்திக் கொண்டனர். ஒரு சிலரே ஆரம்பத்தில் இவ்வாறு தந்திர உபாயங்களைக் கடைப்பிடித்தனர்.

இவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து தண்டனை எதுவும் வராமலிருப்பதைக் கவனித்த மற்றவர்களும் இதுபோல் சனிக்கிழமை வரும் மீன்களைப் பிடிக்க வெவ்வேறு விதமான உத்திகளைக் கையாளத் தொடங்கினர். அச்சமுதாயத்திலுள்ள நல்லோர்கள் இதைக் கண்டித்தனர். அல்லாஹ்வின் தண்டனை வரும் என எச்சரித்தனர். எனினும் குற்றவாளிகள் திருந்தவில்லை. நாளடைவில் உத்திகளையும் உபாயங்களையும் கைவிட்டு நேரடியாக சனிக்கிழமை மீன் பிடிக்கலாம் எனும் அளவுக்கு அவர்களுக்கு துணிச்சல் வந்து விட்டது.

இதனையறிந்த அவர்களிலுள்ள நல்லடியார்கள் இவர்களிடமிருந்து தனியாக ஒதுங்கி வாழ்வதென முடிவெடுத்தனர். அவ்வூரில் குற்றவாளிகள் வாழும் பகுதிக்கும் தங்களின் வாழ்விடத்துக்கும் நடுவே ஒரு தடுப்புச் சுவரை எழுப்பிக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது. குற்றவாளிகள் உபதேசம் எதையும் ஏற்பதாக இல்லை. திருந்தவும் இல்லை. இதனால் சனிக்கிழமையில் வரம்பு மீறியோர் மீது ஏகநாயன் அல்லாஹ்வின் சாபம் இறங்கிற்று. அவர்கள் உரு மாற்றப்பட்டனர். இதுபற்றி 7:163 - 166 வசனங்களிலும் கூறப்பட்டுள்ளது.

குரங்குகளாக மாற்றப்பட்ட குற்றவாளிகள் தம் இனத்தவர்களைக் கண்டு அழுதனர். மூன்று நாட்கள் மட்டுமே இக்குரங்குகள் வாழ்ந்தன. அம்மூன்று நாட்களாக அவை சாப்பிடவும் இல்லை. நீர் பருகவும் இல்லை இனவிருத்தியும் செய்யவில்லை. மூன்று நாட்களுக்குப் பின்னர் அவை அனைத்தும் இறந்துவிட்டன.

**(நூல்: குர்த்துபீ, இப்னு கதீர்)**

குற்றவாளிகளில் இளைஞர்கள் குரங்குகளாகவும் முதியவர்கள் பன்றி களாகவும் மாற்றப்பட்டனர் என ஹழ்ரத் கதாதா (ரழி) கூறுகின்றார்கள்.

**வசனம் 66**

அவர்கள் அல்லாஹ்விடம் செய்து கொண்ட உடன்படிக்கையை முறித்து மனிதன் என்ற உயர்ந்த நிலையிலிருந்து வேண்டுமென்றே மிருகம் என்ற தாழ்ந்த நிலை நோக்கி இறங்கி விட்டனர். எனவே (மிருகங்களாக மாற்றப்படுதல் என்ற) இந்த தண்டனைக்கு உரித்தானவர்களாயினர். இந்த தண்டனை அக்காலத்தில் அல்லாஹ்வுக்கு மாறு செய்தோருக்குப் படிப்பினையாகவும், எல்லாக் காலங்களிலும் வாழ்கின்ற இறை நம்பிக்கையாளர்களுக்கு ஒரு நல்லுரையாகவும் அமைந்து விட்டது

**(நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)**

அவர்களுக்கு ஏற்பட்ட அந்த இழிநிலை தங்களுக்கு வந்திடக்கூடாது என்றால் இறையச்சமுடையோர் அது போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது என்பது இவ்வசனத்தின் கருத்து. அண்ணல் நபி(ஸல்) கூறியதாக ஹழ்ரத் அபூஹுரைரா (ரழி) கூறுகின்றார்கள்: "கீழான தந்திரங்கள் மூலம் இஸ்ரவேலர்கள் அல்லாஹ் தடை செய்ததை அனுமதிக்கப்பட்டதாக மாற்றியது போல் நீங்களும் செய்ய நினைக்காதீர்கள்"

**(நூல்: இப்னு கதீர்)**

தாவூது (அலை) காலத்தில் வாழ்ந்த இஸ்ரவேலர்களில் சனிக்கிழமை வரம்பு மீறி மீன் பிடித்தவர்கள் குரங்குகளாக உருமாற்றப்பட்ட

வரலாற்றை அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் வாழ்ந்த மதீனாவாழ் இஸ்ரவேலர்கள் அறிந்தே வைத்திருந்தனர். அதை நினைவூட்டி இவர்களை எச்சரிப்பதே இவ்வசனத்தின் நோக்கம்.

குரங்குகளாக மாற்றப்பட்ட இஸ்ரவேலர்கள் மூன்றே நாட்களில் இறந்து போயினர். எனவே இவர்களுக்கு சந்ததி கிடையாது. இப்போதுள்ள குரங்குகளுக்கும் அவர்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதே சரியான கருத்து.

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) கூறுகின்றார்கள்: "இஸ்ரவேலர்கள் செய்த குற்றத்திற்காக அல்லாஹ் அவர்களை குரங்குகளாக மாற்றினான். பின்னர் அவர்கள் மூன்று நாட்களே உயிர் வாழ்ந்தனர். உருமாற்றப்பட்ட எவரும் மூன்று நாட்களுக்கு மேல் உயிர் வாழவில்லை.

குரங்குகள், பன்றிகள் ஏனைய படைப்புக்கள் அனைத்தையும் ஆரம்பத்திலேயே ஆறுநாட்களில் அல்லாஹ் படைத்துவிட்டான். (இதைத் திருக்குர்ஆனின் பல வசனங்கள் கூறுகின்றன.) அந்தக் குரங்குகள் போல் இஸ்ரவேலர்கள் மாற்றப்பட்டனர். அவ்வளவே.

**(நூல்: இப்னு கதீர், குர்த்துபீ)**

எனினும் ஒரு சிலர் இப்போதுள்ள குரங்குகளிலும் இன்னபிற மிருகங்களிலும் சிலவை உருமாற்றப்பட்ட இஸ்ரவேலர் களின் சந்ததிகளாக இருக்க வாய்ப்புள்ளது என்று கூறியுள்ளனர். இதற்குப் பின் வரும் நபி மொழிகளை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள்: இஸ்ரவேல் இனத்தில் ஒரு கூட்டம் என்ன ஆனார்கள் என்றே தெரியாமல் தொலைந்து போனார்கள். அவர்கள் எலிகளாக (தான்மாறி) இருப்பார்கள் என்றே கருதுகிறேன். ஒட்டகத்தின் பாலை வைத்தால் அது குடிப்பதில்லை. ஆட்டுப் பாலை வைத்தால் குடிக்கிறது. இதை நீங்கள் கண்டதில்லையா?

**(நூல்: புஹாரீ, முஸ்லிம் 2997)**

நபிகள் (ஸல்) அவர்களிடம் சமைக்கப்பட்ட உடும்பு இறைச்சி கொண்டு வரப்பட்டது. அதை உண்ண மறுத்த நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்குத் தெரியவில்லை. இது உருமாற்றப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்ததாகக் கூட இருக்கலாம்."

**(நூல்: முஸ்லிம் 5003)**

இஸ்ரவேலர்கள் ஒட்டக இறைச்சி சாப்பிட மாட்டார்கள். ஒட்டகத்தின் பாலை அருந்த மாட்டார்கள். எலிகளும் ஒட்டகப் பால் குடிப்பதில்லை என்பதே நபி (ஸல்) கூறிய வார்த்தையின் கருத்து.

இவ்விரு ஹதீஸ்களையும் அழுத்தமான ஆதாரங்களாக ஏற்க இயலாது. ஏனெனில் இந்த இரு ஹதீஸ்களிலும் உருமாற்றப்பட்ட இனத்தின் மூலம் வந்தவைகள் இப்போதுள்ள மிருகங்கள் என்பதை திட்ட வட்டமாக அறுதியிட்டுக் கூறவில்லை. "இருக்கலாம்" "கருதுகிறேன்" என்று யூகத்தை வெளிப்படும் வார்த்தைகளே இடம் பெற்றுள்ளன. உருமாற்றப்பட்ட இனத்தவர் எவரும் இனவிருத்தி செய்ததில்லை என்ற இறைச்செய்தி வருவதற்கு முன்பு அச்சம் கலந்த யூகமாக நபி (ஸல்) கூறியவை தான் இந்த இரு நபிமொழிகள்.

அந்த இறைச் செய்தி (வஹீ) வந்த பின் தன் யூகத்தை மாற்றிக் கொண்டார்கள். ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரழி) கூறுகின்றார்கள்: (இப்போதுள்ள) குரங்குகளும் பன்றிகளும் உருமாற்றப்பட்ட இனத்தில் உள்ளவை தானா? என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு உருமாற்றப்பட்ட எந்த இனத்தவருக்கும் சந்ததிகள் கிடையாது என்று நபி (ஸல்) கூறினார்கள்.

**(நூல்: முஸ்லிம் 2663, குர்த்துபீ, மற்றும் தக்மிலத்து பத்ஹுல் முல்ஹிம்)**

இப்போதுள்ள மிருகங்கள் எவையும் உருமாற்றப்பட்ட இனத்தின் வழித் தோன்றல்கள் அல்ல என்பதே சரியான கருத்து. மிகப் பெரும்பான்மையான விரிவுரையாளர் களும் இவ்வாறே கூறுகின்றனர். அல்லாஹ்வே எல்லாம் அறிந்தவன்.

இந்த 2:66 வசனத்திற்கு மூன்று விதமான விளக்கங்கள் உள்ளன.

1. உருமாற்றப்பட்ட அழிக்கப்பட்ட அவ்வூர் மக்கள் பற்றி முந்தைய வேதங்கள்

வழியாக அவர்களுக்கு முன்னால் வாழ்ந்த சமுதாயத்தினர் அறிந்திருந்தனர். எனவே (முற்கூட்டியே அறிந்து கொண்ட) அவர்களுக்கு இது ஒரு படிப்பினையாயிற்று, எனவே அந்த ஊர்வாசிகளுக்கு முன்னர் வாழ்ந்த சமுதாயத்தையும் அவர்களுக்குப் பின் வரும் சமுதாயத்தையும் இவ்வசனம் குறிக்கிறது.

2. அந்த ஊரைச் சுற்றிலும் வாழ்ந்து கொண்டிருந்த ஏனைய ஊர்மக்களை இது குறிக்கிறது.

3. சனிக்கிழமையில் மீன் பிடித்த குற்றச் செயலுக்கு முன்னரும் அதற்கு பின்னரும் அவ்வூர்வாசிகள் செய்த எல்லாப் பாவங்களுக்கும் இது தண்டனையாக அமைந்தது. இக்கருத்தை ஹழ்ரத் ஹஸன் (ரஹ்) கூறுகின்றார்கள்.

**(தஃப்சீர் ராஸீயை மேற்கொள்காட்டி இப்னு கதீர்)**

அம்மூன்று கருத்துக்களில், அவ்வூரைச் சுற்றிலும் வாழ்ந்த ஏனைய ஊர்வாசிகளில் யாரையெல்லாம் (அய்லா ஊர்வாசிகள் உருமாற்றப்பட்டு அழிக்கப்பட்ட) இத்தகவல் வந்தடைந்ததோ அவர்களுக் கெல்லாம் இது படிப்பினை என்ற கருத்தே ஏற்றமானது.

**(இப்னு கதீர்)**

இதைத் திருக்குர்ஆனின் வேறு சில வசனங்களும் உறுதி செய்கின்றனர்.

இவ்வூர்வாசிகள் பற்றி தகவல் அல்அஃராப் எனும் ஏழாவது அத்தியாயத்திலும் இடம் பெறுகிறது. அல்லாஹ் கூறுகிறான்: (அவ்வூரில் உள்ள நல்லோர்கள் அறிவுரை கூறிய போது) அவர்களில் சிலர் யாரை அழித்து விட வேண்டும் அல்லது தண்டனைக்குள்ளாக வேண்டும் என்று அல்லாஹ் நாடி விட்டானோ அந்தக் கூட்டத்தாருக்கு ஏன் நீங்கள் உபதேசம் செய்திட வேண்டும் என்று கேட்டனர். அதற்கு, உங்கள் இறைவனிடம் (குற்றங்களை கண்டித்தல் என்ற பொறுப்பை நிறைவேற்றி) பொறுப்பு நீங்கிடவும் குற்றம் செய்வதிலிருந்து அவர்கள் விலகி விடலாம் என்பதற்காகவுமே உபதேசம் செய்கிறோம் என்றனர். (அல்குர்ஆன் 7:164) அதாவது நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல் என்ற கடமையை நிறைவேற்றவே உபதேசம் செய்கிறோம் என்றனர்.

அவர்கள் உபதேசிக்கப்பட்டதை மறந்தபோது தீமைகளைத் தடுத்துக் கொண்டிருந்தோரைக் காப்பாற்றி விட்டு அநீதி செய்தோரை அவர்கள் செய்த பாவத்தின் காரணமாகக் கடும் வேதனையால் பிடித்தோம். (அல்குர்ஆன் 7:165)

அதாவது தீமைகளைக் கண்டித்து அதைக் களைய முற்பட்டோர் தங்களின் முயற்சியில் வெற்றி பெற முடியாவிட்டாலும் தங்களின் பொறுப்பை நிறைவேற்றிவிட்டதால் தண்டனையிலிருந்து தப்பித்தனர்.

அச்சமுதாயத்தில் இன்னொரு பிரிவும் இருந்தனர். அவர்கள் சனிக்கிழமை வரம்பு மீறி மீன் பிடிக்கவில்லை. எனினும் வரம்பு மீறியோரைக் கண்டிக்கவும் இல்லை. நன்மையை ஏவி, தீமையைத் தடுத்தல் என்ற கடமையை நிறைவேற்றவில்லை இவர்கள், இந்த மூன்றாம் வகையினர் அழிக்கப் பட்டனரா அல்லவா? என்பதில் மாறுபட்ட கருத்து நிலவுகின்றது.

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) கூறுகின்றார்கள். "நடைபெற்ற தீமைகளை தடுத்துக் கொண்டிருந்தவர்களைக் காப்பாற்றினோம்." (அல்குர்ஆன் 7:165)

அதாவது தீமைகளைக் கண்டித்து அதைக் களைய முற்பட்டோர் தங்களின் முயற்சியில் வெற்றி பெற முடியா விட்டாலும் தங்களின் பொறுப்பை நிறைவேற்றி விட்டதால் தண்டனையி லிருந்து தடுத்துக் கொண்டிருந்தவர்களைக் காப்பாற்றினோம்." என்று (7:165) அல்லாஹ் கூறியிருப்பதால் தீமைகளைத் தடுத்தோர் மட்டுமே பாதுகாக்கப்பட்டனர். ஏனையோர் (தீமைகளைச் செய்தோரும் அதைக் கண்டுங்காணாமல் இருந்தோரும்) அழிக்கப்பட்டனர்."

"அநீதி இழைத்தோரை அவர்கள் செய்த பாவத்தின் காரணமாக கடும் வேதனையால் பிடித்துக் கொண்டோம்" என்று (7:165) அல்லாஹ் கூறியிருப்பதால் பாவம் செய்தோர் மட்டுமே அழிக்கப் பட்டனர். ஏனையோர் (குற்றங்களைக் கண்டித்தவர்களும் கண்டிக்காதவர்களும்) பாதுகாக்கப்பட்டனர் என்று கருதலாம். **(நூல்: இப்னு கதீர்)**

**தொடர்ச்சி 19ம் பக்கம்**

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன

# இஸ்லாத்துக்கு முன் உலகம் எப்படி இருந்தது?

-தொடர் 14

பேரறிஞர் : அபுல் ஹசன் அலீ நத்வி,
மொழிபெயர்ப்பு : அஹ்மது ஜலாலுத்தீன் நத்வி.

இஸ்லாத்துக்கு முந்தைய அறியாமைக் காலத்தில் ஆதிக்கமும், அநியாயமும் நிறைந்த சட்டங்களின் மேடையாகவே உலகம் இருந்தது. அரசியல் என்றாலே அது மன்னராட்சிதான். அரச குடும்பத்தினரெல்லாம் புனிதப் பிறவிகள் என்ற நம்பிக்கை பாரசீகத்தில் நிலவியது போல் உலகெங்கும் பரவியிருந்தது.

அரசாட்சி என்பது இறைவன் தமக்களித்த உரிமைப்பொருள் என்று நம்பிய சாசானிய வம்சம், இதை குடிமக்களிடம் வலிந்து பிரச்சாரமும் செய்தனர். மக்கள் அதை நம்பினர். சாசானிய வம்சத்தை தவிர வேறெவருக்கும் மக்களை ஆளும் பதவிகளில் வீற்றிருக்க உரிமை இல்லை. அவர்கள் புனிதப்பிறவிகள் என்று குடிமக்கள் நம்ப வைக்கப்பட்டனர். இறுதியில் இது ஒரு மத நம்பிக்கை என்றாகி விட்டது.

அக்கால சீனர்கள் தம் அரசரை வானத்தின் மகன் இம்பராத்தூர் என்றனர். ஆம் வானம் -ஆண், பூமி- பெண் இவ்விரண்டும் சேர்ந்து உலகத்தைப் பெற்றெடுத்தன. முதல் அரசன் தான் தலைப்பிள்ளை என்று நம்பிக் கொண்டிருந்தார்கள் **(நூல்: சீனவரலாறு)**

மனித சமுதாயத்தின் ஈடு இணையற்ற தந்தையே சீன அரசர் தம் மனம் போன போக்கில் எதையும் செய்திடும் எல்லா உரிமையும் இம்பராத்தூருக்கு உண்டு என்று கருதிய சீனர்கள் நீயே தாயுமானவர் தந்தையுமானவர் என்று அரசரிடம் கூறி வந்தனர்.

சீனச் சக்கரவர்த்தி லீயான் (அல்லது தாய் தகப்பன்) இறந்தபோது சீன இனமே பெரும் கவலை கொண்டது. சீனாவே துக்க ஆடை அணிந்தது சிலர் தமது முகத்தை ஊசியால் குத்திக் கிழித்தனர். தம் முடிகளை வெட்டி எறிந்தனர் சிலர். மன்னரின் பிணம் வைக்கப்பட்டிருந்த சவப்பெட்டியில் மோதி காதோடு மண்டையும் உடைத்துக் கொண்டனர் சிலர். இப்படியெல்லாம் செய்து மன்னர் இறந்ததற்கு துக்கம் கடைபிடித்தனர்.


பேரறிஞர் அபுல் ஹசன் அலீ நத்வி

ரோமர்கள் மட்டுமே புனிதமானவர்கள். ரோம் நாடு மட்டுமே புனித பூமி என்பது தான் ரோமர்களிடம் நிலவிய நம்பிக்கை

இதர சமுதாயங்களும் இதர நாடுகளும் ரோமர்களுக்கு சேவகம் செய்திடப் பிறந்தவர்கள் ரோமர்கள் இதயம் போன்றவர்கள் மற்றவர்களெல்லாம் இதயத்துக்கு ரத்தத்தை அனுப்பிவைக்கும் நரம்புகள் போன்றவர்கள்

இவ்வாறெல்லாம் ரோமர்கள் நம்பிவந்த காரணத்தினால் எல்லா உரிமைகளையும் கோட்பாடுகளையும் காலில் போட்டு மிதித்தார்கள். எல்லா மதிப்புகளையும்,

சிறப்புகளையும் காற்றிலே பறக்க விட்டார்கள். எல்லா அக்கிரமங்களையும், அநாகரிகங் களையும் துணிந்து செய்தார்கள்.

ரோமர்களின் மதத்தையும், மத நம்பிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு ரோம ராஜ்ஜியத்துக்கு விசுவாசத்துடன் நடந்துக் கொண்ட ஊர்களையும் கூட அநியாயங் களுக்கும், அக்கிரமங்களுக்கும் உட்படுத்தி னார்கள் ரோமர்கள், காரணம் அவர்கள் ரோமர்கள் அல்ல என்பதே.

எந்த நாடும் எந்த காலத்திலும் தனக்குரிய சட்டங்களை தானே வகுத்துக் கொண்டு, தன் உரிமைகளை தானே எடுத்துக் கொண்டு தம் நாட்டில் தம் விருப்பப்படி வாழக்கூடாது. திட்டங்கள் தீட்டவும், சட்டங்கள் வடிக்கவும், ரோமர்களுக்கு மட்டுமே உரிமை உண்டு

ரோமர்கள் அல்லாத இதர சமுதாயங்களெல்லாம் ஒட்டகங்களை போன்றவர்கள். சில நேரங்கள் அதில் ஏறியமர்ந்து பயணம் போகலாம், சில நேரங்களில் பால் கறந்து பருகலாம், அதற்கென தனியான உரிமைகளை தந்திட முடியாது. கூடாது. அதன் மடுவில் பால் ஊற்றெடுத்திடத் தேவையான அளவுக்கு அதன் முதுகில் ஏறியமர்ந்திட தேவையான அளவுக்கு மட்டும் அதற்குத் தீனி போட்டால் போதும். இஃதன்றி வேறெதுவும் தரத் தேவையில்லை என்று கருதினர் ரோமர்கள்.

ரோம ராஜ்ஜியத்தின் வீழ்ச்சியை விரித்துரைக்க முற்பட்ட Robert Briffault கூறுகிறார்: "ரோம ராஜ்யம் நொறுங்கி போனதற்கு எங்கும் பரவி கிடந்த லஞ்சம் போன்ற சீர்கேடுகள் மட்டுமே அடிப்படைக் காரணமல்ல. ரோம ராஜ்ஜியத்தின் தொடக்க நாள் தொட்டே தீமைகளும், சீர்குலைவுகளும் எதார்த்தத்துக்கு முரணான பண்புகளும் அதனுள் ஊடுருவிப் பாய்ந்திருந்தது.

மனித மூளையில் உதித்து வடிவமைத்த எந்த கொள்கையும் போலியான அஸ்திவாரத்தின் மீது தான் நின்று கொண்டிருக்கும் அது எவ்வளவு மதிநுட்பத்துடனும் இயங்கினாலும் தன்னையே காப்பாற்றிக் கொள்ள இயலாது அது அழிந்தே தீரும்.

ரோமப் பேரரசு சீர்குலைவை அஸ்திவாரமாக கொண்டு அமைந்திருந்தது. எனவே அது நாளுக்குநாள் வீழ்ந்து சரிந்து போனது. அரச குடும்பம் என்ற ஒரு சிறுகுழுவினர் சுகபோகமாக வாழ்வதற்காக பெரும்பான்மை மக்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். அவர்கள் ரத்தங்கள் உறிஞ்சப்பட்டன. இப்படியெல்லாம் ரோமில் அநியாயங்கள் தலைவிரித்து ஆடினாலும், சில நற்பண்புகளும் அங்கே நிலவாமல் இல்லை.

வியாபாரமும், கொடுக்கல் வாங்கலும் நீதியாகவும், நியாயமாகவும் நடந்தன. ரோமர்கள் இதில் இயல்பாகவே ஆர்வம் காட்டினர். அங்கே சட்டத்தின் முன் அனைவரும் சமம். எவருக்காகவும் நீதி வளையாது, தீர்ப்பு திருத்தப்படாது.

ஆனால் இதுபோன்ற நற்பண்புகளால் ரோமப் பேரரசை வீழ்ச்சியிலிருந்து பாதுகாக்க முடியவில்லை. போலியான தவறான அஸ்திவாரத்தின் மீது அரசு அமைந்திருந்ததே அதற்குக்காரணம்.

### எகிப்தில் ரோமின் ஆட்சி:

எகிப்தில் நடைபெற்ற ரோம ஆட்சியைப்பற்றி டாக்டர் ஆல்பர்ட் ஜி பட்லர் கூறுகிறார்: எகிப்தில் நிலவிய ரோம ஆட்சிக்கு ஒரேயொரு லட்சியம் மட்டுமே இருந்தது. குடிமக்களின் செல்வங்களைச் சூறையாடி ஆட்சியாளர் பெருவாழ்வு வாழவேண்டும் என்பதே. அந்த லட்சியம் குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதோ, அவர்களின் வாழ்வாதாரங்களை வளப் படுத்துவதோ அரசுக்கு நோக்கமில்லை. குடிமக்கள் மீது தனது வலிமையை அரசு பிரயோகித்ததேயல்லாமல் அவர்கள் மீது அக்கறை கொள்ளவில்லை. **(நூல்: அரபுக்கள் எகிப்தை வென்ற வரலாறு - பத்ஹூல் அரப் மிஸ்ர்)**

### சிரியாவில் ரோமின் ஆட்சி:

ரோம் நாட்டில் உள்நாட்டுக் குழப்பங்களும் பிரச்னைகளும் இருந்தபோதிலும் சிரியாவை ஆளத்தொடங்கிய ஆரம்பநாட்களில் ரோமர்கள் நீதிநெறியுடன் சிரியாவில் நடந்துக் கொண்டனர். காலப்போக்கில் ரோமர்கள் சிரிய மக்களை

அடிமைகளாக நடத்தத் தொடங்கினர். ரோமர்களுக்கு முன்னர் சிரியாவை ஆண்டவர்களை விட இவர்கள் இழிவாக நடத்தினர் சிரிய மக்களை.

சிரியாவில் ரோமர்களின் ஆட்சி நடைபெற்றாலும் சிரியாவின் நகரங்களை ரோம் தன்னுடன் சேர்த்துக் கொள்ளாமல் தனியாகவே வைத்திருந்தது அந்நகரங்களில் வசிப்போரை ரோம தேசியவாதிகளாகவோ சிரிய நகரங்களை ரோமின் நகரங்களாகவே ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே சிரியா மக்கள் ரோமர்களுடன் ஒட்ட முடியவில்லை.

தம்மீது விழுந்த பொருளாதாரச் சுமைகளைத் தீர்த்திட தாம் பெற்ற பிள்ளைகளையே விற்கும் நிலைக்கு ஆளாகி விட்டிருந்தனர் சிரியமக்கள். இதன் பின் விளைவாக அடிமைத்தனங்களும் அக்கிரமங்களும் கட்டாயப்பணிகளும் அவர்கள் மீது திணிக்கப்பட்டன.. இந்த இழிநிலையைப் பயன்படுத்தி சிரியாவில் தொழிற்சாலைகளையும், நிறுவனங்களையும் நிறுவி சிரியமக்களைக் கசக்கிப் பிழிந்தனர் ரோமர்கள். **(நூல்: ஹுதுதுஷ்ஷாம்)**

ரோமர்கள் சிரியாவை எழுநூறு ஆண்டுகள் ஆண்டனர். இவர்களின் ஆட்சியில்தான் பிளவும் பிணக்கும் ஆதிக்கமும் அகம்பாவமும்கொலைகளும் நடக்க ஆரம்பித்தன.

கிரேக்கர்கள் சிரியாவை முன்னூற்று அறுபத்து ஒன்பது ஆண்டுகள் ஆண்டனர். இக்காலக் கட்டத்தில் தான் சண்டைகளும் அநியாயங்களும் நீக்கமற நிறைந்திருந்தன சிரியாவில். கிரேக்கர்கள் மனம் போன போக்கில் வாழ்ந்தனர். சிரிய மக்களை கோரமாகவும் கேவலமாகவும் நடத்தினர் கிரேக்கர்கள். **(நூல்: ஹுதுதுஷ்ஷாம்)**

சுருங்கச் சொன்னால் ரோம பாரசீக வல்லரசுகளின் காலனி ஆதிக்கத்தின் கீழிருந்த நாடுகள் எதுவும் அந்நியர்களின் ஆட்சியில் நிம்மதியாக இருக்கவில்லை அரசின் மையப்பகுதியிலும் தலைநகரிலும் கூட அரசியல் பொருளாதாரச் சரிவுகள் காணப்பட்டன.

### ஈரானில் பொருளாதார அநீதி:

ஈரானில் பொருளியல் சார்ந்த அரசியலோ பொருளாதார அமைப்பு முறையோ நியாயமாகவும் இருக்கவில்லை, நிலைத்ததாகவும் இருக்கவில்லை பெரும்பாலான காலகட்டங்களில் ஸ்திரத்தன்மையற்ற அநீதியான பொருளாதார அமைப்புமுறை அங்கு இருந்தது.

நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்பவும் யுத்த சூழ்நிலைக்கு ஏற்பவும் பொதுமக்களிடமிருந்து வரிகள் வசூலிக்கப்பட்டன. வரியை வசூலிக்கும் அதிகாரிகள் தம் மனம் போன போக்கில் தம் குணங்களுக்கு ஏற்றவாறு வசூலித்தனர். இப்படித்தான் வரி வசூலிக்கவேண்டும் இந்த அளவு தான் வசூலிக்கவேண்டும் என்று எந்த திட்டமோ நிலையான ஏற்பாடோ அங்கு இல்லை

சாசானியர் காலத்து ஈரான் எனும் நூலில் அதன் ஆசிரியர் கூறுகிறார்: வரியை வசூலிக்கும் அரசு அதிகாரிகள் வரிகளை அநியாயமாகவும் மோசடியாகவும் விதித்தனர் ஆண்டுதோறும் வரிவசூலிப்பில் ஏற்றத் தாழ்வுகள் இருந்ததால் அரசின் வரவும் செலவும் ஒரே நிலையில் ஸ்திரத்தன்மையுடன் இருக்க வில்லை"

எப்போதாவது போர் மூண்டுவிட்டால் போர்ச்செலவுகளுக்கு அரசிடம் பணம் இல்லாதபோது புதிய வரிகளை விதிப்பதைத் தவிர வேறு வழி இல்லை அரசுக்கு. இதனால் ஈரானின் வளம் கொழிக்கும் மேற்குப்பகுதி குறிப்பாக பாபிலோன் பகுதிகள் இந்த வரிவிதிப்புகளுக்கு எப்பொழுதுமே இலக்காயின **(பக்கம் : 160)**

### மன்னர்களின் சுகபோகம்:

சூழ்நிலைகளுக்கேற்ப குடிமக்களிடமிருந்து வரிகள் வசூலிக்கப் பட்டன. குடிமக்களின் நலனுக்கு சொல்லிக்கொள்ளும்படியாக எந்தச் செலவும் செய்யப்படவில்லை. இதற்கு மாறாக அரசர்களின் சேமிப்புக் கிடங்குகள் நிரம்பின. தொன்றுதொட்டே ஈரானிய மன்னர்களிடம் ஒரு பழக்கமிருந்தது. அறியப்பட்ட உலகின் அதி நவீனப் பொருள்களையும் மதிக்கொண்ணா சாதனங்களையும் தங்க நாணயங்களையும்

சேர்த்து வைத்துக் கொண்டிருப்பார்கள். அந்நிலை இப்போதும் நிலவியது.

ஈரான் மன்னர் இரண்டாம் குஸ்ரு தலைநகர் மதாயின் கிபி 607-608 ஆண்டுகளில் தான் கட்டிய அரண்மனைக்கு, பழைய அரண்மனையிலிருந்து செல்வங்களை இடம் மாற்றினார்.

அப்போது அவரிடம் 468 மில்லியன் மிஸ்கால் தங்கம் இருந்தது. இது இன்றைய மதிப்பில் 375 மில்லியன் பிரான்க் தங்கத்துக்கு நிகரானது. (பிரான்க் என்பது ஐரோப்பாவின் பழைய நாணய மதிப்பு ஐரோப்பிய நாடுகள் ஒருங்கிணைந்து தங்களுக்கிடையே யூரோ என்ற ஒரே நாணயத்தை ஏற்படுத்திக் கொண்டன. ஒரு யூரோவின் இந்திய மதிப்பு சுமார் எழுபது ரூபாய்)

இரண்டாம் குஸ்ரு முடிசூட்டிக் கொண்டதிலிருந்து பதிமூன்றே ஆண்டுகளில் அவரிடம் 800 மில்லியன் மிஸ்கால் தங்கம் இருந்தது.

**ஈரானிய சமூகத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வு:**

ஈரானில் விரல்விட்டு எண்ணத்தக்க சில தனி நபர்களிடம் செல்வம் குவிந்து கிடந்தது. பெரும்பாலான பொதுமக்கள் வறுமையில் உழன்றுக் கொண்டிருந்தார்கள்.

ஈரான் கண்ட ஆட்சியாளர்களி லெல்லாம் மிகச்சிறந்தவர் நீதிநெறி பிறழாமல் ஆண்டவர் கிஸ்ரா அனுஷர்வான் அவர்கள். இவரைப்பற்றியும் ஈரானிய வரலாற்றில் வளப்பான செழிப்பான காலம் பற்றியும் விரித்துரைக்கிறார் ஸாசானியர் காலத்து ஈரான் எனும் நூலில் ஆசிரியர். கிஸ்ரா அனுஷர்வான் மேற்கொண்ட பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் அரசாங்கத்தினுடைய பொருளாதார நலனுக்கு உகந்ததாக இருந்ததேயன்றி குடிமக்களுக்கு பெரிய பலனைத் தந்திடவில்லை. எனவே இந்தச் சீர்திருத்தங்களுக்கு முன்னர் மக்கள் எப்படி இருந்தார்களோ அதுபோலவே இப்போதும் அறியாமையிலும் தரித்திரத்திலும் கிடந்து புரண்டனர்.

ஈரானியச் சமூகத்தில் பிறப்பின் பெயரால் கற்பிக்கப்படும் பிளவுகள், சமூக அவலங்கள், ஏற்றத்தாழ்வுகள், அடித்தட்டு மக்களின் இழிந்த வாழ்க்கை முறை ஆகியவற்றை நேரில் கண்ட பைசாந்திய அறிவுஜீவிகள் மனம் நொந்தனர். பாரசீக சமூகத்தின் மீது இப்படியொரு கடும் விமர்சனத்தை முன் வைத்தனர். அங்கே வலியவர்கள் வலிமை குன்றியோரை அடக்கி யாண்டனர். அரக்கத்தனமாகவும் அநியாயமாக வும் வேலை வாங்கினார்கள் **(நூல்: சாசானியர் காலத்து ஈரான் பக் 589, 590)**

ஆட்சியாளர்களிடத்தில் செல்வாக்குப் பெற்ற பொருளாதாரவளம் பெற்ற உயர் வர்க்கத்தின் வம்சத்தினருக்குத்தான் அரசாங்கத் தின் உயர்பதவிகள் வழங்கப்பட்டு வந்தன ஈரானில்.

ரோம ராஜ்ஜியத்தில் நிலவிய சமூக அமைப்பைப் பற்றி Robert Briffault கூறுகிறார்.:- எந்த சமுதாய அமைப்பு வீழ்ச்சிக்கும் சரிவுக்கும் ஆட்பட்டு விட்டதோ அந்த சமுதாயத்தைத் தூக்கி நிறுத்திட நடக்கும் எல்லா உபாயங்களும் யுக்திகளும் தோற்றுத்தான் போகும். வீழ்ச்சியுறத் தொடங்கிய காலகட்டங்களில் ரோம சமுதாயமும் அநீதியான இனப்பாகுபாடுகளில் சிக்கித் தத்தளித்தது. ஒவ்வொரு ஜாதியினருக் கும் ஒரு தொழில். ஒரு ஜாதியின் தொழிலை மற்றொரு ஜாதிக்காரன் செய்யக்கூடாது என்றொரு விதியிருந்த காரணத்தினால் தந்தை செய்த தொழிலைத்தான் மகன் செய்ய முடியும். வேறுதொழில் செய்ய முடியாது அன்றைய ரோம் நாட்டின் நிலை இதுவே. (நூல்:The Making of Humanity, Page: 165)

**வீழ்ந்தது விவசாயம்:**

ஈரானிய அரசு தம் குடிமக்களுக்கு விதித்த விதவிதமான புதுப்புது வரிகளால் மக்கள் அல்லல்பட்டார்கள். இதனால் பன்னெடுங்காலமாக விவசாயத் தொழில் செய்து வந்தவர்களெல்லாம் கூட வரிச்சுமை தாளாமல் தொழிலை கைவிட்டார்கள். (தொழில் செய்யாமல் சும்மா இருந்தவர்கள் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றவும் இல்லை. காரணம்) தங்களுக்கு ஆர்வமில்லாத ஒரு நோக்கத்துக்காகவோ தமக்கு பிடிக்காத ஒரு சமுதாயத்தின் நலனுக்காகவோ இராணுவச் சேவையில் ஈடுபடவில்லை. எனவே கட்டாயமாக இராணுவத்தில் சேர்க்கப் படுவதிலிருந்து தப்பிக்கவும் வரிகள் கொடுக்காமல் தப்பிக்கவும் அவர்களுக்கு இருந்த

ஒரே வழி கோயிலின் மடங்களுக்குள் அடைக்கலம் புகுவதுதான். எனவே மடங்களுக்குள் அடைக்கலம் புகுந்தனர்.

இக்காலச் சூழ்நிலையில் மக்களிடையே துணிச்சலும் குற்றச் செயல்களும் முறை தவறிய வழியில் பொருளீட்டுவதும் அதிகரித்து விட்டன.

சாசானிய காலத்து ஈரான் என்ற நூலின் ஆசிரியர் கூறுகின்றார்: விவசாயிகள் தமது நிலங்களுடனே எப்போதும் பின்னிபிணைந்து கிடந்தனர் உழைத்தனர் உழைத்துக் கொண்டேயிருந்தனர். எனினும் பெரும் பஞ்சமும் வறுமையும் அவர்களை விட்டு அகலவில்லை விவசாயத்துடன் தொடர்புடைய (நடவு, களை எடுத்தல், நீர் பாய்ச்சுதல், அறுவடை) என எல்லாவேலைகளையும் இலவசமாகவே செய்திட வேண்டும் என்று நிர்பந்திக்கப்பட்டிருந்தனர். எனவே விவசாயிக்கு எதுவும் மிஞ்சவில்லை.

இம்யான் மார்சீலினூஸ் என்ற வரலாற்றாசிரியர் கூறுகிறார்: பஞ்சைப் பராரிகளான இந்த விவசாயிகள் இராணுவப் படை செல்லுமிடமெல்லாம் பின்னாலேயே நடந்தே சென்றிட வேண்டும். நிரந்தர அடிமைகளாக விவசாயிகள் நடத்தப்பட்டனர். சம்பளமோ கூலியோ ஊக்கத்தொகையே உதவித்தொகையோ எதுவும் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. எஜமான்கள் அடிமைகளை நடத்துவதைபோல நிலத்தின் உரிமையாளர்கள் விவசாயிகளை நடத்தினர். **(நூல்: சாசானியர் காலத்து ஈரான் பக்: 424)**

ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் யூதர்கள் அப்போது கடும் சித்ரவதைகளுக்கு உள்ளாகி நின்றனர். எகிப்தில் யஅகூபிய்யூன்கள் சொல்லவொண்ணா சிரமங்களுக்கு ஆளாகி நின்றனர். அவர்களுக்கு எதிரான அநியாயங்களை ஆட்சியாளர்களே அரங்கேற்றி னார்கள். மானங்கள் பறிக்கப்பட்டன. செல்வங்கள் சூறையாடப்பட்டன.

பாதிக்கப்பட்ட யூதர்களின் கோரிக்கையை அபயக்குரலைக் கேட்டிட எவரும் தயாரில்லை. யூதர்களோடு உடன்படிக்கை செய்திருந்தவர்களும் உடன் படிக்கை செய்யாதவர்களும் அவர்களைக் கண்டு கொள்ளவில்லை. இது அவர்களின் விதி. இதை மாற்ற இயலாது என்ற கூறி ஒதுங்கிவிட்டனர். இந்த அநியாயங்களையெல்லாம் தாங்கிக் கொண்டு வாழ்வதைவிட சாவதே மேல் என்று யூதர்கள் சிலநேரங்களில் கருதிவிட்டனர். எந்த அளவுக்கு அங்கே அநியாயங்கள் அரங்கேறின என்பதற்கு இது சான்று.

........தொடரும்

***தமிழ் வடிவம்: இல்யாஸ் ரியாஜி***

இப்போது பரபரப்பான
விற்பனையில்......
யூசுப் அல் கர்ளாவி யின்
நாம் பிரிந்து விடவேண்டாம்
முஸ்லிம்கள் 73 கூட்டங்களாக பிரிய மாட்டார்கள் என்று குர்ஆன், சுன்னா ஒளியில் நிரூபிக்கும் நூல்!
முஸ்லிம்கள் பிளவுபட குர்ஆனோ, ஹதீஸோ காரணமில்லை என்று விளக்கும் நூல்!!
முஸ்லிம்கள் ஒன்றுபடுவதற்கான காரணங்களையும், வழிமுறைகளையும், ஐயங்களையும் விவரிக்கும் நூல்!!!
விலை 175
இல்யாஸ் ரியாஜி அவர்களின்
இனிய தமிழ் நடையில்.......
வேர்கள் வெளியீட்டகம்
52/1, மண்ணடி தெரு, 4வது மாடி,
சென்னை.1, தொலைபேசி: 45566909

# எது முதலில்? -6



பேரறிஞர் யூசுப் அல் கர்ளாவி

# தேவை தரமான மனிதர்கள்

**ந**பித்தோழர்களுள் ஒருவரான அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது(ரழி) அவர்கள் ஒரு மரத்தில் ஏறினார்கள். அப்பொழுது அவர்களின் இரு கெண்டைக்கால்களும் வெளியே நன்றாகத் தெரிந்தன. அவை மெலிந்தும் சிறுத்தும் இருந்ததைக் கண்ட நபித்தோழர்களில் சிலர் வாய்விட்டுச் சிரித்து விட்டனர். உடனே நபி(ஸல்) அவர்கள் 'இவரின் கெண்டைக் கால் மெலிந்திருப்பதைக் கண்டுதானே நீங்கள் (ஏளனமாகச்)சிரிக்கிறீர்கள். என் உயிர் யார் வசமுள்ளதோ அந்த அல்லாஹ்மீது சத்தியமாகச் சொல்கிறேன் (நன்மை தீமைகளை சீர்தூக்கிப் பார்த்திடும்நியாயத்) தராசுத்தட்டில் இவரது கால்களிரண்டும் உஹது மலையை விட அதிக கனமானதாக இருக்கும்' என்று கூறினார்கள் **(நூல்: அஹ்மது, தப்ரானி, அபூயஅலா, பஸ்ஸார்)**

அப்படியானால் தூய உள்ளமும் கூர்த்த மதியும் இல்லாமல் வாட்ட சாட்டமாக மட்டும் இருப்பதில் எவ்வித மதிப்பும் இல்லை என்பதுதானே அதன் பொருள்.

அரபுப் பழமொழியொன்று "பேரீத்தம் மரம் போல் இளைஞர்களெல்லாம் இருப்பதைப் பார்க்கிறாய் உள்ளே என்ன இருக்கிறதென்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்கிறது.

ஒரு கூட்டத்தின் மக்கள் குள்ளமாகவோ உயரமாகவே இருப்பது தவறல்ல. உருவத்தில் கோவேறு கழுதை போல் இருந்துக் கொண்டு அறிவில் சிட்டுக்குருவி போல் (சிறுத்து) இருப்பதே தவறு என்று ஒரு கூட்டத்தை இகழ்ந்து பாடியுள்ளார்கள் ஹஸ்ஸான் பின் ஸாபித்(ரழி)அவர்கள். எனவே அறிவும் திறனும் தான் முக்கியமேயன்றி உருவம் அல்ல.

இப்படிக் கூறிவிட்டதால் உடல் ஆரோக்கியத்தை இஸ்லாம் ஒரு பொருட்டாகவே கருதவில்லை என்று எண்ணிவிடாதீர்கள். உடல் ஆரோக்கியத்தை இஸ்லாம் பெரிதாய் போற்றுகிறது. தாலூத் என்ற அரசரை அல்லாஹ் புகழ்வதைப் பாருங்கள்

அல்லாஹ் அவருக்கு உடல், அறிவு ஆகியவற்றை தாராளமாக வழங்கியுள்ளான் **(அல்குர்ஆன் 2:247)**

அதாவது அவர் உடலாரோக்கியம், சிந்தனையாற்றல் இவற்றை அதிகம் பெற்றுத் திகழ்ந்தார் என்று அல்லாஹ் பாராட்டுகிறான்

அண்ணல் நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: உன் உடலுக்கு நீ செய்ய வேண்டிய கடமையுண்டு **(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ்பின்அம்ரு(ரழி), நூல்: புஹாரி, முஸ்லிம்)**

இப்படியெல்லாம் இஸ்லாம் கூறியிருந்தாலும் ஒருவரின் மேன்மைக்குரிய அளவுகோலாக உடல் ஆரோக்கியத்தை கூறவில்லை.

கட்டுமஸ்தான உடலமைப்பும் உடல் வலிமையும் ஒருவரின் ஆண்மைக்கு அளவுகோல் அல்ல. அவன் மனிதர்களில் சிறந்தவன் என்பதற்கு இது அளவுகோல் அல்ல. ஒருவனின் அழகும் தோற்றப்பொலிவும் அவனின் மனிதப்பண்புக்கு அளவுகோல் அல்ல. இதுபோல ஒருவனின் உடலில் நோய்கள்

இல்லை என்பது அவன் சிறந்த மனிதன் என்பதற்கு அளவுகோல் ஆகாது.

அண்ணல் நபி(ஸல்) கூறினார்கள்: அல்லாஹ் உங்களின் உடலமைப்பையோ உருவங்களையே பார்ப்பதில்லை. உங்கள் உள்ளங்களையே அவன் பார்க்கிறான் **(அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரழி), நூல்: முஸ்லிம்)**

கலீஃபா அப்துல் மலிக் பின் மர்வான் அவர்களை ஒரு கவிஞர் இப்படிப் புகழ்ந்து கவிபாடினார்.

"அவரின் நெற்றிக்கு மேலுள்ள தலை வகிடு மீது கிரீடம் தங்கம் போல் ஜொலிக்கிறது" என்று பாடினார். இதைக்கேட்ட அப்துல் மலிக் பின் மர்வான், "முஸ்அப் பின் உமைர்(ரழி)அவர்களை ஒரு கவிஞர் புகழ்ந்தாரே அது போல் என்னை நீ புகழ்ந்திருக்கலாமே" என்று கூறிவிட்டு அந்தக் கவிதையைப் பாடினார்.

" முஸ்அப்(ரழி) அல்லாஹ்வின் தீச்சுவாலை அவரால் இருள்கள் வெளிச்சம் பெற்றன. அவரின் ஞானம் வலிமையானது அதில் ஆணவமோ பெருமையோ இல்லை".

இப்படி முஸ்அப்(ரழி) பற்றிப் பாடியது போல் என்னை நீ புகழ்ந்திருக்கலாம் என்றார் அப்துல் மலிக்.

இதற்கு காரணம் அப்துல் மலிக் பற்றி கவிஞர் கூறிய வரிகள் அவரை மறைமுகமாக இகழ்ந்தன. அவரின் கிரீடம் தான் தங்கம் போல் ஜொலிக்கிறது. அவரின் அறிவு ஜொலிக்க வில்லை. முஸ்அப்(ரழி)வின் ஞானம் போல இருளில் வெளிச்சம் தரவில்லை என்பது அக்கவிதையின் மறுபொருள்.

ஆம் தலையில் இருக்கும் அறிவையும் இதயத்தில் இருக்கும் ஈமானையும் ஈமானால் விளையும் அறப்பணிகளையும் வைத்தே ஒரு மனிதன் மதிப்புப் பெறுகிறான்.

ஒருவன் செய்யும் நற்செயல் எவ்வளவு எண்ணிக்கையுள்ளது எவ்வளவு பெரியது என்று இஸ்லாம் பார்ப்பதில்லை எவ்வளவு உளப்பூர்வமாகவும் பயபக்தியுடனும் அச்செயல் செய்யப்பட்டுள்ளது என்றே இஸ்லாம் பார்க்கிறது.

இஹ்ஸான்(உளத்தூய்மையுடன் பணியாற்றுதல்) என்பது முஸ்லிம்கள் அனைவர்மீதும் இஸ்லாம் விதித்துள்ள கடமை. அது நஃபில் அல்ல. நோன்பு உள்ளிட்ட எந்தக் கடமையை நிறைவேற்றினாலும் இஹ்ஸான் மிகமிக அவசியம்.

அண்ணல் நபி(ஸல்) கூறினார்கள்: எல்லாச் செயல்களுக்கும் இஹ்ஸான் அவசியம் என்று அல்லாஹ் விதித்துவிட்டான்.(ஒரு கொலைக் குற்றவாளியை) நீங்கள் கொன்றால் அழகிய முறையில் கொல்லுங்கள். அறுத்தால் அழகிய முறையில் அறுங்கள். நீங்கள் கத்தியைத் தீட்டுங்கள். பலிப்பிராணிக்கு சிரமம் தராமல் அறுத்து முடித்து விடுங்கள். **(அறிவிப்பாளர்: ஷத்தாத் பின் அவ்ஸ்(ரழி), நூல்: முஸ்லிம்)**

இந்த நபிமொழியில் இடம் பெற்றுள்ள "கதப" விதித்துள்ளான் எனும் சொல் கடமையாக்கியுள்ளான் என்ற பொருளில் பயன்படுத்தப்படும் சொல்லாகும்.

நபி(ஸல்)கூறினார்கள்: அனைவரும் அழகிய முறையில் (இஹ்ஸானுடன்) பணியாற்றுவதையே அல்லாஹ் விரும்புகிறான் **(அறிவிப்பாளர் : குலைப்(ரழி) நூல்: முஸ்லிம், பைஹகீ)**

ஆக எல்லாச் செயல்களும் அழகிய முறையில் செய்யப்படவேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான் அதையே விரும்புகிறான் அவர்களையே விரும்புகிறான்.

பொறுப்புள்ள ஒவ்வொரு மனிதனும் அழகிய முறையில் செயல்பட்டால் போதாது மிக அழகிய முறையில் செயல்படவேண்டும் என அழைப்பு விடுக்கிறது அருள் மறையாம் திருக்குர்ஆன்

உங்கள் இறைவனிடமிருந்து இறக்கியருளப்பட்ட மிக அழகியதைப் பின்பற்றுங்கள்(39:55)

சொற்களைச் செவியேற்று அவற்றுள் மிக அழகானவற்றைப் பின்பற்றும் அடியார்களுக்கு நல்வாழ்த்து கூறுவீராக. (39:17,18)

மாற்றுக் கருத்துடையோரிடம் மிக அழகிய முறையில் தர்க்கம் செய்திடப் பணிக்கிறது திருக்குர்ஆன்.

(நபியே) மிக அழகிய முறையில் அவர்களிடம் தர்க்கம் செய்வீராக (16:125)

ஒரு தீமையை மிக அழகிய நன்மையால் மாற்றும் படி பணிக்கிறது.

நன்மையும் தீமையும் சமமாகாது. மிக அழகியதைக் கொண்டு அதைத் தடுப்பீராக. ***(41:34)***

அனாதையின் பொருளுக்கு அருகில் மிக அழகிய வழிமுறையிலன்றி நெருங்க வேண்டாம் என்கிறது.

அனாதையின் பொருளின் பக்கம் அவன் பருவம் அடையும் வரை மிக அழகான முறையிலன்றி நெருங்காதீர்கள். ***(6:152)***

பூமியையும் வானங்களையும் அவற்றிலிருப்பவற்றையும் ஏன் படைத்தான் அல்லாஹ்? வாழ்வையும் மரணத்தையும் ஏன் படைத்தான்? இதோ கூறுகிறான் அல்லாஹ்

மனிதர்களில் மிக அழகிய முறையில் செயல்படுவோர் யார் என்று சோதிக்கவே நிச்சயமாக பூமியிலுள்ளவற்றை நாம் அதற்கு அலங்காரமாக்கினோம் ***(18:7)***

உங்களில் யார் மிக அழகாக செயல்படுகிறார் என்று சோதிக்கவே வாழ்வையும் மரணத்தையும் அல்லாஹ் படைத்தான் ***(67:2)***

அவன் தான் வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். அவனுடைய அர்ஷ் நீரின் மேல் இருந்தது. உங்களில் யார் மிக அழகிய முறையில் செயல்படுகின்றீர்கள் என்று சோதிக்கவே இவற்றைப் படைத்தான் (11:7)

இந்த வசனங்களை நன்றாகப் படியுங்கள். இவை நமக்குச் சொல்வதென்ன? மனிதர்களுக்கிடையே நடக்கும் போட்டி நன்மைக்கும் தீமைக்குமிடையே நடக்கும் போட்டியல்ல. அழகியதற்கும் மிக அழகியதற்குமிடையே நடக்கும் போட்டியாக இருக்கவேண்டும். இறை நம்பிக்கையுள்ள ஒருவர் எப்போதும் மிக அழகியதையும் மிக உயர்ந்ததையும் கருத்தில் கொண்டு பணியாற்ற வேண்டும்.

அண்ணல் நபி(ஸல்) கூறினார்கள்: நீங்கள் அல்லாஹ்விடம் சொர்க்கத்தைக் கேட்டால் ஃபிர்தவ்ஸ் என்ற சொர்க்கத்தைக் கேளுங்கள். ஏனெனில் இதுவே உயர்ந்த உன்னதமான சொர்க்கம். இதற்கு மேல் தான் அல்லாஹ்வின் அர்ஷ் உள்ளது ***( நூல் : புஹாரீ, கிதாபுத் தவ்ஹீத்)***

ஜிப்ரீல்(அலை) அவர்கள் மனித உருவத்தில் வந்து நபியிடம் கேள்விகள் கேட்க நபி(ஸல்) அவர்கள் பதில்அளித்தார்கள் என்பது மிகப்பிரபலமான ஒரு ஹதீஸ் தான். அதில் இஹ்ஸான் என்றால் என்ன? என்று ஜிப்ரீல்(அலை) கேட்டதற்கு அல்லாஹ்வை நீ பார்ப்பது போல் அவனை வணங்க வேண்டும். நீ அவனைப்பார்க்கா விட்டாலும் அவன் உன்னைப் பார்க்கிறான் என்று நபி(ஸல்) பதில் கூறினார்கள்***(அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரழி) நூல்: முஸ்லிம்)***

வணக்க வழிபாடுகளில் இஹ்ஸான் என்றால் இதுதான். ஓர்மை ஒருங்கிணைந்த சிந்தனை ஆகியவற்றுடன் வணங்க வேண்டும். அல்லாஹ் எந்த நற்செயலின் வடிவத்தையும் அளவையும் பார்த்து அங்கீகரிப்பதில்லை. மாறாக அதன் தரத்தையும் சத்தையும் தான் பார்க்கிறான்.

நிறைவான நற்செயல்கள்போல் தோன்றும் செயல்கள் பல உண்மையில் உயிரற்றதாக இருக்கின்றன அதனால் அவற்றை மார்க்கம் பொருட்படுத்துவதில்லை அவை அங்கீகாரம் பெறுவதுமில்லை இதோ அல்லாஹ் கூறுகிறான்:

கவனமற்ற தொழுகையாளிகளுக்குக் கேடுதான் இவர்கள் தம் தொழுகையில் கவனமின்றி இருப்போர் முகஸ்துதிக்காகவே தொழுகின்றவர்கள் ***(107:4,5,6)***

நபி(ஸல்)அவர்கள் நோன்பை பற்றி இப்படி சொன்னார்கள்: தீய சொற்களையும் தீய செயல்களையும் கைவிடாமல் நோன்பு நோற்பவர் தமது உணவையும் பானத்தையும் விடுவதில் அல்லாஹ்வுக்கு எந்த தேவையுமில்லை ***(அறிவிப்பாளர் அபூ ஹுரைரா(ரழி) நூல்:புஹாரீ)***

நபி(ஸல்) கூறினார்கள்: எவ்வளவோ நோன்பாளிகளுக்கு அவர்கள் பசித்திருந்ததைத்தவிர வேறு எதுவும் நன்மை இல்லை. இரவு வணக்கத்தில் ஈடுபட்ட எவ்வளவோ பேருக்கு அவர்கள் விழித்திருந்ததைத்தவிர வேறு எதுவும் நன்மை இல்லை ***(நூல்: இப்னுமாஜா, நஸயீ, இப்னு ஹுசைமா)***

அல்லாஹ் கூறுகிறான்: வணக்க வழிபாட்டை அல்லாஹ்வுக்காக மட்டும் அமைத்துக் கொள்ளவே அவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர் **(98:5)**

அண்ணல் நபி(ஸல்) கூறினார்கள்: செயல்களெல்லாம் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன. ஒவ்வொருவருக்கும் அவர் எண்ணியதே கிடைக்கும். யார் அல்லாஹ்வுக்காகவும் அவனின் தூதருக்காகவும் தியாகப்பயணம் மேற்கொண்டாரோ அவர் அல்லாஹ்வுக்காகவும் அவனின் தூதருக்காகவும் தியாகப்பயணம் மேற்கொண்ட (கூலியைப் பெறு)வார். யார் உலகத்தை அடையவும் பெண்ணைத் திருமணம் செய்யவும் தியாகப்பயணம் மேற்கொள்கிறாரோ அவரின் தியாகப்பயணம் அதற்கென அமையும். (அதனையே அவர் அடைவார்) **(அறிவிப்பாளர்: உமர்(ரழி) நூல்: புஹாரீ, முஸ்லிம்)**

இப்படியெல்லாம் எண்ணங்கள் பெரும் முக்கியத்துவம் பெறுவதனால் தான் இஸ்லாமிய அறிஞர் பெருமக்கள் இந்த ஹதீஸை முக்கியமான நபிமொழியாகப் பதிவு செய்கின்றனர் இமாம் புஹாரி அவர்கள் தமது பிரபல ஹதீஸ் தொகுப்பில் முதல் ஹதீஸாக இதைப் பதிவு செய்துள்ளார்கள்

இது இஸ்லாத்தின் கால்பகுதி என்றும் மூன்றில் ஒரு பகுதி என்றும் அறிஞர்கள் கூறுவதற்குக் காரணம் எல்லாச் செயல்களும் அல்லாஹ்விடம் அங்கீகாரம் பெறவேண்டு மானால் அதற்கு நல்ல நிய்யத் எண்ணம் அவசியம் என்பதால்தான்.

மார்க்கத்தில் கூறப்படாத புதிய செயலை (பித்அத்)ஐ யார் செய்தாலும் அது புறந்தள்ளப்படவேண்டும் ஏனெனில் நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்: நம்முடைய இந்த மார்க்கத்தில் இல்லாத புதிய செயலை ஒருவன் செய்தால் அது மறுக்கப்படும் **(அறிவிப்பாளர்: ஆயிஷா (ரழி) நூல்: முஸ்லிம்)**

ஆக ஒரு செயல் சமுதாயத்தின் அங்கீகாரத்தை பெற வேண்டுமானால் மார்க்கம் கூறிய செயலாக இருக்கவேண்டும் ஒரு செயல் அல்லாஹ்விடம் அங்கீகாரம் பெறவேண்டுமா னால் அது உளத்தூய்மையுடன் நல்ல எண்ணத் துடன் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதே அவ்விரு நபிமொழிகளும் கூறும் பாடம்.

இறைநேசர் ஃபுளைல் பின் இயாழ்(ரஹ்)விடம் ஒருவர் அழகிய செயல் என்று அல்லாஹ் குர்ஆனில் **(18:7, 67:2, 11:7)** கூறும் அழகிய செயல் எது என்று கேட்டார். அதற்கு எந்த செயல் நேர்த்தியாகவும் உளப் பூர்வமாகவும் செய்யப்படுகிறதோ அதுவே அழகிய செயல். இவ்விரண்டில் எது இல்லா விட்டாலும் அந்த செயல் அழகிய செயல் அல்ல. ஏற்புக்குரியதுமல்ல. அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் நோக்கத்தில் செயல் படுவதே உளப்பூர்வமாக செய்வதாகும். நபி(ஸல்)சொன்ன வழியில் செயல்படுவதே நேர்த்தியாகச் செய்வதாகும் என்று ஃபுளைல் பின் இயாழ்(ரஹ்) பதில் அளித்தார்கள்.

அல்லாஹ்வோ அவனின் திருத்தூதரோ கட்டளையிடாத ஒரு செயலை ஒருவன் மார்க்கத்தின் பெயரால் செய்தால் அதை சமுதாயம் புறக்கணிக்க வேண்டும் அல்லாஹ்வோ ரசூலோ கூறிய செயலை உளத்தூய்மையின்றிச் செய்தால் அதை அல்லாஹ் புறக்கணித்து விடுவான் எனவே எந்த செயலையும் நேர்த்தியாகவும் செய்யவேண்டும் உளப்பூர்வமாகவும் செய்ய வேண்டும்

இதை வலியுறுத்தும் நபிமொழிகள் ஏராளம் உள்ளன. நபி(ஸல்) கூறினார்கள்: ஒரே அடியில் ஒருவர் ஒரு பல்லியைக் கொன்றால் அவருக்கு நூறு நன்மை கிடைக்கும். இரண்டாவது அடியில் கொன்றால் நூறை விடக் குறைவான நன்மையும். மூன்றாவது அடியில் கொன்றால் அதைவிடக் குறைவான நன்மையும் கிடைக்கும் **(அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரழி) நூல்: முஸ்லிம்)**

பல்லியைக் கொல்வது ஒரு சிறிய வேலை தான் அதைக்கூட நேர்த்தியுடன் செய்து முடித்திட வலியிறுத்துகிறது என்றால் எல்லாச் செயல்களையும் அதற்குரிய ஒழுங்குடன் முறைப்படி செய்வதையே இஸ்லாம் விரும்புகிறது.

கொல்வதாக இருந்தால் கூட அழகிய முறையில் கொல்லுங்கள் **(நூல்: முஸ்லிம்)** இந்த ஹதீஸ் கூறுவதென்ன? விரைவாக உயிரைப் பறித்துவிட்டால் கொல்லப்படுபவர் மனிதனோ மிருகமோ யாராக இருப்பினும் சித்ரவதையின்றி விஷயம் முடிந்துவிடுமல்லவா?

எனவே எந்தச் செயலும் அது எவ்வாறு செய்யப்பட்டுள்ளது என்பதே முக்கியம்

எத்தனை முறை செய்யப்பட்டுள்ளது என்பதை விட.

இதுபோலத்தான் மனிதர்களும் எத்தனை ஆண்டு உயிர்வாழ்ந்தான் என்பது முக்கியமல்ல. எப்படி வாழ்ந்தான் என்பதில் தான் அவனது மரியாதை இருக்கிறது.

சிலபேர் நீண்ட நெடிய காலம் வாழ்ந்திருப்பான். அவனால் ஒரு நன்மையும் விளைந்திருக்காது. சிலர் குறைவான காலம் வாழ்ந்தாலும் நேர்த்தியுடன் செய்யப்பட்ட நற்செயல்களால் அவர்களது வாழ்க்கை ஜொலிக்கும்.

இதோ இப்னு அதாவுல்லாஹ்வின் தத்துவ வரிகள்: நெடுங்காலம் வாழ்ந்த பலரால் ஒரு சமூகம் பெற்ற பலன்கள் குறைவு. குறைவான காலம் வாழ்ந்த பலரால் சமூகம் பெற்ற பலன்கள் அதிகம். யாருடைய ஆயுளில் அல்லாஹ் பரக்கத் அருள்வளம் பொழிந்து விட்டானோ அவர் குறைவான காலத்தில் அல்லாஹ்வின் ஏராளமான அருள்களைப் பெறுவார் வார்த்தைகளால் அதை வடிக்க முடியாது. விரல்களால் அதை சுட்டிக் காட்டவும் இயலாது. அவ்வளவு தாராளமான அருள் கிடைத்துவிடும்.

நம் தலைவர் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களை விட இதற்கு இன்னோர் உதாரணம் வேண்டுமா?

ஓர் இறைத்தூதராக அவர்கள் வாழ்ந்தது வெறும் இருபத்து மூன்றாண்டுகள் மட்டுமே. அதில் எவ்வளவு சாதனைகள்.

மாபெரும் மார்க்கத்தை உலகில் நிறுவினார்கள். சிறந்த சமுதாயத்தை உருவாக்கினார். மனிதர்களை புனிதர்களாக வார்த்தெடுத்தார்கள். நீதியானதோர் அரசை நிலைநாட்டினார்கள். இறை மறுப்பாளர்களின் சிலை வணக்கத்தை வென்றார்கள். சதிகார யூதர்களை வீழ்த்தினார்கள். இறைவேதத்துக்கு அடுத்தபடியான சுன்னாவை அழகிய வாழ்க்கை வழிமுறையை வழங்கினார்கள். ஆஹா எவ்வளவு சாதனைகள் குறுகிய காலத்தில்.

இரண்டரை ஆண்டுகள் மட்டுமே ஆட்சிப் பொறுப்பில் வீற்றிருந்த கலீஃபா அபூபக்ர் சித்தீக்(ரழி)யவர்கள் சாதித்த சாதனைகள் சாதாரணமானவையா?

போலி நபிகளாகத் தோன்றிய பொய்யர்களை ஒழித்துக் கட்டினார்கள். மதம் மாறிச் சென்றவர்களை மீண்டும் இஸ்லாத்தின் அரவணைப்புக்குள் வரவைத்தார்கள். அறியப்பட்ட உலகின் இருபெரும் வல்லரசுகளான ரோம் பாரசீகம் ஆகிய நாடுகளுக்கு எதிராக படையை அனுப்பினார்கள். ஸகாத் ஐ தர மறுத்தோரை ஒழுங்குபடுத்தினார்கள். செல்வந்தர்களின் செல்வங்களில் ஏழைகளுக்குரிய பங்கை உரிமையை பேணிப் பாதுகாத்தார்கள்.

ஏழைகளின் நலனுக்காக தம் சொந்தக்குடி மக்களுக்கு எதிராகவே யுத்தம் செய்திடத் துணிந்த ஓர் அரசு உலக வரலாற்றில் உண்டென்றால் அது இஸ்லாமிய அரசு தான் என்ற பெருமையை இஸ்லாத்துக்குப் பெற்றுத் தந்தார்கள்.

பத்து ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த கலீஃபா உமர்(ரழி) அவர்களின் சாதனைகளை அடுக்கினால் ஏடுகள் கொள்ளாது. நாட்கள் போதாது

பல நாடுகளை வென்றார்கள். மக்களிடம் ஆலோசனைகள் கேட்டு இயங்கும் நீதியான அரசுக்கு அடிகோலினார்கள். தமக்குப்பின்னர் வரும் தலைமுறைக்கு அழகிய வழிகளை அறிமுகப்படுத்தினார்கள். அவ்வலிய்யாத்து உமர் ( உமர் அறிமுகப்படுத்திய சாதனைகள் ) என்ற பெயரில் வரலாற்றில் என்றும் வாழும் சாதனைகளைப் படைத்தார்கள்

குடிமக்களிடையே கூட்டுப் பொறுப்புணர்வை ஏற்படுத்தினார்கள். மார்க்கத்தின் அடிப்படை நோக்கங்களுக்கு முரண்படாமல் மக்கள் நலப்பணிகளுக்கு முன்னுரிமை தந்தார்கள். பொதுமக்களை காப்பதில் அரசின் பணி என்ன? அரசுக்கு பொதுமக்கள் செய்ய வேண்டியது என்ன என்பதை தெளிவுப்படுத்தினார்கள்.

அரசை வழிநடத்தவும் விமர்சிக்கவும் மக்களுக்கு முழு சுதந்திரம் தந்தார்கள். குடிமக்களே அரசை வழி நடத்த தேவையான ஆலோசனைகளையோ அரசு தவறிழைத்தால் அரசு மீது விமர்சனங்களையோ நீங்கள் சொல்லாமல் மவுனமாக இருந்தால் உங்களிடம் எந்த நன்மையுமில்லை. அதைக் கேட்காமல்

இருந்தால் எம்மிடம் எந்த நன்மையும் இல்லை என்றார்கள்.

உலகத்தின் சுகபோக வாழ்வில் நாட்டமின்றி சமத்துவம் சமநீதி இவற்றை நிலைநாட்ட வலிமையைப் பிரயோகித்தார்கள். இதற்காக தம் கவர்னர்களையும் அவர்களின் பிள்ளைகளையும் கூட கண்டிக்க தண்டிக்க தயங்கவில்லை

உமர் பின் அப்துல் அஸீஸ்(ரஹ்) முப்பது மாதங்கள் மட்டுமே கலீஃபாக இருந்தார். பாழ்பட்டுப்போன நீதியை புதைந்துபோன நேர்வழியை மீட்டார். அநீதிகளையும் வழிகேட்டையும் புதைத்தார். மனித உரிமைகளை மக்களுக்குப் பெற்றுத்தந்தார். மக்களிடமிருந்து பறிபோன இஸ்லாத்தின் இனிய பண்புகளை மீட்டார். அச்சத்திலிருந்தும் பசியிலிருந்தும் குடிமக்களை விடுவிடுத்தார்.

இஸ்லாமிய ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பெங்கும் செல்வம் பெருகிற்று. இவரின் ஆட்சியில் ஸகாத்-ஐ கொடுப்பதற்கு ஆள்கள் இருந்தனர். பெறுவதற்கு எவருமில்லையே என்று கொடுப்போர் கவலைப்பட்டனர். அப்படி ஒரு ஆட்சியைத்தந்தார் முப்பதே மாதங்களில்

பேரறிஞர் இமார் ஷாபிஈ(ரஹ்) வாழ்ந்தது (ஹிஜ்ரி 150-204) ஐம்பத்து நான்கு ஆண்டுகள் தான். ஏராளமான கல்வி ஞானத்தை தம் அடுத்த தலைமுறைக்கு விட்டுச் சென்றார்கள் தம் சொத்தாக.

இமாம் கஸ்ஸாலி (ரஹ்) வாழ்ந்ததும் (ஹிஜ்ரி 450-505) ஐம்பத்து நான்கு ஆண்டுகள் தாம். அறிவுத்துறையில் பெரும்புரட்சிகளை செய்தார்கள். அவரின் நூல்கள் இந்த சமுதாயத்தின் மாபெரும் செல்வம்.

அறிஞர் இமாம் நவவீ (ஹிஜ்ரி 631-676) வாழ்ந்தது நாற்பத்தி ஐந்து ஆண்டுகள் தான். இவர்கள் சட்டத்துறையிலும் ஹதீஸ்கலையிலும் பதித்த தடங்கள் ஆழமானவை. இவர்கள் எழுதிய அர்பஈன் முஸ்லிம் நூலுக்கு விரிவுரை சட்டத்துறையில் மின்ஹாஜ், ரவ்ளத்துத் தாலிபீன், மஜ்மூஉ, இதன்றி தஹ்தீபுல் அஸ்மா, வல்லுகாத். இவைமட்டுமா இன்னும் எவ்வளவோ நூல்கள் சமுதாயத்தின் பெரும் பொக்கிஷம் அல்லவா?

இவர்கள் மட்டுமா இப்னுல் அரபீ, சர்கசீ, இப்னுல் ஜவ்சீ, இப்னுகுதாமா, கராஃபீ, இப்னுதைமிய்யா, இப்னுல் கய்யிம், ஷாத்பீ, இப்னு கல்தூன், இப்னு ஹஜர், இப்னுல் வசீர், இப்னுல் ஹுமாம், சுயூத்தி, தஹ்லவீ, ஷவ்கானீ (அனைவர் மீதும் அல்லாஹ்வின் அருள் நிலவட்டுமாக) இன்னும் ஏராளமான மேதைகள் இப்பாருலகை தம் ஞானத்தால் அறிவுத்திறனால் நிரப்பினார்கள் அல்லவா? எண்ணிப்பாருங்கள் எவ்வளவு பெரிய சாதனை.

இறந்தும் வாழ்வோர் சிலர். உயிருடன் வாழ்ந்தும் மரணித்துப் போனவர்களாகி விட்டோர் பலர். தம் அறிவுத் திறனால் சாதனைகள் படைத்து திறமையானவர்களை உருவாக்கி வரலாற்றில் என்றும் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றனர் சிலர்.

இப்படிப்பட்ட வரலாற்று நாயகர்கள் தேவையா? கூட்டத்தோடு கும்பலாக வாழ்ந்து மரணித்து மறைந்து மண்மூடிப் போனவர்கள் தேவையா? இவர்களில் யார் முக்கியமானவர்கள். முதன்மையானவர்கள்

..........தொடரும்:

**தமிழ் வடிவம்: இல்யாஸ் ரியாஜி**

---

**8ம் பக்க தொடர்ச்சி**

எனினும் இந்த மூன்றாவது வகையினர் பற்றி திருமறை குர்ஆன் எதுவும் கூறவில்லை. ஏனெனில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ கூட நன்மையை ஏவி தீமையைத் தடுக்கவில்லை. மவுனிகளாக முடங்கிக் கிடந்துவிட்டதால் அவர்களைப் பற்றியும் குர்ஆன் மவுனமாக இருப்பது சரியானதாகி விட்டது. அவர்கள் தண்டனைக்குரியவர்களாக ஆகாவிடினும் சரியே.

**(நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)**

அல்லாஹ் எல்லாம் அறிந்தவன். (இன்ஷா அல்லாஹ் தொடரும்)

# அமெரிக்க முஸ்லிம்களின் இன்னொரு சாதனை

உலகை உலுக்கிய நிகழ்வு 2001இல் செப்டம்பர் 11 ஆம் ஆண்டு அமெரிக்காவின் இரட்டை கோபுரங்களை தகர்த்து தரைமட்டமாக்கிய நிகழ்வு. 9/11 என இதனை அடையாளப்படுத்துகின்றன ஊடகங்கள்.

இதற்கு இஸ்லாமும் முஸ்லிம்களும் பழிசுமத்தப்பட்டார்கள் உலகெங்கும். ஆனால் அமெரிக்க முஸ்லிம்கள் சற்றும் தலை தாழ்ந்திடவில்லை.

காரணம் அவர்கள் நன்றாக அறிவார்கள். அஃது, யூத அமெரிக்க உளவுத்துறைகளின் உள்ளிருப்பு வேலைகள்தாம் என்பதை.

அமெரிக்கா இந்த காரணங்காட்டி உலகெங்கும் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் முஸ்லிம் நாடுகள் மீதும் ஒரு பெரும் போரைத்தொடுத்து வருகின்றது. கடந்த பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாக.

ஆனால் அமெரிக்க முஸ்லிம்கள் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட இடத்தில் ஒரு பெரும் மஸ்ஜித்-ஐ (பள்ளி வாசலை) கட்டி முடிப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்தார்கள்.

9/22 (2011 அன்று) பத்து ஆண்டுகள் பதினொரு நாட்கள் முடிவடைந்த நிலையில் அந்த இடத்தில் ஒரு பள்ளிவாசலை திறந்து அதில் தொழவும் செய்தார்கள்

இஃது இன்று Ground Zero கிரவுண்ட் ஜீரோ பள்ளிவாசல் என வழங்கப்படுகின்றது. இந்த இடத்தில் இப்போது 13 மாடி கட்டடம் ஒன்று வரவிருக்கின்றது.

இந்த Ground Zero என்ற பெயரை 2001 செப்டம்பர் 11 ஆம் நாள் தகர்க்கப்பட்ட இரண்டு கோபுரங்களையும் அதில் இறந்த வர்களையும் நினைவுகூருவதற்கு, அமெரிக்கா தான் வைத்தது. இதை இஸ்லாமிய தீவிரவாதத்தின் அடையாளமாகக் காட்டிடவும் முடிவு செய்தது. பிரச்சாரங்களைச் செய்து வருகின்றது.

இந்த இடத்தில் வருடந்தோறும் செப்டம்பர் திங்கள் 11ம் நாள் இறந்தவர்களுக்கு அஞ்சலி என்ற பெயரில் மெழுகுவர்த்திகளைக் கொழுத்துவதையும் ஒரு வழக்கமாக கொண்டு வருகின்றது.

ஆனால் அந்த இடம் இனி முஸ்லிம்கள் தினமும் ஐந்து நேரமும் தொழுகையை நிறைவேற்றிடும் இடமாக ஆக்கப்பட்டு விட்டது.

எத்தனையோ எதிர்ப்புகளையும் தடைகளையும் கொண்டு வந்து குறுக்கே நின்றார்கள் அமெரிக்கர்கள். அத்தனை யையும் தாண்டினார்கள் முஸ்லிம்கள்.

எதிர்த்தவர்களால் இயன்றதெல்லாம் செப்டம்பர் 11 (9/11) அன்றே திறக்க இருந்த பள்ளிவாசலின் திறப்பை பதினோரு நாட்கள் தள்ளிப்போட்டது தான். அதற்கு மேல் ஒன்றும் இயலவில்லை. 9/11 அன்று வென்று காட்டினார்கள் முஸ்லிம்கள். இன்னும் விளக்கமாக அறிந்திட பார்க்க வைகறை வெளிச்சம்

இப்போது இந்த ரமளானில் இன்னொரு சாதனையை நிகழ்த்தி இருக்கின்றார்கள்.

அது முர்ஃபிர்றிஸ்போரோ என்னுமிடத் தில் ஒரு பள்ளிவாசலைத் திறந்திருக்கின்றார்கள். பல நூறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் அமெரிக்காவிலுள்ள இந்த இடத்தில் குறிப்பாக இந்த முர்ஃபிர்றிஸ் போரோ என்னுமிடத்தின் மையப்பகுதியாகிய டென்னீஸ் நகரில் ஒரு பள்ளிவாசலைத் திறந்திருக்கின்றார்கள்.

இங்கே ஈராக்கிலிருந்து இடம் பெயர்ந்து வந்து வாழும் முஸ்லிம்களும் எகிப்திலிருந்து இடம் பெயர்ந்து வந்து வாழும் முஸ்லிம்களும் சிரியாவிலிருந்து இடம் பெயர்ந்து வந்து வாழும் முஸ்லிம்களும் அமெரிக்காவில் இஸ்லாத்தை

ஏற்றுக் கொண்ட முஸ்லிம்களும் ஒரு பெரும் முஸ்லிம் சமுதாயமாக வாழ்ந்து வருகின்றார்கள்.

ஆனால் இவர்கள் இஸ்லாத்தின் ஆரம்ப கடமையும் அடிப்படைக் கடமையுமான தொழுகையை நிறைவேற்றிட இயலவில்லை.

அவர்கள் இஸ்லாமிய மையம் இஸ்லாமிக் சென்டர் என்றொன்றை அமைத்து அதன் தலைமையகத்திலேயே தொழுது வந்தார்கள்.

இந்த இஸ்லாமிய மையத்தையே அவர்கள் தங்களுடைய ஜமாஅத்தாக ஆக்கிக் கொண்டார்கள்.

இந்த ஜமாஅத்இன் கீழ் ஒரு பள்ளி வாசலை அமைத்திட வேண்டும் என முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

ஆனால் அதற்கு அங்கே ஆயிரம் தடைகளை வெட்டிப் போட்டார்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருந்த முர்பிரீஸ் ஃபாரோ என்ற சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்.

வரும் செய்திகளைப் படிக்கின்ற போது இந்த முர்ஃபிரீஸ் பாரோ என்ற சமுதாயத்தைச் சார்ந்தவர்களை யாரோ தூண்டி விட்டிருக்கின்றார்கள் என்றே படுகின்றது.

காரணம் முர்ஃபிரிஸ்பாரோ என்ற இந்த சமுதாயத்தவர்கள் இன்றளவும் முஸ்லிம்களுக்கெதிராக எதையும் செய்ததில்லை. செய்யும் எண்ணத்திலு மில்லை.

இன்னும் சொன்னால் அவர்கள் முஸ்லிம்களோடு சிறந்த உறவையும் உற்றத் தோழமையும் கொண்டவர்களாக இருந்து வந்தவர்கள்.

முஸ்லிம்கள் இவர்களைப் பற்றிச் சொல்லிடும் போது அவர்கள் எப்போதும் ஒரு வரவேற்கும் சமுதாயமாகவே இருந்தார்கள் என்றே குறிப்பிடுவார்கள்.

ஆனால் பள்ளிவாசலை எதிர்ப்பதில் அவர்கள் அபார வேகத்தோடு செயல் பட்டார்கள்

இரண்டாண்டுகளாகப் பள்ளி வாசலைக் கட்டுவதை நிறுத்திட போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் என்றெல்லாம் அந்தப் பகுதிகளை அல்லோல கல்லோலப் படுத்தினார்கள். பள்ளிவாசலை எழுப்பும் சஃபஃலீ ஃபாத்தி நான் இங்கே முப்பது ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றேன். எங்களுக்கும் (முஸ்லிம்களுக்கும்) இந்த முர்ஃபிறிஸ் சமுதாயத்திற்குமிடையில் எந்தப் பிரச்சனையும் வந்ததில்லை. இரண்டு ஆண்டுகளாகத் தான் அவர்கள் எங்களுக்கு எல்லாப் பிரச்சனைகளையும் உருவாக்கினார்கள் என்கிறார்.

அமைதியாக சமூகமாக உறவோடு வாழ்ந்த சமுதாயம் பள்ளிவாசலைக் கட்டும் பணிக்காக வந்த கட்டடப் பொருள்களைக் கொள்ளையடித்தார்கள். சில பல நேரங்களில் அந்த லாரிகளையே கடத்திச் சென்றார்கள்.

கலவரங்களை உருவாக்கி மஸ்ஜித் கட்டினால் பெரும் கொந்தளிப்பு எழும், சட்டம் ஒழுங்கு கெடும் என எச்சரித்தார்கள்.

ஆனாலும் முஸ்லிம்கள் தளரவில்லை. தங்கள் முயற்சிகளை முன்னெடுத்துச் சென்றார்கள்

நீதி மன்றங்களுக்குச் சென்றார்கள். நீதிமன்றத்தில் பயங்கரமானதொரு வாதத்தை முன்வைத்தார்கள் முர்ஃபிறிஸ் சமுதாயத்தினர். அஃது முஸ்லிம்கள் மத சுதந்திரப் பெறுவதற்கு தகுதியற்றவர்கள். அவர்களின் மத சுதந்திரத்தைப் பாதுகாத்திட இயலாது. தேவையுமில்லை. காரணம் முஸ்லிம்கள் அமெரிக்காவின் அரசியல் நிர்ணயச் சட்டத்தை மாற்றிவிட்டு அந்த இடத்தில் “ஷரீயா” சட்டத்தைக் கொண்டு வந்திட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இப்படி ஒரு வாதத்தை வைத்தார்கள் அல்லாமல் அவர்களால் எந்த சாட்சியத்தை யும் நீதிமன்றத்தில் வைத்திட இயலவில்லை. இதனால் நீதிமன்றம் அவர்களுடைய வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை நிராகரித்து விட்டது பள்ளிவாசலைக்கட்டிட அனுமதி அளித்துவிட்டது.

முஸ்லிம்கள் மெத்த சிரமத்தோடு பள்ளிவாசலை கட்டி முடித்துவிட்டார்கள்.

ஆனால் கட்டி முடித்த பள்ளிவாசலை முஸ்லிம்களால் திறந்திட இயலவில்லை. காரணம் பள்ளி வாசலை திறக்கவிடக் கூடாது என கங்கணம் கட்டிச் செயல்பட்டவர்கள் நீதிமன்றத்திடம் ஒரு ஸ்டே (தடையை) ஐ வாங்கிவிட்டார்கள்.

*முஸ்லிம்கள் இப்போது அதற்கெதிராகப் போராடிட வேண்டியவர் களானார்கள்.*

*கிஞ்சிற்றும் தளராமல் நீதிமன்றத்தில் தங்கள் போரைத் தொடர்ந்தார்கள்.*

*பள்ளிவாசல் இரகசியமாகக் கட்டப்பட்டுவிட்டது போதிய அளவுக்கு பொதுவிவாதங்கள் நடக்கவில்லை என்று கூறியே திறக்க தடை விதித்தது நீதிமன்றம்*

*முஸ்லிம்கள் போதிய அளவுக்கு விவாதங்களை நடத்தவே செய்தார்கள்.*

*ரமழான் மாதத்தில் தொழுகைக்கு இடமில்லை. ஆதலால் நாங்கள் சாலைகளில் தொழவேண்டியது வரும் அப்போது பொது விவாதங்கள் மட்டுமல்ல பொது வருத்தங்களும் வழக்குகளும் வரும் என முரட்டுவாதம் ஒன்றை முன் வைத்தார்கள் அப்போதுதான் நீதிபதிகளின் கண்கள் திறந்தன.*

*உடனேயே பள்ளிவாசலைத் திறக்க விதிக்கப்பட்டிருந்த தடையை அகற்றினார்கள்.*

*ரமளானில் பள்ளிவாசல் திறக்கப்பட்டது.*

*இத்தனை போரையும் முன்னே நின்று நடத்தியவர்களுள் ஒருவர் மாட்முல்லர் என்பவர். அவர் அண்மையில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்.*

*இப்போதெல்லாம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களைக் கொண்டே அல்லாஹ் இஸ்லாத்திற்கு அதிகமாக வேலைகளை வாங்குகின்றான். அதில் நிறைவையும் தருகின்றான்.*

**பெண்களின் பங்கு**

*இந்தப்பள்ளிவாசலை நிறுவுவதிலும் அதனை கட்டிமுடிப்பதிலும் ஏற்பட்ட எதிர்ப்புகளை எதிர் கொள்வதில் பெண்கள் காட்டிய ஆர்வம் வீரமும் அலாதியானது.*

*ஒரு பெட்ரூம் படுக்கை அறைக்குள் தொழுது கொண்டிருந்தோம். இப்போது 12,000 சதுர அடியிலுள்ள பெரிய பள்ளியில் தொழவிருக்கின்றோம் என்கிறார் 10 கிலோ மீட்டர் தனது காரை ஓட்டிகொண்டு வந்து குடும்பத்தோடு இரவு தொழுகைகளில் கலந்து கொள்ளும் அமீராபாத்திமா என்ற பெண்மணி.*

**- எம்.ஜி.எம்**


# சென்னை புத்தக கண்காட்சி 2013

எதிர்வரும் ஜனவரி 11ம் தேதி முதல் 23ம் தேதி வரை சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடைபெற உள்ளது.

ஆர்.எஸ்.டி (RSD) வீடியோ நிறுவனம் இவ்வாண்டு முதன்முதலாக இதில் இடம் பெற உள்ளது. (கடை எண் 159)

**வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்கள் ஆற்றிய உரைகளின் சிடிக்கள் (CD) மற்றும் டி.வி.டிக்கள் (DVD) இக்கடையில் கிடைக்கும்.**

சூரத்துல் ஃபாத்திஹா, சூரத்துல் பகரா விரிவுரை, ஸஹாபி பெண்மணிகள் வரலாறு, நாம் பிரிந்துவிடவேண்டாம், அண்ணல் நபியின் அரிய பொன் மொழிகள், வழிகாட்டும் வான்மறை, குர்ஆன் கூறும் ஆற்றல், மாநபி மொழிந்த முன்னறிவிப்புகள் இன்னும் பல தலைப்புகளில் மௌலானா இல்யாஸ் ரியாஜி ஆற்றிய உரைகள் கிடைக்கும்.

இதர அறிஞர்கள், ஆலிம்கள் ஆற்றிய உரைகளும் கிடைக்கும்.

RSD VIDEO
SHOP NO 159

# அளவை மிஞ்சிய அநீதி
# மதானியின் பார்வையைப் பறித்து விட்டார்கள்...



பெங்களூர் சிறையில் அடைப்பட்டு கிடக்கின்றார் நாசர் மதானி அவர்கள். □.□.சசி திரைப்பட தயாரிப்பாளர் அரசியல் விற்பன்னர். அண்மையில் அவர் எழுதி, பல பத்திரிக்கைளிலும் வெளிவந்த செய்தி அறிக்கை ஒன்று அனைவரின் கண்களையும் கலக்கிற்று. அதனை இங்கே தருகின்றோம்.

“நான் அப்துல் நாசர் மதானி அவர்களை பெங்களூர் சிறையில் சந்தித்தேன். அவர் ‘பெங்களூர் குண்டு வெடிப்பு’ என்று அழைக்கப்படும் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருடைய கண்களின் அமைதி என் இதயத்தில் பேரிடியாய் வீழ்ந்தது. அவருடைய கண்கள் பார்வையை வேகமாக இழந்து வருகின்றன. காரணம் போதிய அளவு மருத்துவம் அவருக்குக் கிடைக்கவில்லை

நான் பல முறை அவரை சந்தித்திருக்கின்றேன். அவரது கண்களின் கதை எனக்குத்தெரியும்

என்னைப் பொறுத்தவரை அவருடைய கண்கள் இஸ்லாமிய அபாயம் என்பதற்கும் மத சார்பின்மை கேரளாவில் எப்படிக் கடைப்பிடிக்கப் படுகின்றது என்பதற்கும் அத்தாட்சிகள்.

என்னால் அவருக்குச் சொல்ல முடிந்த ஆறுதல் எல்லாம் என்னைப் போன்றவர்கள் உங்களுக்கு என்ன செய்யமுடியும்? இந்த கேள்விக்கு “நான் மட்டுந்தான் இந்த கதிக்கு ஆளாகி இருக்கின்றேன் என எண்ணாதீர்கள். ஆயிரக்கணக்கான அப்பாவிகள் பொய் வழக்குகளில் சிக்க வைக்கப்பெற்று சிறையில் மெல்ல மெல்ல செத்துக் கொண்டிருக்கின்றார்கள். சில நேரங்களில் எனக்கு சிதறிய சிறிய ஆதரவுகள் அவ்வப்போது கிடைத்து விடுகின்றது.

இதற்கோர் எடுத்துக்காட்டையும் எங்கள் கண்களின் முன்னாலேயே காட்டினார்கள். ஆமாம் அவருடைய தள்ளும் நாற்காலியைத் தள்ளிச் சென்று உதவிசெய்யும் ஒருவர் மூலம் ஜக்கரிய்யா என்பவரை எங்களுக்குக் காண்பித்தார். இந்த ஜக்கரிய்யா 21 ஆண்டுகளாக சிறையில் இருக்கின்றான். இந்த ஜக்கரிய்யாவின் கதை இந்தியாவின் நீதித்துறையின் மிகவும் கேவலமான அத்தியாயம். அவனுக்கு ஏன் அவன் சிறையில் இருக்கின்றான் என்பது தெரியாது. சிறையில்

தொடர்ந்து நடக்கும் கொடுமைகளால் அவன் உடலாலும் உள்ளத்தாலும் சிதைந்து போனான்.

அதேபோல் மதானியின் தள்ளும் நாற்காலியைத் தள்ளிச் செல்பவன், ஏற்கனவே நடமாடும் பிணமாக ஆகிப் போனான். அவனுக்கும் போதிய மருந்து கிடைக்காததே காரணம் என நான் கேள்விப்பட்டேன். தொடர்ந்து கேரளாவிலுள்ளவர்கள் ஒரு வேளை அவருடைய மரணத்திற்காகக் காத்திருக்கின்றார்களோ என எண்ணிடத் தோன்றுகின்றது. அவர் இறந்தவுடன் அவர்கள் அவரை ஒரு பெரும் தியாகியாகக் காட்டி தங்கள் அரசியல் ஆட்டத்தை ஆடிடத் தொடங்கி விடுவார்கள்.

கோவை சிறையில் மதானியை 9 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து சிறையில் வைத்த பின்பே அப்பாவி எனக் கண்டு பிடித்தார்கள்.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அறிஞர்கள் சமூக ஆர்வலர்கள் அரசியல் கட்சிகள் ஒரு தலைப்பட்சமாக நடந்து கொள்ளும் ஊடகங்கள் இவைதாம் மதானி மீது கற்பனை வழக்குகளைப் புனைவதற்குக் காரணம்.

நாமெல்லாம் ஜாண்லிலோன் என்பவரின் பாட்டு ஒன்றை மீண்டும் மீண்டும் பாடுவோம். அதிசயதக்க அளவில் மதானியும் நான் மட்டுமல்ல என்பதைச் சொல்லிக் கொண்டே இருக்கின்றார். அன்பார்ந்த வாசகர்களே! நம்புங்கள் நாசர் மதானியின் மேல் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் அனைத்தும் பொய். புனையப்பட்டவை.

ஆனால் அவர் சிறை, சித்திரவதை இவற்றாலேயே தான் இப்போது கண்களையும் சில காலம் கழித்து தன் உயிரையும் இழக்கப்போகிறார்.

கர்நாடகாவில் சிறைகளில் பல முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டு விட்டார்கள். ஆனால் இன்றளவும் அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டார்கள்? ஏன் சிறையிலடைக் கப்பட்டார்கள் என்பது அவர்களுக்கும் சொல்லப்படவில்லை. உலகுக்கும் தெரியாது. ஏன் அவர்களை சிறையிலடைக்க உத்தரவிட்ட நீதிபதிகளுக்கும் தெரியாது. காவல் துறையினர் கொண்டு வந்தார்கள். இவர் மீது சந்தேகம் இருக்கின்றது என்றார்கள். நீதிபதிகள் சிறையிலடைத்தார்கள்.

சங்க பரிவாரத்தவர்கள் அவரது கால்களை குண்டுவீசி கொய்தார்கள். அரசு பரிவாரம் அவரது கண்களைப் பறித்தது காலப்போக்கில் உயிரையும் பறிப்பார்கள். காரணம் அவர் குற்றமற்றவர். ஆனால் முஸ்லிம்.

மதானிகள் ஜக்கரியாக்கள் இவர்களுக்கு வாழ்க்கை மரணத்திற்குப் பின்வரும் மறுமையில் தாம் வாழ்க்கை. அவர்களும் பூமிக்கு மேல் இருப்பதை விட பூமிக்கு கீழிருப்பதையே நாடுகின்றார்கள்.

அல்லாஹ் பிரகடனப் படுத்துகின்றான் "உங்களையுடைய வானத்தின் மீது சத்தியமாக மேலும் சாட்சிகள் மீதும் சாட்சி சொல்லப்படுவதன் மீதும் சத்தியமாக நெருப்புக்குண்டங்களை உடையவர்கள் கொல்லப்பட்டனர்.

விறகுகள் போட்டு எரித்த பெரும் நெருப்புக்குண்டம் அவர்கள் அதன்பால் உட்கார்ந்திருந்த போது அல்லாஹ்வை நம்பி நின்ற மூமின்களை அவர்கள் நெருப்புக் குண்டத்தில் போட்டு வேதனை செய்தார்கள். அதற்கு அவர்களே சாட்சியாக இருந்தார்கள்.

அனைத்தையும் மிகைத்தவனும் புகழுடையோனுமாகிய அல்லாஹ்வின் மீது அவர்கள் ஈமான் கொண்டார்கள் என்பதற்காக அன்றி வேறெதற்கும் அவர்களைப் பழி வாங்கிடவில்லை.

வானங்கள் பூமியின் ஆட்சி அவனுக்கே உரியது. எனவே அல்லாஹ் அனைத்துப் பொருள்களின் மீதும் சாட்சியாக இருக்கின்றான்.

நிச்சயமாக எவர்கள் முஃமினான ஆண்களையும் முஃமினான பெண்களையும் துன்புறுத்திய பின்னர் தவ்பா செய்யவில்லையோ அவர்களுக்கு நரக வேதனை உண்டு (அல்குர்ஆன் 85:1-10)"

அல்லாஹ்விடமிருந்தே வந்தோம் அவனிடமே திரும்புவோம். நாசர் மதானி அவர்களுக்கு இதைவிட பெரிய நம்பிக்கையும் ஆறுதலும் வேறுஇல்லை!

-எம்.ஜி.எம்

# அதிர்ச்சியும் அதிசயமும் நிறைந்த திருக்குர்ஆன் நூலகம்

இஃது டெஹ்ரடூன் இந்தியா எனுமிடத்தில் அமைந்துள்ளது. இது புதிதாக உருவாக்கப்பட்ட உத்திரகாண்ட் மாநிலத்தில் இருக்கின்றது. இந்த நூலகத்தின் பெயர் தாஸ்மியா நூல்நிலையம்.Tasmia Library.

இதில் பல அதிசயமான திருக்குர்ஆன் பிரதிகள் இருக்கின்றன.

1907 ஆம் ஆண்டில் 7 வண்ணங்களில் எழுத்துக்களைக் கொண்ட கையெழுத்துப் பிரதி திருக்குர்ஆன் ஒன்று வெளியிடப்பட்டது. 7 வண்ணங்களில் வெளிவந்த முதல் திருக்குர்ஆன் பிரதி இதுதான்.

இஃது வெளியிடப்பட்ட இடம் லூதியானா. இதனை ஆப்கானிஸ்தான் ஆட்சியாளர் அமீர் அப்துல்லாஹ் கான்பகதூர் அவர்கள் தாம் வெளியிட்டார்கள்.

இங்கே உலோகத்தாலான ஓர் உருண்டை இருக்கின்றது. அதில் திருக்குர்ஆன் வசனங்கள் பொறிக்கப் பட்டுள்ளன. இந்த உலக உருண்டை மன்னர் அப்துல்லாஹ் கான் பகதூர் அவர்களுக்கு மிகவும் அத்தியாவசியமானதாக இருந்தது. காரணம் அவரது ஆட்சியின் எல்லை முகலாய மன்னர்களின் ஆட்சியின் எல்லையை விட விரிந்து பரந்து இருந்தது.

இங்கே ஒரு திருக்குர்ஆன் பிரதி மிகவும் சின்னதாக இருக்கின்றது. சட்டைப் பைக்குள் வைத்துக் கொள்ளலாம்.

இன்னொரு பிரதி ஒரு கரும்பலகை அளவுக்கு அகல நீளங்களை உடைய பக்கங்களை கொண்டது.

ஒரு திருக்குர்ஆன் பிரதியில் ஒரு காகிதத்தின் எடை 2 கிராம் மற்றொரு பிரதியில் ஒரு காகித்தின் எடை 4 கிலோ கிராம். அது துத்தநாகத்தால் ஆன திருக்குர்ஆன் பிரதி. துத்தநாகத தட்டில் திருக்குர்ஆன் வசனங்கள் பொறிக்கப்பட்டு இருக்கும் இந்த திருக்குர்ஆன் பிரதியின் மொத்த எடை 21.2 குவிண்டால்.

மிகவும் ஆச்சர்யப்படத்தக்க திருக்குர்ஆன் பிரதி ஒன்று இந்த நூல் நிலையத்தில் இருக்கிறது. அதில் நறுமணம் எப்பொழுதும் கமழ்ந்து கொண்டே இருக்கும். இதன் எவ்வொரு பக்கத்திலிருந்தும் இந்த நறுமணம் வருகின்றது.

இதில் இன்னும் அனைவரின் புருவத்தையும் அகலவிரியச் செய்யும் விஷயம் என்னவென்றால் இந்தத் திருக்குர்ஆன் பிரதி கடந்த 64 அறுபத்து நான்கு ஆண்டுகளாக அங்கே இருக்கின்றது. எனினும் அதிலிருந்து வரும் நறுமனம் சற்றும் குறைந்திடவில்லை.

அதேபோல் திருக்குர்ஆன் வசனங்கள் தென்னைமர ஓலைகள், மரம், உலோகங்கள், துணிகள், ஆட்டுத்தோல்கள், ஒட்டகைத் தோல், மான்தோல், குதிரைத்தோல், மீன் தோல் இவற்றின் மேலும் எழுதப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

பல மொழிகளில் வெளிவந்த திருக்குர்ஆன் மொழியாக்கங்கள் அங்கே உள்ளன.

உலக மகா அறிஞர்கள் எழுதிய திருக்குர்ஆன் விளக்க உரைகளும் அங்கே அணிகலன்கலாய் அமர்ந்தள்ளன. ஒரு திருக்குர்ஆன் பிரதி இருக்கின்றது அதைத்தொட்டுப்பார்வையற்றோரும் ஓதலாம். (Brailli Print)

விதம் விதமான முசல்லாக்கள் இன்னொரு பகுதியை அலங்கரிக்கின்றன. பல வகை தொப்பிகள் பல பொருள்களில் தோல்களில் கோர்க்கப்பட்ட தொப்பிகள் இவையும் இங்கே இடம் பெறுகின்றன.

சென்ட் இதர வாசனைப் பொருள்களும் வைக்கப்பட்டுள்ளன.

திருக்குர்ஆன் இடம் பெறும் பொருட்கள் spices வேர்கள் மரங்களின் பகுதிகள் இன்னும் இது போல் திருக்குர்ஆனில்

தொடர்ச்சி 27ம் பக்கம்

# வெள்ளை அறிக்கை

திருவாளர் அத்வானி உள்துறை அமைச்சராக இருந்த நாட்களில் தீவிரவாதம் பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கப் போகின்றேன் என மிரட்டினார்.

எத்துணை விரைவாக அறிக்கை சமர்ப்பிக்கப் போகின்றீர்களோ அத்துணை நன்மைகள் விளையும் என்றார்கள் முஸ்லிம்கள். ஆனால் கடைசி வரைக்கும் மிரட்டலில் காலத்தை ஓட்டிவிட்டார்.

இந்தியன் முஜாஹித்தீன் என்றொரு அமைப்பு இருப்பதாக செய்திகள் வந்த போது முஸ்லிம்கள் அதை மறுத்தார்கள். ஆனால் உளவுத்துறையும் காவல் துறையினரும் எடுத்ததற்கெல்லாம் இப்படி ஒரு அமைப்பையே காரணம் காட்டிக் கொண்டிருந்தார்கள். முஸ்லிம்கள் மாநாடு போட்டு அதை எதிர்த்தார்கள்.

அந்த மாநாட்டில் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றினார்கள். அதில் இந்தியன் முஜாஹிதின் பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரினார்கள்.

பார்க்க வைகறை வெளிச்சம்

ஆனால் அந்த வெள்ளை அறிக்கை வெளியே வரவே இல்லை. ஆதலால் முஸ்லிம்களே ஒரு வெள்ளை அறிக்கையைத் தயார் செய்கின்றார்கள்

அது குறித்து தகவல்களை கீழே இடம் பெறச் செய்கின்றோம்.

**வெள்ளை அறிக்கை**

முஸ்லிம்கள பீதியால் நடுங்கிக் கொண்டிருக்கின்றார்கள். காரணம் இளைஞர்கள் எப்போது வேண்டுமானாலும் கைது செய்யப்படலாம் தீவிரவாதி என முத்திரைக் குத்தப்படலாம். அந்த இளைஞர்களின் வாழ்க்கையும் அவர்களின் குடும்பங்களின் வாழ்க்கையும் ஒட்டு மொத்தமாக நசுக்கப்படலாம்.

தீவிரவாதிகள் என்று பொய் வழக்குகளில் முஸ்லிம்களைச் சிக்க வைப்பவர்கள் அரசு இயந்திரம், மத்திய உளவுத்துறை ஐபி, காவல்துறை இவற்றுள் புகுந்துள்ள காவி சிந்தனையில் ஊறியக் கறுப்பாடுகள் தாம்.

இந்தக் கொடுமையை எதிர்த்து நாம் நீண்ட நாள்களாகப் போராடி வருகின்றோம்.

ஆனாலும் இந்தக் கருப்பாடுகள் தங்கள் கைவரிசையைத் தினம் தினம் காட்டி வருகின்றார்கள். இதனால் All India Muslim Mushawarath அகில இந்திய முஸ்லிம் முஷாவரா என்ற அமைப்பு ஒரு வெள்ளை அறிக்கையைத் தயாரித்து வருகின்றது.

சுமார் 600 முதல் 700 பக்கங்கள் வரை உள்ள ஒரு பெரிய அறிக்கையாக அஃது அமையும் (இன்ஷாஅல்லாஹ்)

இதில் TADA தடா சட்டம், பொடா PODA என்ற சட்ட விரோதமாக குழுமுதல் தடை சட்டம் இடம் பெறும். இவற்றில் முஸ்லிம்கள் எப்படியெல்லாம் அலைக்கழிக்கப் பட்டார்கள் என்பவையும் இடம் பெறும். அதேபோல் எதிர் தாக்குதல் என்கவுன்டர் என்ற பெயரில் முஸ்லிம் இளைஞர்களை கொலை செய்வது பற்றிய ஆய்வும் இடம் பெறும் இன்ஷா அல்லாஹ்.

இன்னும் ஒரு படி மேலே போய் மத்திய உளவுத்துறை, காவல்துறை, ஊடகங்களின் மாச்சர்யம், சிமி என்ற இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம், இந்தியன் முஜாஹிதீன் என்ற காட்டுக்கதைகள் இவை பற்றிய நேர்மையான ஆய்வு ஒன்றும் இடம் பெறும் இன்ஷாஅல்லாஹ்.

அதேபோல் ஆஸம் கார்க் பட்கல், மாலேகான் ,டார்பங்கா போன்ற இடங்களில் முஸ்லிம்களுக்கு நடந்த கொடுமைகளும் கணக்கில் கொண்டுவரப்படும். இதனை

டெல்லியிலிருந்து வெளிவரும் மில்லிகெஜட் என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் டாக்டர் ஜஃபருல் இஸ்லாம்கான் அவர்கள்தாம் செய்கின்றார்கள். டாக்டர் ஜபருல் இஸ்லாம்கான் தான் மஜ்லிசே முஷாவரத் என்ற அமைப்பின் தலைவருமாவார். இந்த அமைப்பின் சார்பில் தான் இஃது வெளியிடப்படவுள்ளது.

இதற்கு உதவியாக வாசகர்கள் தங்கள் கைவசமுள்ள தகவல்களை அனுப்பிக் கொடுக்கலாம்.

இந்த வெள்ளை அறிக்கையை வெளியிட ரூபாய் 25 லட்சம் ஆகும். இதற்காக நன்கொடைகள் வழங்கிட விரும்புவோர் இதர விபரங்களுக்குத் தொடர்புகொள்ள விரும்புவர்கள் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

All India Muslim Majlis-E-Mushawarath, D.250 Abul Fazal Enclave, Part 1, Jamia Nagar, New Delhi- 110025.

Announcement by : Milligazette : 16-30-09-2012

---

***25ம் பக்க தொடர்ச்சி***

இடம் பெறும் பொருட்கள் இவையெல்லாம் ஒரு மரப்பெட்டியில் வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பெட்டி Peepal Tree Wooden Box என்று செய்யப்பட்டது. இந்தப் பெட்டியைச் சுற்றியும் திருக்குர்ஆன் வசனங்கள் எழுதப்பட்டிருக்கும்.

இவையெல்லாம் நீண்ட நெடும் நாள்களாக மக்கள் பார்வைக்கு வராமலிருந்தன. ஆனால் 2005 ஆம் ஆண்டு முதல் திருக்குர்ஆன் மஜீத் எழுத்துகலை வரைவுகளில் Quran Majeed in the light of the Art of Calligraphy என்ற தலைப்பில் ஒரு கண்காட்சி நடத்தப்படுகின்றது.

இந்த கண்காட்சி ரமழான் மாதத்தில் நடத்தப்படுகின்றது. இந்த வருடம் இந்த கண்காட்சியை உத்திரகான்ட் கவர்னர் அஜீஸ் குறைஷி தொடங்கி வைதத்தார்.


**2013 ஜனவரி 11 முதல் ஜனவரி 23 வரை சென்னை புத்தகக் கண்காட்சியில்**

**வேர்கள் வெளியீட்டகத்தின்**

**நூல்கள் கிடைக்குமிடம்:**

**கடை எண் 522, 523**

**சாஜிதா புக் சென்டர்**

**வாசகப் பெருமக்களை அன்புடன் அழைக்கின்றோம்**

**இவண்**

**வேர்கள்**

**52/1 மண்ணடி தெரு**
**மண்ணடி**
**சென்னை - 1**
**கைபேசி : 9444239594**

# நூலரங்கம்




**நூல்: மணிச்சுடர் நாளிதழ் வெள்ளி விழா மலர்**

**பக்கங்கள்: 536**

**விலை: 300.00**

**வெளியீடு: முஸ்லிம் லீக் பதிப்பக அறக்கட்டளை**

**கிடைக்குமிடம்: காயிதே மில்லத் மன்ஸில், மரைக்காயர் லெப்பைத்தெரு, மண்ணடி, சென்னை - 1.**

**தொடர்புக்கு: 9444010313**

*"மணிச்சுடர்" முஸ்லிம் லீக் சார்பில் வெளிவரும் தினசரிப் பத்திரிக்கை. தன் இதழியல் பயணத்தில் கால் நூற்றாண்டைக் கடந்து தன் வெற்றிப்பயணத்தை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது.*

*ஒரு மாத இதழ் நடத்துவதே நெருப்பாற்றில் நீந்துவது போன்ற சிரமங்களடங்கியது. தினசரிப்பத்திரிக்கை என்றால் அதை நடத்துவது எளிதல்ல*

*1987 ஏப்ரல் 29ம் நாள் முதல் வரத் தொடங்கிய மணிச்சுடர் இடையில் நான்கு ஆண்டுகள் தன் வரவை நிறுத்திக் கொண்டதற்கு நியாயமான காரணங்கள் உண்டு. இருப்பினும் மணிச்சுடருக்கு இப்போது இருபத்து ஐந்து வயது.*

*இதை முன்னிட்டு வெளியிடப்பட்ட மலர் மணிச்சுடர் நாளிதழ் வெள்ளிவிழா மலர். உருவத்தில் கனமாகவும் உயரமாகவும் இருக்கும் இம்மலரின் உள்ளடக்கமும் அவ்வாறே உள்ளது.*

*மைக் டைசன் இஸ்லாத்தைத் தழுவினார் (பக்:86), எழுபத்து ஐந்து ஆண்டுக்குகளுக்குப்பிறகு துருக்கியில் இஸ்லாமிய மறுமலர்ச்சி (பக்:97,172),*

அமெரிக்க ராணுவத்தின் முதல் இமாம் (பக்:100), பாபரி மஸ்ஜிதை அதே இடத்தில் மீண்டும் கட்ட இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு கோரிக்கை (பக்:140), கமலாதாஸ் இஸ்லாத்தை தழுவினார் (பக்:237), 2002ல் குஜராத்தில் நடந்த இனப்படுகொலை 1930ல் ஜெர்மனியில் நடந்த பாஸிஸ அடக்குமுறை போன்றது. ஐரோப்பிய யூனியன் கண்டனம்(பக்:287), விஷ்வ ஹிந்து பரீஷத்-இன் பெண்கள் பிரிவான துர்கா வாகினிக்குத் தடை விதிக்க வேண்டும், பனாத்வாலா கோரிக்கை (பக்:336) ஆகிய செய்திகளை ஒரே தொகுப்பில் காணமுடிவது நாம் கடந்து வந்த பாதைகளை அசைபோட்டுப்பார்த்திட துணை செய்கிறது.

ராமகிருஷ்ண பரமஹம்சரும் அவரின் வழி வந்த விவேகானந்தரும் இந்துக்களா? இந்துக்கள் அல்லாதவர்களா? நீதிமன்றத்தில் வழக்கு(பக்:149)

ஆறடி உயரமுள்ள உலகின் பெரிய குர்ஆன்(பக்:173), முஹம்மது கிளேவுக்கு மீண்டும் தங்கப்பதக்கம்(பக்:176), கஅபாவின் சாவி ஒன்பது கோடி டாலருக்கு ஏலம்(பக்:349), வசந்தாள் என்ற இந்துப்பெண் தன் செலவில் பள்ளிவாசலுக்கு இடம் வாங்கித் தந்து பள்ளிவாசல் கட்டவும் உதவினார். கல்வெட்டில் தன் பெயரைப் பொறிக்கக்கூடாது என்றும் கூறினார் (பக்:247) ஆகிய தகவல்கள் வாசிப்போரை "அட" என்று சொல்ல வைக்கிறது.

பொது சிவில் சட்டத்துக்கு எதிரான பனாத்வாலா உரையும்(பக்:163), நாகூர் இலக்கிய மாநாட்டில் சிராஜுல் மில்லத் உரையும்(பக்:90), சென்னை நூல்வெளியீட்டு விழாவில் காதர் மைதீன் சாஹிபு உரையும் (பக்:479), ராமன் பிறந்த இடம் பற்றிய கலைஞரின் கருத்துரையும் (பக்:428) வாசிக்க வேண்டியவை.

இவை தவிர அதிமுக்கிய அரசியல் செய்திகளும் இத்தொகுப்பில் உண்டு. இன்றைய இளைய தலைமுறை அறிந்திட வேண்டிய அரிய தகவல்கள் பல இதில் ஏராளம் உண்டு.

தன் கடந்த கால வரலாற்றை மறந்த சமுதாயத்துக்கு எதிர்காலம் இல்லை என்பார் பேரறிஞர் யூசுப் அல் கர்ளாவி. இந்த மலர் தமிழ் முஸ்லிம் சமுதாயத்தின் கடந்த காலத்தை நினைவூட்டும் காலப்பெட்டகம். சமுதாயத்தின் எதிர்காலம் குறித்த அக்கறை உள்ளோர் அனைவரின் கையிலும் இருக்க வேண்டிய மலர் இது.

மலரை வெளியிட்ட முஸ்லிம் லீக் பதிப்பக அறக்கட்டளை பாராட்டுக்குரிய பணியைச் செய்திருக்கிறது.

தமிழக அரசியல் வரலாற்றில் எம்.ஜி.ஆரின் மரணத்துக்குப்பின் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் எடுத்த அரசியல் முடிவுகள் அந்த வெற்றிக்குத் துணை நிற்கவில்லை. சிறந்த பேச்சாளர், சிந்தனையாளர், நிர்வாகி என்று பெயரெடுத்த அப்துஸ் ஸமத் அவர்களின் காலத்துக்குப் பிறகு தலைமைப் பொறுப்பேற்ற பேராசிரியர் கே.எம். காதர் மொகைதீன் அவர்கள் முஸ்லிம் லீக்-ஐப் பலப்படுத்த அடிப்படைப் பணிகளில் கவனம் செலுத்தினார்.

கட்சிக்கென்று சொந்த அலுவலகத்தை உண்டாக்கினார். பதிப்பக அறக்கட்டளையை ஏற்படுத்தி முஸ்லிம் லீக்கின் வரலாற்றை மூன்று தொகுதிகளாக வெளியிட்டார். கட்சியின் முக்கியப் பொறுப்பான பொதுச்செயலாளர் பதவியையும் செயலாளர்கள் பதவியையும் இளைஞர்களிடத்தில் ஒப்படைத்தார். பாராளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் முஸ்லிம் லீக் உறுப்பினர்களை இடம் பெறச் செய்தார்.


மணிச்சுடர் நாளிதழ் வெள்ளி விழா மலர் 2012ம் அவரின் சாதனைகளில் ஒன்று என்றே கூறலாம்.

1952 மே 13ம் தேதி நம் தேசத்தின் நாடாளுமன்றம் செயல்படத் தொடங்கிற்று. அன்று முதல் இன்று வரை இடைவிடாமல் அங்கே முஸ்லிம் லீக் இடம் பெற்று வந்திருக்கிறது. இந்திய முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அது நிறைவேற்றியுள்ளது.

முஸ்லிம் லீக்கின் அரசியல் பணியும் இலக்கியப்பணியும் தொடர்கிறது, தொடர வேண்டும். ஒரு சமுதாயத்தை இயக்குவதில் இலக்கியங்களுக்கும் பெரும் பங்கு உண்டு. மணிச்சுடர் குடும்பத்திலிருந்து இன்னும் பல நூல்கள் வரவேண்டும். - ரியாஜி.

*******

# பாபரி மஸ்ஜித்-இன் வழக்கும் மத்தியப்புலனாய்வுத்துறையின் மெத்தனப்போக்கும்



பாபரி மஸ்ஜித் இடிக்கப் பட்டவுடன் அதனை உடனேயே கட்டித்தருவோம் என வாக்களித்தார் நாட்டு மக்களிடம் நரசிம்மராவ் என்ற அப்போதைய பிரதமர். இவர் இந்து தீவிரவாத அமைப்புகளின் பிறப்பிடமாகிய சித்பவன் என்னுமிடத்தை சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் அந்த வாக்குறுதியைக் காற்றிலே பறக்கவிட்டார். அடுத்தாற்போல் அபார நாடகத்தை அரங்கேற்றினார். அந்த நாடகம் பாபரி மஸ்ஜித் இடிப்பிற்குப் பின்னால் ஒரு சதி இருந்ததா? என்பதைக் கண்டுபிடிக்கப் போவதாகவும் அதற்காக மிகவும் ஆழமான விசாரணை ஒன்றை நடத்திட போவதாகவும் பிரகடனப் படுத்தினார்.

பள்ளிவாசல் இடிக்கப்பட்ட நான்காவது நாள் ஒரு விசாரணைக்கு (16.12.1992 அன்று) உத்தரவிட்டார். ஒரு விசாரணை கமிஷனையும் நியமித்தார்.

இந்த விசாரணை கமிஷனின் தலைவராக லிபர்ஹான் என்ற உயர்நீதிமன்ற (ஓய்வு) நீதிபதியை நியமித்தார்.

இவர் கிடைத்த இந்தப் பதவியை 17 ஆண்டுகள் பயன்படுத்தி பலகோடி ரூபாயைச் சம்பளமாகப் பெற்றார். முடிவில் சங்பரிவாரங்களிடம் வாங்கிட வேண்டியதை வாங்கிவிட்டு “Conspiracy” என்ற சதி என்று பாபரி மஸ்ஜித் இடிப்பிற்குப் பின் இல்லை என்று கூறினார். ஆனால் முஸ்லிம்கள் சதி இருக்கிறது என்றும் அதில் அத்வானி உள்ளிட்டோர் உண்டு என்றும் வழக்குத் தொடர்ந்தார்கள். பின்னர் இந்த வழக்குகள் சிபிஐ என்ற மத்திய புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

சதியைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் முன்னாள் துணை பிரதமர் எல்.கே அத்வானி, முன்னாள் மத்திய அமைச்சர் முரளிமனோகர் ஜோஷி, விஷ்வ ஹிந்து பரீஷத் அமைப்பைச் சார்ந்த பிரவின் தொகாடியா, சிவசேனை அமைப்பைச் சார்ந்த பால்தாக்கரே இன்னும் பலர். இதை எதிர்த்து அலஹாபாத் உயர்நீதிமன்றம் அப்படியொரு சதி இருக்கவில்லை எனக்கூறி சதி குறித்த குற்றச்சாட்டுகளை விட்டுவிட வேண்டும் எனக்கூறியது.

முஸ்லிம்கள் தொடர்ந்து தந்த நெருக்கடிகளால் சி.பி.ஐ இந்த வழக்குகளை உச்சநீதிமன்றம் கொண்டு சென்றது. உச்ச நீதிமன்றத்தில் மத்தியப் புலனாய்வுத்துறை இப்படிக் கூறிற்று:

“அத்வானி உள்ளிட்டோர் மீதான பாபரி மஸ்ஜித் இடிப்பு சதி குற்றச்சாட்டை விட்டுவிட இயலாது. அதேபோல் இந்த வழக்கை நாம் ஏனைய வழக்குகளிலிருந்து பிரித்திடவும் இயலாது.”

***ஏனைய வழக்குகள்:*** *(ஏனைய வழக்குகள் என்பது, **1992**இல் பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டவுடன் இரண்டு வழக்குகள் பதியப்பட்டன. ஒன்று **197/1992** பிறிதொன்று **198/1992**. வழக்கு எண் **198/1992** என்பது பாபரி மஸ்ஜித் இடிப்பில் நேரடியாக தங்களை ஈடுபடுத்திய கரசேவகர்கள். மற்றொன்று சற்று தொலைவில் போடப்பட்ட மேடையில் நின்று உற்சாக உரைகளை நிகழ்த்தி பாபரி மஸ்ஜித் இடிப்பிற்கு உறுதுணையாக நின்றவர்கள். இவர்கள் வழக்கு எண் **197/1992**. இப்போது சிபிஐ சொல்வது இரண்டு வழக்குகளும் ஒன்று தான். எல்லோரும் இடித்தவர்களும் இடிக்க செய்தவர்களும் ஒன்று போலவே விசாரிக்கப்படவேண்டும் என்பதே) இது தான் நமது சட்டங்கள் சொல்லுபவையும்.*

*சி.பி.ஐ என்ற மத்திய புலனாய்வுத்துறை மேலும் கூறியது, வழக்கு எண் **197/1992** என்பதும் வழக்கு எண் **198/1992** என்பதும் வேறு வேறு என்று கூறுவது சரியல்ல. மத்திய புலனாய்வுத்துறை மேற்கொண்ட ஆய்வுகள் பாபரி மஸ்ஜித்-ஐ இடிக்க நடந்த சதி ஒரே பெரிய சதி, இடித்ததும் அந்த பெரிய சதியின் பிரிக்க முடியாத ஒரு பகுதிதான். இது குறித்து நாங்கள் **49** வழக்குகளை ஒரே வழக்காக பதிவு செய்திருக்கின்றோம். இதில் பாபரி மஸ்ஜித் இடிக்க வேண்டும் என்ற பெரிய சதியை நிறைவேற்றிட ஒவ்வொருவரும் ஆற்றிய பங்கினைக்குறிப்பிட்டுள்ளோம்.*

*இந்த வழக்குகள் பாபரி மஸ்ஜித் இடிப்பில் ஒவ்வொருவரும் ஆற்றிய பங்கினைத் தனித்தனியாகச் சாட்சி யங்களுடன் விரித்துரைக்கின்றன. வழக்கு எண் **198/1992** இல் பெயர் குறிப்பிடப் பட்டவர்கள் அங்கே போடப்பட்டிருந்த மேடையில் நின்றுக் கொண்டு குழுமி இருந்த கூட்டத்தை சட்டத்திற்குப் புறம்பாக வன்முறைகளில் ஈடுபடுத்தினார்கள். இதுதான் (பாபரி மஸ்ஜித்) அந்தக் கட்டடம், இடிக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்தது. அதனால் இவர்கள் தாம் முக்கிய குற்றவாளிகள்.*

*பள்ளிவாசலின் டூம் வீழ்ந்தவுடன் இவர்கள் தங்களுடைய கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தார்கள். அதோடு இனிப்புகளையும் வழங்கினார்கள். ஒருவரை ஒருவர் ஆறத் தழுவி அல்லோல கல்லோலப்பட்டார்கள். இவர்கள் மேடையில் நின்றுக் கொண்டு பேசிய பேச்சுகள் மத ஒற்றுமையைச் சீர்குலைத்தது. தேசிய ஒருமைப்பாட்டையும் பாதித்தது. அந்தக் கட்டடத்தை இடித்தது. அத்தோடு ஊடகத்தைச் சார்ந்தவர்களையும் தாக்கினார்கள். இத்தனையும் ஒரே குற்றந்தான். அவற்றை வெவ்வேறாகப் பிரித்திட இயலாது. இப்படி உச்ச நீதிமன்றத்தில் மத்தியப் புலனாய்வுத்துறை கூறியுள்ளது.*

***சிபிஐ -இன் தகிடுதத்தங்கள்:*** *பாபரி மஸ்ஜித் இடிப்பில் சதி என்றொன்று இல்லை என்று அலகாபாத் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்துத் தான் இந்த மேல்முறையீட்டை சிபிஐ உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.*


இன்ஷா அல்லாஹ்....
விரைவில் வெளிவருகிறது!

ஷஹீத் செய்யித் குத்துப் அவர்களின்

இஸ்லாமிய எழுச்சியின்
மைல் கற்கள்

எகிப்தில் இஸ்லாமிய எழுச்சிக்கு வித்திட்ட நூல்!
தலைமுறை தாண்டியும் புரட்சிகளை விளைவிக்கும் நூல்!
பல லட்சம் போராளிகளை உருவாக்கிய நூல்!!

மு. குலாம் முஹம்மது அவர்களின்
விறுவிறுப்பான மொழிநடையில்

வேர்கள் வெளியீட்டகம்
2/1 மண்ணடி தெரு, 4வது தளம்
மண்ணடி சென்னை -1
அலை: 9444239594, : 044-45566909

இந்த வழக்கு டிசம்பர் *6 2012* அன்று நமது உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய புலனாய்வுத்துறை சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகிட வேண்டிய வழக்கறிஞர் நீதிமன்றத்திற்கே வந்திடவில்லை. அவர் சார்பில் ஒருவர் நீதிபதியிடம் ஆறு வாரத்திற்கு வழக்கை ஒத்தி வைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார். நீதிபதிகளே மத்திய புலனாய்வுத்துறை இந்த வழக்கில் மிகவும் மெத்தனமாக இருப்பதாகக் கூறியுள்ளது. (செய்தி ஆதாரம் தி ஹிந்து *7.12.2012*)

அதே போல் மத்திய புலனாய்வுத்துறை தன்னுடைய மேல் முறையீட்டில் இடிக்கப்பட்டது வெறும் கட்டடம் தான் (Structure) என்பதாகவே குறிப்பிடுகின்றது.


கி.பி.1528இல் கட்டப்பட்ட வரலாற்று சிறப்புமிக்கதொரு மஸ்ஜித் என்பது தான் பாபரி மஸ்ஜித்-இன் பெருமை. இந்தியாவின் பாரம்பரிய சின்னங்களுள் ஒன்று. ஆனால் இங்கே ஒரு வெற்றுக் கட்டடம் தான் என்பதாகவே காட்டப்படுகின்றது. இப்படித்தான் சிபிஐ இன் மனுவிலும் கூறப்பட்டுள்ளது.

இது மொத்த வழக்கும் பெற வேண்டிய மதிப்பையும் முக்கியத் துவத்தையும் குறைத்துக் காட்டுவதாகும்.

20 ஆண்டுகளாகியும் மத்திய புலனாய்வுத்துறைக்கு இந்த வழக்கு முக்கிய வழக்காகத் தெரிந்திடவில்லை. இங்கே வழக்கை நடத்துவதைப் போல் ஒரு பாசாங்குக் காட்டினால் போதும் என்ற முடிவுக்கு மத்திய புலனாய்வுத்துறை ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாகத் தெரிகின்றது. உச்சநீதிமன்ற நீதிபதிகளே இந்த மெத்தனப்போக்கு குறித்து தங்கள் வருத்தத்தை தெரிவித்துள்ளார்கள்

**பால்தாக்கரே:** இவர் பாபரி மஸ்ஜித் இடிப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பெற்ற முக்கிய குற்றவாளிகளுள் ஒருவர். இவர் நீதிமன்றங்களை எட்டிப்பார்க்காமலேயே இறந்து போய் விட்டார். இப்படி குற்றஞ்சாட்டப்பட்ட வர்கள் தாமாகவே இறந்து போகும் வரைக்கும் வழக்குத் தொடரும். இதுவே இந்தியாவில் சிறுபான்மையினருக்கு கிடைக்கும் நீதி.

**பாபரி மஸ்ஜித் வழக்கின் இப்போதைய நிலை:** வழக்கறிஞர் ஜாஃபர் ஜீலானியுடன் ஒரு பேட்டி:




வழக்குகளின் இப்போதைய நிலை:

வழக்குக் குறித்த ஆவணங்களை அலஹாபாத் உயர்நீதிமன்றம் இன்னும் உச்சநீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை உச்ச நீதிமன்றம் அவற்றை கேட்கவில்லையா?

பலமுறை உச்ச நீதிமன்றம் கேட்டுவிட்டது. ஆனால் அலஹாபாத் நீதிமன்றம் அனுப்பவில்லை. காரணம் அவர்கள் இன்னும் சில அறிக்கைகள் தயாராக வேண்டியுள்ளது எனக் கூறுகின்றார்கள். எதெல்லாம் தயாராக இருக்கின்றனவோ அவற்றை அனுப்பி இருக்கலாம். ஆனால் அவற்றையும் அனுப்பவில்லை. நாங்கள் தலைமை நீதிபதியிடம் முறையிட்டிருக்கின்றோம்.

அத்வானி முதலானோர் மீதான சதி வழக்கு அது நடந்து கொண்டிருக்கின்றது. *24 12 2012* இல் வந்தது மீண்டும் *5 1 2013* ல் வரும்.


## தமிழன் தொலைக்காட்சியில்

# தரீக்குல் குர்ஆன்


வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் மௌலவி. **இல்யாஸ் ரியாஜி** அவர்களின் திருக்குர்ஆன் விரிவுரை வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை இரவு 10.00 மணி முதல் 10.30 வரை ஒளிபரப்பாகிறது. இந்நிகழ்ச்சியை RSD நிறுவனம் நடத்துகிறது.

**தொடர்புக்கு**

**காயல் தர்வேஷ் : 98418 98044**

# நாடாளுமன்ற தாக்குதல் வழக்கு

# அடுத்த பலிகடா.. அப்சல் குரு..



10.12.2012 அன்று நமது மத்திய உள்துறை அமைச்சர் சுசில்குமார் ஷிண்டே நாடாளுமன்ற கேள்வி நேரத்தில் அப்சல் குருவின் கருணை மனு மீதான முடிவு இந்த நாடாளுமன்ற கூட்டத்தொடருக்குப்பின் எடுக்கப்படும் என அறிவித்துள்ளார். The Hindu 11.12.2012

டிசம்பர் 22, 2012 அன்றே நாடாளுமன்ற கூட்டத்தொடர் முடிந்துள்ள நிலையில் இனி ஒரு நாள் திடுதிப்பென தூக்கிலிட்டு விட்டோம் என்ற செய்திகள் வரலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அப்சல் குரு நமது நாடாளுமன்ற தாக்குதல் முயற்சியில் (13.12.2001) தூக்குத்தண்டனை உறுதி செய்யப்பட்ட குற்றவாளி. தூக்கிலிடப்பட்ட பின் வளரும் விவாதங்கள் எந்த நியாயத்தையும் வழங்கிவிடமாட்டா. யாருடைய கண்களையும் திறந்து எந்தப் பலனுமில்லை.

ஆனால் நீதிக்கான நமது போர் தொய்வின்றி தொடரும். இந்த வகையில் அப்சல் குரு விவகாரத்திலும் அவர் குற்றம் சாட்டப்பெற்ற நாடாளுமன்ற தாக்குதலையும் குறித்து நாம் பல தொடர்களை வைகறையில் வெளியிட்டுள்ளோம்.

அவை "நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்" என்ற பெயரில் நூலாகவும் வெளி வந்துள்ளது. அந்த நூலிலும் அதற்கு பின்னர் வந்த தொடரிலும் இடம் பெறாத பல தகவல்களை இடம் பெற செய்கின்றோம்.

## இருட்டடிப்பு செய்யப்பட்ட ஒரு பெரும் உண்மை:

PUDR People's for Democratic Rights என்ற ஜனநாயக உரிமைகளுக்கான அமைப்பு ஓர் ஆவணத் தொகுப்பை வெளியிட்டது. அதற்கு டிசம்பர் 13 ஜனநாயகத்தின் மேல் தீவிரவாதம் என தலைப்பிட்டிருந்தது

இதில் வந்த உண்மைகளை நமது தொலைக்காட்சிகள் ஏறெடுத்தும் பார்த்திட்டதாகத் தெரிந்திடவில்லை.

அதில் பக்கம் 47 இல் கணீர் என்றொரு பிரகடனம் Finally, parts of Afzal's 313 when conjoined and interpreted raise daka issues about the complicity of the security agencies in the conspiracy

புரியும்படியாக இதைச் சொன்னால்:

அப்சல் குரு நீதிபதியின் முன் கொடுத்த வாக்கு மூலத்தின் ஒரு பகுதியையும் இதர தடயங்களையும் தொகுத்து ஓர் ஆய்வுக்கு உட்படுத்தினால் நாடாளுமன்றத் தாக்குதல் சதியில் பாதுகாப்பு படைகளும் தங்கள் கைவரிசையைக் காட்டி இருக்கின்றன என்ற கசப்பான உண்மை வெளிவருகின்றது.

"நமது நாடாளுமன்ற தாக்குதல் அதை தாக்கிட நடந்த முயற்சியில் நமது பாதுகாப்பு படைகளின் பங்கு" என்பவை எத்துணை பாரதூரமான பதிவு. இதில் இன்றளவும் எந்த விசாரணையும் இல்லை அரசு தரப்பிலிருந்து.

ஆனால் ஜனநாயக உரிமைகளுக்கான மக்கள் கழகம் ஒரு பெரும் ஆய்வை நடத்தி ஆவணத் தொகுப்பொன்றை மக்கள் மன்றத்தில் வைத்திருக்கின்றது. அதில் இந்த வரிகள் ஒரு பெரும் சவாலை தொடுத்துக் கொண்டே இருக்கின்றன.

அதனை மீடியாக்கள் கண்டுகொள்ளவே இல்லை.

மொத்தத்தில் கஷ்மீரின் STF - Special Task Force என்ற சிறப்புப்படையும் ராஜ்பிர் சிங் என்ற டெல்லி காவல்துறை ஆணையரும் ஏற்பாடு செய்ததே இந்த நாடாளுமன்ற தாக்குதல் முயற்சி என அந்த PUDR People's Union Democracy Rights அறிக்கை உணர்த்திற்று.

இதில் கைதிகளாக காவல் துறையின் கட்டுப்பாட்டிலிருந்த பல கஷ்மீர் முஸ்லிம்கள் பயன்படுத்தப்பட்டார்கள்.

அப்சல் குருவின் விவகாரத்திலும் இதுவே நடந்தது. அதனை சுருக்கமாக இங்கே தருகின்றோம்.

## அப்சல் யார்?

முஹம்மத் அப்சல் வறுமையில் வாடிய ஓர் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர். அவருடைய தந்தை அவருடைய இளம் பருவத்திலேயே இறந்து போனார். அவருடைய அண்ணன் ஏஜாஸ் அஹ்மத் தான் அவரை வளர்த்தார். ஏஜாஸால் நன்றாக படித்திட இயலவில்லை. அதனால் அவன் தன் தம்பியை படிக்க வைக்க விரும்பினார். தம்பி அப்சல் குரு படிப்பதில் ஆர்வம் காட்டினான். அப்சல் குரு நன்றாக படித்து ஒரு மருத்துவராக ஆகிட வேண்டும் என்று விரும்பினான். இந்த இலட்சியத்தை அடைந்திட ஏஜாஸ் உதவி செய்தார்.

## காஷ்மீரில் போர்:

அப்சல் மருத்துவ படிப்பின் முதலாண்டில் படித்துக் கொண்டிருந்தான். அப்போது தான் கஷ்மீரின் இளைஞர்கள் ஒரு பெரும் போராட்டத்தை நடத்தினார்கள். அந்தப் போராட்டம் 1987ல் கஷ்மீரில் நடந்த பொது தேர்தலுக்கெதிரான போராட்டம். இந்த தேர்தலில் ஜெயித்தவர்கள் சிறையிலடைக்கப் பட்டார்கள். மக்களுக்கு துரோகம் செய்தவர்கள் சட்டசபைக்கு அனுப்பப்பட்டார்கள் (ஒரு பெரும் ஜனநாயக படுகொலை நடந்தது)

இந்த போராட்டம் காலாகாலமாக கஷ்மீர் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி, ஒடுக்குமுறை இவற்றிற்கு எதிராக எழுந்தது. தாமாக மக்கள் படை திரண்டு பல பத்தாண்டுகளாக நடந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிராக நடத்திய போராட்டம். இந்தப் போராட்டத்தில் நடந்த ஊர்வலங்கள் பல மைல்கள் நீளங் கொண்டவை. ஆயிரக் கணக்கான இளைஞர்கள் வெகுண்டெழுந் தார்கள்.

தாங்கள் உலகில் வைத்திருந்த அபிலாஷைகளைப் புறந்தள்ளிவிட்டு தங்களது இல்லங்களை துறந்து பனிமண்டலங்களைக் கடந்து பள்ளத்தாக்குகளைக் கடந்து பாகிஸ்தான் கைவசமுள்ள கஷ்மீருக்கு சென்று ஆயுத பயிற்சி எடுக்கச் சென்றார்கள். அப்சல் குருவும் அவர்களில் ஒருவன்.

மூன்று மாதங்களுக்கு பின் அவன் திரும்பி வந்து விட்டான். காரணம் பாகிஸ்தானும் தன் அரசியல் விளையாட்டுகளுக்காக கஷ்மீர் இளைஞர்களை பயன்படுத்துகின்றது என்பதை தெரிந்து கொண்டான். அதனால் அவனது சிந்தனைகள் மாறின. அவன் திரும்பி வந்தான். நமது எல்லைப் பாதுகாப்பு படையிடம் சரணடைந்தான். அவன் சரணடைந்ததற்கு நமது எல்லைப் பாதுகாப்பு படையினர் விதித்த நிபந்தனை அவன் இன்னும் இரண்டு பேரை சரணடைந்திட செய்திட வேண்டும். இந்த நிபந்தனையையும் அவன் நிறைவேற்றிடவே செய்தான்.

அப்சல் வேலை தேடினான் வாழ்வதற்கு. மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்யும் வேலை ஒன்று அவனுக்கு கிடைத்தது. இது அவனுடைய மருத்துவராக வேண்டும் என்ற ஆசையை ஓரளவுக்கு ஈடு செய்வதாக இருந்தது. இதில் மாதம் ஐந்து ஆயிரம் ரூபாய் வருவாயாகக் கிடைத்தது. அவன் திருமணம் செய்து கொண்டான்.

திருமணமான இரண்டு நாள் கழித்து கஷ்மீரின் சிறப்புப் படையைச் சார்ந்த சிலர் அவன் வீட்டுக்கு வந்தார்கள். அவனை அவர்களுடைய முகாமிற்கு அழைத்துச்

சென்றார்கள். அங்கே அவனை அவர்கள் ஏறத்தாழ ஒரு மாதம் வைத்திருந்தனர். ஒவ்வொரு நாளும் அவன் குரூரமான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டான்.

அவனுடைய மலத்துவாரத்தில் பெட்ரோலை ஊற்றினார்கள். குளிர்ந்த நீரில் பல நாள்கள் வைக்கப்பட்டிருந்தான். கடுமையான உதைகளுக்கும் அடிகளுக்கும் ஆளாக்கப்பட்டான்.

அவனை இந்த சித்திரவதைகளிலிருந்து விடுவித்து வெளியே விட வேண்டும் என்றால் ஒரு லட்சம் ரூபாயைத் தந்திட வேண்டும் என நிபந்தனை விதித்தார்கள் STF என்ற கஷ்மீர் சிறப்புப்படையினர். இந்த சிறப்புப்படையினர் கஷ்மீர் மக்களிடம் தண்டால் வசூல் செய்வதில் மிகவும் பிரசித்து பெற்றவர்கள்.

அப்சல் குருவின் மனைவி தபசும் தன்னிடமிருந்த எல்லா அணிமணிகளையும் விற்ற பின் தான் இந்த ஒரு லட்சம் ரூபாயை ஏற்பாடு செய்திட முடிந்தது. அப்சல் பயன்படுத்திக் கொண்டிருந்த ஸ்கூட்டரை அவனுடைய தாய் விற்று விற்றாள், இந்த ஒரு லட்சம் ரூபாய் என்ற இலக்கை அடைந்திட.

ஒரு லட்ச ரூபாயைத் தந்தார்கள். அப்சலை மீட்டார்கள். ஆனால் அவனை ஒரு நடைபிணமாகவே அவன் குடும்பத்தாரிடம் ஒப்படைத்தார்கள்.

அப்சல் சிறப்பு படைகளின் கைகளிலிருந்த நாள்களை அந்தக் குடும்பத்தினரால் மறந்திட இயலவில்லை.

**மக்கள் எழுச்சி :** அடுத்து அப்சல் சிறப்பு படையின் (எஸ்டிஎஃப்-இன்) தகிடுதத்தங்களை வெளியே சொன்னால் என்ன




நடக்குமோ, இந்தச் சிறப்புப் படையினர் என்ன செய்வார்களோ என்ற பீதியும் பயமும் அப்சலின் குடும்பத்தைத் தொற்றிக் கொண்டது.

இந்த பயம் அப்சலை விட அவனுடைய அண்ணன் ஏஜாஸை அதிகமாக தொற்றிக் கொண்டது. மொத்த குடும்பமும் பீதி வயப்பட்டது.

இந்த சிறப்பு படையை அகற்றிட வேண்டும். அது நடத்தும் சித்திரவதைக் கூடங்கள் அகற்றப்பட வேண்டும் என்றும் மக்கள் போராடினார்கள். உலகெங்கிலுமிருந்து கஷ்மீரைப் பார்வையிட வந்த மனித உரிமை அமைப்புகள் போராடின. ஆனால் நம் நாட்டு ஊடகங்களோ நம் நாட்டில் இயங்கும் மனித உரிமை அமைப்புகளோ இதை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

நம் நாட்டு மனித உரிமை அமைப்புகள் கஷ்மீர் மக்களைச் சித்திரவதைச் செய்தால் அது நாட்டுப்பற்று என எடுத்துக்கொள்கின்றார்கள் என்று நந்திதா ஹாக்சர் ஆதங்கப்படுகின்றார்

இந்த நந்திதா ஹாக்சர் நாடாளுமன்ற தாக்குதல் வழக்கில் பிரதான குற்றவாளி SAR ஜீலானிக்காக வாதாடியவர்.

எஸ்.டி.எஃப் என்ற கஷ்மீர் சிறப்புப் படையின் மீது மக்கள் எந்த அளவுக்கு வெறுப்புக் கொண்டார்கள், அந்த வெறுப்பால் அவர்கள் எவ்வாறு ஒருமுகப்பட்டு நின்றார்கள் என்றால் இந்த சிறப்புப்படையை அகற்றிடு வேன் என்று வாக்குறுதி கொடுத்தால் தேர்தலில் வென்றிடலாம் என்ற நிலை இருந்தது.

உண்மையில் இப்படியொரு வாக்குறுதியை தேர்தல் வாக்குறுதியாக வழங்கித்தான் முஃத்தி செய்யீத் என்பவர் கஷ்மீர் தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடித்தார். (மேலே சொன்ன மேற்கோள்)

சில நாட்கள் கழித்து இந்த சிறப்பு படையினர் அப்சலிடம் அவர்கள் சொல்லும் நபர்களை வேவு பார்த்து தகவல் தந்திட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தினார்கள். இராம் மோகன் ராண் என்ற 22 ராஷ்டிரிய்ய ரைபிள் படையைச் சார்ந்தவர் அப்சலை அழைத்துச் சென்று அவனுடைய மறைவிடங்களில் மின்சாரத்தை பாய்ச்சினார். அவரை அவமானப்படுத்தினார்கள். வதைத்தார்கள். வைதார்கள்.




இந்நிலையில் அவர் இனி கஷ்மீரிலிருந்து தன் குடும்பத்தவர்களை டெல்லி அழைத்து வந்திட வேண்டும் என முடிவு செய்தார். அவருக்கோர் மகனும் பிறந்திருந்தான்.

டெல்லியில் இந்திராவிகாரின் ஒரு வீட்டுக்கு ஏற்பாடு செய்தார். பெருநாளுக்கு கஷ்மீருக்கு வந்து குடும்பத்ினருடன் பெருநாள் கொண்டாடிவிட்டு குடும்பத்தோடு டெல்லி சென்றிட கஷ்மீர் சென்றார். ஸ்ரீநகர் பஸ் நிலையத்தில் இறங்கினார். தயாராக இருந்த கஷ்மீர சிறப்புப்படையினர் அவரைக் கைது செய்தார்கள். நாடாளுமன்றத் தாக்குதலில் இணைத்தார்கள். இப்போது தூக்கு மேடைக்கே கொண்டு சென்று விட்டார்கள்.

பாட்னாவிலிருந்து தூக்குக் கயிரு தருவிக்கப்பட்டது. தூக்கில் யார் போடுவது என்பதும் முடிவாகி விட்டது.

ஒருவேளை இறந்த பின் அவர் என்ன என்ன அறிக்கை விட வேண்டும் என்பதும் எழுதி வாங்கப்பட்டிருக்கும்.

**தொடரும் சித்திரவதை:** அடிக்கடி அவர்கள் அப்சலை அழைத்து சென்று சித்ரவதை செய்தார்கள். ஒரு நாள் இரவு டி.எஸ்.பி வினாய் குப்தாவும் டி.எஸ்.பி டாரிந்தர் அவர்களும் எங்கள் வீட்டுக்கு வந்து இருந்தவர்கள். அனைவரையும் வாய்க்கு வந்தபடி வைதார்கள். அப்சலை அழைத்து சென்றார்கள். மீண்டும் பணம் கேட்டார்கள். மிச்சம் மீதி இருந்தனவற்றை விற்றுத் தந்து தான் அப்சலை மீட்டிட முடிந்தது.

இந்த கொடுமைகள் தாழாமல் அவர் டெல்லிக்கு வந்து விடுவது என்று முடிவு செய்தார். அங்கே தனது வியாபாரத்தை தொடர்ந்தார். டெல்லி பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பைத் தொடர்ந்தார். படித்து பட்டமும் பெற்றார்.

**முஹம்மத் :** ஒரு முறை அவர் குடும்பத்தவர்களைப் பார்க்க வந்த போது சிறப்புப் படையினர் அவரை அழைத்துச் சென்றனர். ஹும்ஹாமா என்ற இடத்திலுள்ள சிறப்பு படையின் முகாமில் வைத்து முஹம்மத் என்பவரையும் தாரிக் என்பவரையும் அறிமுகப்படுத்தினார்கள். அதில் முஹம்மத் என்பவரை டெல்லிக்கு அழைத்துச் சென்றிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள். அந்த முஹம்மத் யார் என்பதோ அந்த முஹம்மதை எஸ்.டி.எஃப் என்ற சிறப்பு படையினர் ஏன் டெல்லிக்கு அழைத்துச் செல்ல கட்டாயப்படுத்துகின்றார்கள் என்பதோ அப்சலுக்குத் தெரியாது.

## அப்சல் குருவிடம் வாக்குமூலம் வாங்கியவரின் வாக்குமூலம்

நமது பாரத நாட்டில் அப்பாவி முஸ்லிம்களை சித்திரவதைகளுக்கு உள்ளாக்கி வாக்குமூலங்களை வாங்கிடுவதற்கென ஐந்து சித்திரவதைக் கூடங்கள் இருக்கின்றன. இதனை நாம் வைகறை வெளிச்சத்தில் ஏற்கனவே விரிவாக வெளியிட்டிருக்கின்றோம்.

இந்த வழியிலேயே காஷ்மீர் எஸ்.டி.எஃப்-ஐ சார்ந்த டிரேவிந்தர் சிங் என்பவர் அப்சல் குருவையும் சித்திரவதைச் செய்து வாக்குமூலம் வாங்கி இருக்கின்றார். இவர் தான் சித்திரவதை செய்ததை பர்வேஷ் புகாரி என்ற பத்திரிகையாளரிடம் இப்படி கூறுகின்றார்:

“நான் என்னுடைய முகாமில் வைத்து அப்சல் குருவை பல நாட்கள் சித்ரவதைச்

செய்தேன். விசாரித்தேன். அவனை கைது செய்ததை நாங்கள் எங்களுடைய எந்தப் பதிவேட்டிலும் பதிந்திடவில்லை. அவனை எங்களுடைய முகாமில் வைத்து எப்படியெல்லாம் சித்திரவதைச் செய்தோம் என்பதை விளக்கியிருக்கின்றானோ அது அத்தனையும் உண்மை. அன்றைய நாட்களில் அது தான் எங்களுடைய வழக்கம். நாங்கள் அவனுடைய மலத்துவாரத்தில் பெட்ரோலை ஊற்றினோம். நான் அவன் மீது மின்சாரத்தை பாய்ச்சி சித்திரவதை செய்தேன். ஆனாலும் அவனுடைய உறுதியை என்னால் உடைத்திட இயலவில்லை. அவனை நாங்கள் எவ்வளவு குரூரமாக சித்திரவதை செய்திட இயலுமோ அவ்வளவு குரூரமாக சித்திரவதை செய்தோம். ஆனாலும் அவன் கொஞ்சமும் விட்டுக் கொடுக்கவில்லை. நாங்கள் எங்களால் இயன்ற எல்லா குரூரங்களையும் கட்டவிழ்த்து விட்டோம். அவன் எதையும் ஒத்துக் கொள்ளவில்லை. காசிபாபா என்ற பாகிஸ்தான் உளவுத்துறையின் ஏஜெண்டுக்கும் அவனுக்கும் தொடர்பிருக்கின்றது என நாங்கள் சொல்லிடச் சொன்னோம். ஆனாலும் அவன் கிஞ்சிற்றும் விட்டுக் கொடுத்திடவில்லை. அவன் மலைபோல் நின்று விட்டான். நான் சித்திரவதை செய்வதில் கடுமையானவன். யாரை வேண்டுமானாலும் பணிய வைத்திடுபவன் என்ற பெயரையும் புகழையும் பெற்றவன். என்னுடைய சித்திரவதைக்குப் பின்னும் ஒருவன் குற்றமற்றவனாக வருகின்றான் என்றால் எவனும் அவனை சீண்டிட முடியாது. அவனை நல்லவன் என்றே மொத்த காவல் துறையும் எடுத்துக் கொள்ளும்.

பர்வேஷ் பாரி இந்தப் பேட்டியை ஒரு பேட்டி என்ற அளவில் அல்லாமல் தனிப்பட்ட சம்பாஷனை என்ற பெயரில் டிரேவிந்தர் சிங் என்ற கஷ்மீரின் சிறப்புப் படையின் தலைவரிடமிருந்து கறந்த தகவலாகும்.

இதனை தெஹல்கா பாணி என்றும் சொல்வார்கள்.

டிரேவிந்தர சிங் தான் கொடுமையானவன் சித்திரவதைச் செய்பவன் என்பனவற்றை எள்ளளவும் மறைப்பவனல்ல. ஒரு தொலைக்காட்சியில் இப்படி பேட்டிக் கொடுத்தான். சித்திரவதை தான் தீவிரவாதத்தை தடுக்கும் ஒரே வழி நான் அதை நாட்டுக்காக செய்கின்றேன். (அதே ஆதாரம் அதே பக்கம்)

உண்மையில் அப்பாவிகளை இவன் செய்யும் தீவிரவாத செயல்களை ஒத்துக் கொள்வதற்கே இவன் சித்திரவதைகளைச் செய்கின்றான். பதவி உயர்வும் பணமும் தான் இவனது குறிக்கோள்.

இதே அப்சல் குருவின் குடும்பத்தில் இருந்த கடைசி காசு வரைக்கும் கறந்தெடுத்தவன் இவன். இறுதியில் அவனை தூக்கு மேடையில் கொண்டு நிறுத்தி விட்டான்.

## அப்சல் குருவே இலக்கு:

அப்சல் குருவை தூக்கிலே போட்டுத்தான் எல்லா உண்மைகளையும் மண்மூடிப்போகச் செய்திட வேண்டும் என்பதை இன்னொரு நிகழ்வு உண்மைப் படுத்தும்.

காவல்துறையினர் நீதிமன்றங்களில் அவனுடைய குற்றங்களை நிரூபிக்க வேண்டும் என்பதை விட மக்கள் மன்றத்தில் அவனை குற்றவாளியாகக் காட்டிட வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தார்கள். இதற்காக ஒரு பெரும் ஏற்பாட்டைச் செய்தார்கள். அது அப்சல் குருவை பிடித்து வந்து நான் தான் குற்றவாளி என தொலைக்காட்சியின் முன் சொல்லிட வைத்தார்கள்.

**தொலைக்காட்சிப்பேட்டி:** டிசம்பர், 13, 2001 இல் நாடாளுமன்றத் தாக்குதல் முயற்சி நடைபெற்று டிசம்பர் 20 2001ல் தொலைக்காட்சி பேட்டி எடுத்தன

இந்த பேட்டிகள் எங்கு வைத்து எடுக்கப்பட்டன என்பது இன்னும் விநோதமானது.

இந்த பேட்டி டெல்லியிலுள்ள சிறப்பு காவல் நிலையத்தின் அலுவலகத்தில் வைத்து எடுக்கப்படுகின்றது. பேட்டிகளை ஒருங்கிணைத்து வழிநடத்திக் கொண்டிருந்தவர் காவல் துறையின் ஸ்பெஷல் செல் பிரிவின் தலைவர் ராஜ்பிர் சிங். கஷ்மீர் எஸ்.டி.எஃப்க்குப் அடுத்ததாக நாடாளுமன்ற தாக்குதலின் மொத்த மூளையும் இவர் தான். அப்சல் குருவை தூக்கில் போட்டு அரசு முகவாண்மைகளின் சதிகளை மொத்தமாக மறைத்திட வெகு நாட்களுக்கு முன்னரே முடிவு செய்திருந்தார் இவர்.

பேட்டியின் போது அப்சல் குருவிடம் ஒரு கேள்வி. ஒசாமா பின் லேடன் அவர்கள்

பற்றிய இலக்கியங்கள் SAR ஜீலானியிடம் இருந்தனவா?

இந்தக்கேள்விக்கு அப்சல்குரு SARஜீலானி என்பவரைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது எனப்பதில் சொல்லுகின்றார். உடனேயே டெல்லி சிறப்புப்பிரிவு படையைச் சார்ந்த ராஜ்பிர்சிங் காட்சிகளை நிறுத்த சொல்லுகின்றார். இதனை நீதிமன்றம் இப்படிப்பதிவு செய்கின்றது.

ஷஹீர்கான் ஆஜ்தக் என்ற தொலைக்காட்சி செய்தி நிறுவனத்தின் முதன்மை செய்தியாளர் சிறப்பு நீதிமன்றத்தில் இப்படி கூறினார்:

"நான் ஆஜ்தக் டிவி சானலில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பணியாற்றி வருகின்றேன். நான் குற்றம் சுமத்தப்பட்ட முஹம்மத் அப்சல்குரு என்பவரை 20 டிசம்பர் 2001ல் டெல்லி சிறப்பு காவல் பிரிவின் லோடி ரோடு அலுவலகத்தில் வைத்துப் பேட்டிக் கண்டேன். இந்த பேட்டி 15 நிமிடங்கள் தொடர்ந்தன.

நான் அப்சலிடம் கேட்டக் கேள்வி SAR ஜீலானி இடமிருந்து ஒசாமா பின்லேடன் பற்றி இலக்கியங்கள் எதுவும் கைப்பற்றப்பட்டனவா? என்பதாகும்

அப்சல் குரு தன்னுடைய பதிலில் தனக்கு எதுவும் தெரியாது எனக் கூறினார்.

எனக்குப்பின் அதாவது ஆஜ்தக் தொலைக்காட்சிக்குப் பின் வேறு சில தொலைக்காட்சிகளும் பேட்டி எடுத்தன. நான் பேட்டி எடுக்கும்போது என்.டி.டி.வி தொலைக்காட்சியை சார்ந்தவர்களும் அங்கு இருந்தார்கள். நான் ஆஜ்தக் தொலைக் காட்சிக்காக பேட்டி எடுத்த பின் சில தொலைக்காட்சி நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் என்னிடம் ஜீலானியின் நாடாளுமன்றத் தாக்குதலில் பங்கு பற்றி கேட்டார்கள். நான் அவர்களிடம் ஜீலானி அப்பாவி எனக் கூறினேன். உடனேயே காவல் துறை துணை ஆணையர் ராஜ்பீர்சிங் எழுந்து என்னிடம் ஜீலானி பற்றி யாரிடமும் எதுவும் சொல்லிடக் கூடாது என்றார். இந்த சம்பவம் சாட்சியம் எண் 4-கின் முன்னாலேயே நடந்தது. குற்றம் சாட்டப்பெற்ற ஏனையோரை பேட்டிக் காண எங்களை அனுமதிக்கவில்லை.

அதன் பின் ராஜ்பீர்சிங் எழுந்தார். என்னிடம் வந்தார். அவர் குற்றம் சுமத்தப்பட்ட அப்சல் குருவிடம் SAR ஜீலானியைப் பற்றி யார் கேள்வி கேட்டாலும் எதுவும் சொல்ல வேண்டாம் என என்னிடம் சொன்னதும் உண்மையே.

ஆனால் ராஜ்பீர்சிங் இப்படிச் சொல்லிடும் போது நான் அப்சல்குருவைப் பேட்டி எடுத்து முடித்திருந்தேன்.

அதன்பின் ராஜ்பீர்சிங் என்னிடம் வந்து ஜீலானி பற்றி அப்சல் குரு சொன்னவற்றை தொலைக்காட்சியில் காட்டிட வேண்டாம் எனக்கூறினார். அதேபோல் நாங்கள் 20 டிசம்பர் 2001 மாலை 5 மணிக்கு இந்தப் பேட்டியை ஒளிபரப்பு செய்த போது அந்த வரிகளை விலக்கிக் கொண்டோம். ஆனால் 100 நாட்களுக்குப் பின் நாங்கள் மறு ஒளிபரப்பு செய்தபோது அந்த வரிகளையும் சேர்த்துதான் ஒளிபரப்புச் செய்தோம்.

நீதிமன்ற பதிவுகளிலிருந்து: (PUDR: report december 13 Terror over democrasy page 208, 209, 210 deposition of aaj tak principal correspondent oct 10 2002 dw4)

இங்கே நாம் கவனிக்க வேண்டியது எல்லோமே முன்னரே முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. அப்சல் குருவை மக்கள் மன்றத்தில் பிரதான குற்றவாளியாகக் காட்டி விட்டு அவனை தூக்கில் போட்டு மொத்த சதியையும் ஒன்றாக மூடி விட வேண்டும் என்பதே தொடக்க நாள் முதல் திட்டம்.

அதனால் காவல் நிலையத்தில் வைத்த ஒரே ஒரு குற்றம் சுமத்தப்பட்டரை பேட்டி எடுத்திருக்கிறார்கள். மக்கள் மன்றத்தில் அவரது வாயைக் கொண்டே அவரை குற்றவாளி என சொல்லிட வைத்த பின்பு சாட்சியங்கள் சட்டத்தின் சீரான நடவடிக்கைகள் எல்லாம் எதற்கு?

குற்றம் நிரூபிக்கப்படும் வரை குற்றம் சுமத்தப்பட்டவரை "நிரபராதி" என்றே கொள்ள வேண்டும் என்ற சட்டத்தின் பொன்னான கோட்பாடுகளை காவல்துறை காற்றிலே பறக்க விட்டது. நீதித்துறை இதனை கண்டித்தது. ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் மீது எந்த நடவடிக்கையுமில்லை.

# அப்சல்குரு பற்றிய திரைப்படம்

ஆனால் அப்சல் குரு விவகாரத்தில் குறிப்பாக நாடாளுமன்ற தாக்குதலில் இஃது இன்னும் ஒருபடி மேலே நடந்தது. அதாவது காவல்துறை ஜோடித்த மொத்தப் பொய் வழக்கையும் மையமாகக் கொண்டு ஒருபடமே எடுக்கப்பட்டது. இதை ஸீ நியூஸ் நிறுவனம் எடுத்தது. திரைப்படத்தின் பெயர் "டிசம்பர் 13". வழக்கு நடந்துக் கொண்டிருக்கும் போது படம் ஓடிக் கொண்டிருக்கிறது. படத்தில் எல்லோருக்கும் தூக்கு தண்டனை வழங்கப்படுகின்றது. அந்த தூக்குத் தண்டனையே தீர்ப்பிலும் கீழ் நீதிமன்றத்தால் வழங்கப்படுகின்றது. தீர்ப்பு இப்படித்தான் இருக்கவேண்டும் எனத் திரைப்படம் நீதிமன்றங்களுக்கு அழுத்தங்களை தந்தது. அதுதான் மக்கள் எதிர்பார்க்கும் தீர்ப்பு என்றது திரைப்படம்.

அதாவது வழக்கு நடந்து முடிவதற்கு முன்னரே முஸ்லிம்கள் குறிப்பாக கஷ்மீர் முஸ்லிம்கள் தீவிரவாதிகள் என்றும் மக்கள் மனதில் பதிய வைத்து விட்டார்கள். இனி வழக்கில் என்ன நடந்தால் என்ன? மக்களில் சிலர் தூக்கு எப்போது எனக் கேட்டார்கள். திரையில் பார்ப்பதெல்லாம் நிஜம் என்று நம்பும் மக்கள் தூக்குப் போட்டாகி விட்டதே என்பார்கள். தூக்கில் போடாவிட்டால் என்ன நமது அரசு தீவிரவாதிகளை விட்டுவிடுகின்றதே இதனால் தான் நாட்டில் தீவிரவாதம் பெருகுகின்றது என்பார்கள்.

நாட்டில் நடப்பிலிருக்கும் சட்டங்களின் படி குற்றம் சுமத்தப் பட்டவர்களை தொலைக்காட்சியில் காட்டுவதே தவறு. ஆனால் அவர்களை பேட்டியும் எடுக்கின்றார்கள். திரைப்படமும் எடுக்கின்றார்கள்.

**உச்சநீதிமன்றத்தின் உச்சபட்ச (அ)நீதி:**

இப்படிப் படம் எடுப்பது தவறு, அதை திரையிட்டது தவறு, அதை உடனேயே நிறுத்த வேண்டும் என நீதிமன்றம் சென்றார்கள். டெல்லி உயர் நீதிமன்றம் ஸ்டே ஐ தடையை வழங்கியது. படமெடுத்தவர்கள் உச்ச நீதிமன்றத்தை அணுகினார்கள். உச்சநீதிமன்றம் நீதிபதிகள் ஊடகங்களின் அழுத்தங்களுக்கு ஆளாகமாட்டார்கள் எனக்கூறி டெல்லி உயர்நீதிமன்றம் விதித்த தடைய அகற்றியது. திரைப்படம் தங்குதடையின்றி ஓடியது. இறுதியில் திரைப்படத்தில் தரப்பட்ட தண்டனையே குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு தரப்பட்டது. கீழ்நீதிமன்ற நீதிபதி திங்காரா கங்காரா என்பவரால் வழங்கப்பட்ட இந்த மொத்த தீர்ப்பும் உயர்நீதிமன்றத்தில் பல திருத்தங்களுக்கும் தலைகீழ் மாற்றங்களுக்கும் உள்ளாகியது.

திரைப்படத்தில் காட்டப்பட்டதைப் போல் நாடாளுமன்ற தாக்குதலின் மூளை என குற்றம் சாட்டப்பட்ட டெல்லி பல்கலைகழக பேராசிரியர் SAR ஜீலானி அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப் பெற்றது. ஆனால் உயர் நீதி மன்றம் அவரை விடுவித்தது.

உச்சநீதிமன்றத்தின் அநீதியும் அந்த திரைப்படத்தின் தாக்கமும் என்ன விளைவுகளை ஏற்படுத்தியது என்பதை நந்திதா ஹாக்சர் என்ற மூத்த வழக்கறிஞர் இப்படி குறிப்பிடுகின்றார்:The Supreme court however vacated the stay on grounds that judges could not be influenced. it failed to appreciate how such film are responsible for creating a climate of fear and mistrust.Today even post acquittal Geelani cannot get a house on rent. His children find it hard to lead a normal life(source:13 december A Reader with an introduction by Arunthathi Rai Page no:9)

அதாவது உச்சநீதிமன்றம் அந்த தடையை நீக்கிற்று. நீதிபதிகள் ஊடகங்களின் பாதிப்புகளுக்கு உள்ளாகமாட்டார்கள் என காரணம் சொன்னது. அதுபோன்ற திரைப்படங்கள் மக்களிடையே அச்சத்தையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்துவதில்

*பொறுப்பு வகிக்கின்றன என்பதை கண்டு கொள்ள உச்சநீதிமன்றம் தவறிவிட்டது. இப்போது ஜீலானி வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டார். ஆனால் அவர் ஒரு சாதாரண வாழ்க்கையை மக்கள் மத்தியில் நடத்துவதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றார். அவருக்கு ஒரு வாடகை வீடு கிடைப்பதில்லை. அவருடைய குழந்தைகளும் ஒரு சராசரி வாழ்க்கையை நடத்திட முடிவதில்லை (டிசம்பர்13* A Reader page no9*)*

*ஆனால் அப்சல்குருவுக்கு திரைப்படத்தில் தரப்பட்ட தண்டனை மக்கள் மனதில் கடைசிவரை நீடித்தது.*

## பொடா

***அப்சல்குரு விவகாரத்தில் இன்னும் பல விளையாட்டுக்கள்:*** *நாடாளுமன்றத் தாக்குதல் முயற்சி டிசம்பர் 13 2001ல் நடைபெற்று அப்சல் குருவை டிசம்பர் 15 2001 ஆம் ஆண்டு கைது செய்தார்கள். பொடா என்ற பாசிச பயங்கரவாத சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். டிசம்பர் 20ம் நாள் நாடாளுமன்றத் தாக்குதலை பொடாவின் கீழ் கொண்டு வந்தார்கள்.*

*ஏனெனில் பொடாவின் கீழ் வாங்கப்படும் வாக்குமூலம் சட்டப்படி செல்லும். அதைக் கொண்டே அவனை தண்டிக்கலாம். அத்தோடு தனி நீதிமன்றம் அமைக்கவும் அது வழிவகுத்தது.*

*இதில் கவனிக்கப்படவேண்டிய இன்னொது விவகாரம் என்னவெனில் பொடாவைக் கொண்டு வருவதற்காக திட்டமிடப்பட்டதே இந்த நாடாளுமன்றத் தாக்குதல். அதுபோது நாட்டை ஆட்சி செய்து கொண்டு இருந்த பாரதீய ஜனதா கட்சியின் ஊழல் ஊரெல்லாம் நாடெல்லாம் பரவி நாடாளுமன்றத்தையும் அதிர்வுகளுக்குள்ளாக்கி கொண்டிருந்தது.*

***ஒப்புதல் வாக்குமூலங்கள் நிராகரிக்கப்பட்டன :*** *தொடர் சித்திரவதை பொடா இவையெல்லாவற்றையும் பயன்படுத்தி வாங்கப்பட்ட வாக்குமூலத்தையும் கூட உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. வழக்கறிஞர் நந்திதா இப்படி குறிப்பிட்டார் வழக்கின் புலனாய்வில் நடந்தது அனைத்தும் சட்டத்திற்கு புறம்பானவை. நீதிமன்றங்களே அக்கறையுடன் சாட்சியங்கள் புகுத்தப் பட்டுள்ளன, டெல்லி காவல் சிறப்பு நிலையத் தின் காவல் துறை அதிகாரிகள் சத்தியப் பிரமாணம் எடுத்து நீதிமன்றங்களில் பொய் சாட்சியம் சொன்னார்கள், அதேபோல் உச்ச நீதி மன்றம் காவல்துறையினர் அப்சல் குருவை சித்திரவதைச் செய்து ஒப்புதல் வாக்கு மூலங் களை பெற்றிருக்கின்றார்கள் என்பதை ஒத்துக் கொள்கின்றது.* December 13 A Reader Page : Arundhati Roy & Haksar Page No. 26/27

*உச்ச நீதி மன்றம் இப்படி சொன்னது*

"All these Lapses and violations of proceedural safeguards guaranteed in the statue itself impell us to hold that it is not safe to act on the alleged confessional statement of Afsal and Place reliance on this item of evidence on which the prosecution places heavy reliance"

Extracted from the Supreme Court Judgement 4/8/2005/ Nirmalang shree Mukerjee. Should Muhammed Afzal die. Page No.128.

*அதாவது வாக்குமூலங்கள் வாங்குவதில் சட்டங்கள் உறுதியளித்துள்ள பாதுகாப்புகளில் செய்யப்பட்டுள்ள அத்துமீறல்கள் தொய்வுகள் இவை எங்களை அப்சலின் இந்த வாக்குமூலங்களை சார்ந்திருப்பது சரியல்ல என்பதை உணர்த்துகின்றன. அதை ஒரு சாட்சியம் என எடுத்துக் கொள்வதும் சரியல்ல. ஆனால் அந்த வாக்குமூலத்தின் மீதுதான் அரசு அதிகமாகச் சார்ந்திருக்கின்றது.*

*இப்படி அப்சலின் வாக்கு மூலம் முற்றாக புறக்கணிக்கப்பட்டுவிட்டது. அப்சல் மீதான மொத்த வழக்கும் அவன் வழங்கிய வாக்கு மூலத்தை நம்பியே இருக்கின்றது. அது முற்றாகப் புறக்கணிக்கப்பட்ட பின் அவனை எப்படித் தூக்கில் போட முடியும்?*

## அப்சல்குரு தீவிரவாத அமைப்புகளைச் சார்ந்தவரா?

*நாடாளுமன்ற தாக்குதல் நடந்தவுடன் லஸ்கரே-இ-தொய்பா, ஜெய்சே முஹம்மது ஆகிய பாகிஸ்தான் அமைப்புகளைச் சார்ந்தவர்களே இந்த தாக்குதலை செய்தார்கள் எனப் பிரகடனப்படுத்தினார்கள். அத்வானி இதில் முன்னிலையில் நின்றார். இதனை*

அடிப்படையாகக் கொண்டு பாகிஸ்தானோடு ஒரு போருக்கு தயாரானார்கள். 10000 கோடி ரூபாய் செலவில் படைகள் எல்லைகள் நோக்கி நகர்த்தப்பட்டன. இந்த அவசர நடவடிக்கையில் நமது இந்திய இராணுவத்தினர் 800 பேர் இறந்தார்கள். 100 குழந்தைகள் மடிந்தார்கள் நிலத்தில் புதைத்த கண்ணிவெடிகளில் சிக்கி பலநூறு விவசாயிகள் மாண்டார்கள். அணு ஆயுதங்களைப் பற்றிய பேச்சுகளும் வந்தன. ஆனால் எந்த தீர்ப்பும் அப்சல் குருவோ மற்றவர்களோ தீவிரவாத அமைப்புகளைச் சார்ந்தவர்கள் என்பதை குறிப்பிடவில்லை. அவர்கள் யாரும் எந்த அமைப்பும் சார்ந்தவர்களல்லர். குறிப்பாக அப்சல் குரு 1990ல் நமது எல்லை பாதுகாப்பு படையிடம் சரணடைந்தவர். அன்று முதல் அவர் நமது பாதுகாப்பு படைகளின் கண்காணிப்பில் கீழிலிருந்தார். அப்படியிருக்க அவர் பாதுகாப்பு படைகளை விஞ்சி எதுவும் செய்திட இயலாது.

**பிரதான மூளை:** இத்தனைக்கும் மேலாக அப்சல் குருவின் பிரதான மூளை என்று யாரும் குறிப்பிடப்படவோ குற்றம் சாட்டப்படவோ இல்லை. நாடாளுமன்ற தாக்குதலின் பிரதான மூளை எனக் குற்றம் சாட்டப்பெற்றவர் ஜீலானிதான். ஆனால் அவரை அனைத்துக் குற்றங்களிலிருந்தும் விடுவித்து விட்டார்கள். இந்நிலையில் ஏன் அப்சல் குருவை தூக்கிலிட வேண்டும் எனத் துடிக்கின்றார்கள்.

## அப்சல்குருவுக்கு அடிக்கடி வந்த போன்

அப்சல் குரு தான் தனது வழக்கறிஞர் சுஷில் குமாருக்கு எழுதிய கடிதத்தில் எனக்கும் நாடாளுமன்ற தாக்குதலில் கொலை செய்யப்பட்ட முஹம்மத் என்பவருக்கும் பல தொலைபேசி அழைப்புகள் கஷ்மீர் எஸ்டிஎஃப்-ஐ சார்ந்த டிராவிந்தர் சிங் என்பவரிடமிருந்து தான் வந்தது என்பதை நீங்கள் எங்கள் செல்போன்களை ஆய்வு செய்தால் கண்டு கொள்ளலாம் என கூறியுள்ளார். (Arundhati Roy Dec-13 Page No.19)

ஆனால் இன்றளவும் அது குறித்து எந்த ஆய்வும் செயல்படவில்லை. அதனால் தான் இந்த எஸ்.டி.எஃப் என்ற கஷ்மீர் சிறப்புப் படையின் ஏற்பாட்டில் தான் நாடாளுமன்ற தாக்குதல் நடந்திருக்கின்றது என்கின்றது நாடாளுமன்ற தாக்குதலில் ஆய்வாளர்கள், அறிஞர்கள், ஜனநாயக உரிமைகளுக்கான மக்கள் கழகம் இவை வைக்கும் முறையீடு.

The Right thing to-do would be to a order a retrail Page XXI

அப்சலின் வழக்கை முற்றாக விருப்பு வெறுப்பற்ற ஒரு மறுஆய்வுக்கு உட்படுத்திட வேண்டும். அதேபோல் நாடாளுமன்ற தாக்குதல் பற்றியும் குழு புலனாய்விற்கு உத்தரவிட வேண்டும்.

நாடாளுமன்ற தாக்குதலில் உளவுத்துறையின் பங்கு, பாதுகாப்புப் படையினரின் பங்கு, கஷ்மீரில் இயங்கும் எஸ்.டி.எஃப் என்ற கிளர்ச்சிகளுக்கு எதிரான படைகளின் பங்கு, இவற்றை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். சாட்சியங்கள் வாக்கு மூலங்கள் இவற்றில் பல அத்துமீறல்கள் நடந்திருக்கின்றன என்பது ஏற்கனவே நீதிமன்றங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளன.

ஆனால் இந்தியாவில் எந்த அரசும் இதைச் செய்யும் என எதிர்ப்பார்ப்பதற்கில்லை - அருந்ததிராய் Dec 13 A Reader Page XXI

"Mohamed Afzal was a pawn in the design of the state" Page 13

முஹம்மத் அப்சல் அரசின் ஏற்பாட்டில் ஒரு பொம்மை - நிர்மலாங்ஹு முகர்ஜி.

அதாவது நிர்மலாங்ஹு முகர்ஜி அப்பட்டமாக அறிவிக்கின்றார் நாடாளுமன்ற தாக்குதலை (ஏற்பாடு செய்த) அரசின் கைகளில் இருந்த ஒரு பொம்மை தான் அஃப்சல். பக்கம் 13 A Reader

ஆனால் யாரும் கொலை செய்யப்படவும் இல்லை. தாக்குதல் நடந்த இடத்திற்கு அவன் செல்லவுமில்லை. இது இந்திய நாடாளுமன்ற தாக்குதல் என்பதால் இதன் எல்லாப் பகுதிகளும் எல்லோருடைய பங்கும் சரியாக சீராக திறந்த மனதுடன் ஆராயப்பட வேண்டும் - ஜனநாயக உரிமைகளுக்கான மக்கள் கழகம்.

எல்லா சாட்சியங்களும் தோற்றுப் போனதால் தான் மக்களின் மனங்களை திருப்திப்படுத்திட ஒரு தூக்கு ஒரு உயிர் பலி என தீர்ப்பளித்திருக்கின்றது உச்ச நீதி மன்றம்

**நாடாளுமன்ற தாக்குதலில் நமது பாதுகாப்பு முகவாண்மைகளின் உள்ளிருப்பு வேலை என்பதை ஊர்ஜிதப்படுத்தும் பிரிதொரு அத்தாட்சி.**

**ஹம்சா என்றொருவரை நமது நாடாளுமன்ற வளாகத்தில் வைத்துக் கொலை செய்தார்கள். இந்த ஹம்சா தீவிரவாதிகள் வந்த அம்பாசிடர் காரில் நாடாளுமன்றத்திற்குள் வந்தவர்களில் ஒருவன் எனவும் காட்டப்பட்டது**

**ஆனால் இவன் 2000ஆம் ஆண்டு முதலே எஸ்டிஎஃப் என்ற கஷ்மீரின் சிறப்புபடையின் பாதுகாப்பில் இருப்பவன். இவனை மராட்டிய மாநிலத்தின் தானே மாவட்ட காவல்துறையினர் 2000ஆம் ஆண்டில் கைது செய்து ஜம்மு கஷ்மீர் காவல் துறையிடம் ஒப்படைத்திருக்கின்றனர். 2000ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டு காவல் துறையிடம் ஒப்படைக்கப் பட்டவர் எப்படி 2001 இல் நாடாளுமன்றத்தைத் தாக்க வந்தான்.**

**இது நாடாளுமன்ற தாக்குதல் முயற்சியில் எஸ்.டி.எஃப் என்ற சிறப்புப் படையின் கைகள் இருக்கின்றன என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகின்றது**

*நரபலி நிலையிலிருந்து நம் நாடு இன்னும் மீளவில்லை.*

## மொத்த நாடாளுமன்ற தாக்குதலும் ஒரு மகத்தான உள்ளிருப்பு வேலை

*கசாப் விவகாரம் அப்சல் குரு விவகாரம் இந்த இரண்டும் நமக்கு பல படிப்பினைகளைத் தந்திடும்.*

*1. இங்கே உளவுத்துறை, கஷ்மீரின் சிறப்பு பாதுகாப்பு படை இவற்றில் ஒரு முஸ்லிமை பிரதிநிதியாக காட்டுவது, அதாவது மொத்த தீவிரவாத தாக்குதலுக்கும் ஒரு முஸ்லிமையே பிரதிநிதியாக்குவது, இதனால் தொடர்ந்து முஸ்லீம்களை "தீவிரவாதிகள்" எந்த மனசாட்சியுமில்லாமல் தாக்குதலை தொடர்ந்து செய்து கொண்டிருப்பவர்கள் என்ற எண்ணங்களை விதைத்துக் கொண்டே இருப்பது, இப்படி முஸ்லிம்களை முற்றாக வெறுக்கின்ற ஒரு தலைமுறையை வளர்த்தெடுத்து விட்டார்கள். இது இவர்கள் இந்த நாட்டுக்கு செய்த மாபெரும் துரோகம்.*

*2. இப்படி மொத்த தாக்குதலுக்கும் ஒரு முஸ்லிமை பிரதிநிதித்துவப்படுத்தி அவருக்கு தூக்குத் தண்டனை வழங்கியவுடன் உள்ளிருப்பு வேலைகளைச் செய்த உளவுத்துறையின் கறுப்பாடுகளும் பாதுகாக்கப்பட்டு விடுகின்றனர். இவர்களால் அபிநவ் பாரத் போன்ற இவர்களின் எடுபிடிகளும் உண்மையான குற்றவாளிகளும் பாதுகாக்கப் படுகின்றார்கள். அவர்கள் எப்போதும் பிடிபடாமல் குண்டு வைப்புகளையும் தீவிரவாத தாக்குதல்களையும் தொடருகின்றார்கள். இதனால் தான் இந்தியாவில் குண்டுவடிப்புகள் தொய்வின்றி நடக்கின்றன.*

*3. அப்சல் குரு கசாப் இவர்கள் இருவருக்கும் வழங்கிய தீர்ப்பில் நமது உச்ச நீதி மன்றம் தரப்பட்ட சாட்சியங்களையும் ஆவணங்களையும் ஆய்வு செய்து தீர்ப்பு வழங்கியதை விட நாட்டு மக்களின் மனசாட்சியை திருப்திபடுத்துவதற்காகவே இவர்களை தூக்கில் போட வேண்டும் என கூறியது.* "The attack on the indian parliment resulted in heavy casualities has shaken the entire nation on the collective conscience of the society will only be satisfied if capital punishment awarded to the offendent"

*இதே சொற்களைத் தான் கசாப்-இன் விவகாரத்திலும் உச்சநீதிமன்றம் கூறியது இப்படி.* The case has shocked the collective conscience of the indian people as few others cases have Page 350 of the supreme court judgement on 26/11 delivered on....

அதாவது இந்த வழக்கு இந்திய மக்களின் ஒட்டுமொத்தமான மனசாட்சியையும் உலுக்கிற்று வேறு சில வழக்குகளைப்போல். பக்கம் 350 மும்பை தாக்குதலில் உச்ச நீதி மன்ற தீர்ப்பிலிருந்து.

இந்திய அரசியல் நிர்ணய சட்டத்திற்கு அப்பால் நின்று ஒரு புதுக்கொள்கையை உச்ச நீதிமன்றம் வகுக்கின்றது. அதுதான் நாட்டுமக்களின் ஒட்டுமொத்தமான மனசாட்சி என்ற கொள்கை.

மட்டுமல்லாமல் உச்சநீதிமன்றம் வேறு சில வழக்குகளைப்போல் என்ற சொற்களையும் பயன்படுத்தியுள்ளது. இந்தசொற்கள் வரும் நாட்களில் பல வழக்குகளில் அப்பாவிகளைத் தூக்கிலிடவும் அபிநவ் பாரத் போன்ற அமைப்புகளின் தளகர்த்தர்களை காப்பாற்றவும் பயன்படும்.

காலப்போக்கில் உயர் நீதிமன்றங்களும் மாவட்ட முதன்மை நீதிபதிகளும் இந்த உச்ச நீதிமன்ற சொற்களை பயன்படுத்துவார்கள். அப்பாவிகளை தண்டிப்பார்கள்.

காலப்போக்கில் பல உச்சநீதிமன்ற தீர்ப்புகளைப்போல் ஒரு சட்டவிதி என்றாகி விடும்.

இதனை இப்போதே நாம் எதிர்த்தாக வேண்டும். இதில் நாட்டு மக்களின் ஒட்டுமொத்த மனசாட்சி என்ற சொற்களுக்கு என்ன இலக்கணம்? வரையறை? மீடியாக்களில் அடிக்கடி குற்றவாளி எனக்காட்டப்படுவதே போதுமா? உச்ச நீதி மன்றம் தான் சொல்லும் வேறு சில வழக்குகளைப்போல் என்பதில் என்னென்ன வழக்குகள் வருகின்றன? அந்த வழக்குகளில் உச்ச நீதிமன்றம் எப்படி ஒட்டுமொத்த மக்களின் மனசாட்சியை அறிந்தது? இதுவும் இனி தெளிவுக்கு வந்தாக வேண்டும். இங்கே இன்னொரு கேள்வியும் எழுகின்றது. நாட்டின் மனசாட்சி உச்ச நீதிமன்றத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட விஷயமா? அப்பாவிகளை தூக்கிலே தொங்கவிடும் போது உலுங்காத கலங்காத மனசாட்சியும் ஒரு மனசாட்சியா? இந்திய குடிமக்களின் மனசாட்சி உச்சநீதிமன்றம் அப்பாவிகளைத் தூக்கிலே தொங்கவிடும் போதெல்லாம் உலுங்கும் என்பதை உச்ச நீதிமன்றம் உணர்ந்திட வேண்டும்.

4. அப்சல் குரு விவகாரத்தில் காவல்துறை நீதிமன்றங்களில் அவனுடைய குற்றங்களை நிரூபிக்க வேண்டும் என்பதை விட மக்கள் மன்றத்தில் அவனை ஒரு குற்றவாளியா காட்டிட வேண்டும்ட என்பதற்காக ஒரு பெரும் ஏற்பாட்டைச் செய்தது அஃது அப்சல் குருவை பிடித்து வந்து தொலைக்காட்சி முன் அமர வைத்து நான் தான் குற்றவாளி எனச் சொல்லிடச் செய்தார்கள்

ஆனால் அவன் உண்மையைச் சொல்லிட தலைப்பட்டபோது காட்சியை துண்டித்துவிட்டார்கள்

டிசம்பர் 13 2001ல் நாடாளுமன்றத் தாக்கிடும் முயற்சி நடைபெற்றது குற்றம் சுமத்தப்பட்ட அப்சல் குருவை டிசம்பர் 20 2001ல் தொலைக்காட்சிகள் பேட்டி எடுக்கின்றன இந்த பேட்டி எங்குவைத்து எடுக்கின்றன என்பது இன்னும் விநோதமானது

இதில் நாம் பெறும் பாடம் என்னவெனில் முஸ்லிம்களை தீவிரவாதப் பரம்பரையினர் என மக்களை சகோதர சமுதாயத்தவர்களை நம்ப வைக்கும் ஒரு பெரும் முயற்சி இடைவிடாமல் நடந்து கொண்டிருக்கிறது

ஒரு முறை இதனை செய்து சாதித்து விட்டால் அதன் பின் முஸ்லிம்களை எப்படி எப்போது வேண்டுமானாலும் கூட்டாகக் கொலை செய்யலாம் என்ற அனுமதி லைசென்ஸ் எல்லோருக்கும் கிடைத்துவிடுகின்றது

இப்படி ஒரு முயற்சி இடைவிடாமல் நாட்டிலே நடந்து கொண்டிருக்கின்றது என்பதை அண்மையில் தஞ்சை பல்கலைக் கழகம் வெளியிட்ட நூல் ஒன்று தெள்ள தெளிவாக விளக்குகின்றது இப்படி: நவம்பர் 20 2012 இல் நமது உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பால் அப்சல் ஐயும் இன்னும் வரிசையில் இருக்கும் பலரையும் தூக்கிலிட முடியாது என்கின்றது தி ஹிந்து பத்திரிகை அத்தோடு ஓய்வு பெற்ற உச்ச நீதி மன்ற நீதிபதிகள் 13 வழக்குகளில் தாங்கள் வழங்கிய தூக்குத்தண்டனைகளை ஆயுள் தண்டனையாக மாற்றிட வேண்டும் என குடியரசு தலைவருக்கு எழுதிய கடிதம் நீதிமன்றங்கள் செய்து கொண்டிருந்த கொலைகளில் பெரும் திருப்பம்

**- எம்.ஜி.எம்**

# திருச்சி தமீமுன் அன்சாரி விவகாரம்

## தற்போது நடப்பது என்ன?

**மனநோயாளியான அவனுடைய மாமா:**

தஞ்சை தமிமுன் அன்சாரி என்ற அப்பாவியை பிடித்து வந்து ஒரு பெரிய பாகிஸ்தான் உளவாளி எனக் காட்டினார்கள் உளவுத்துறையினர்.

சாட்சியங்களையும் தடயங்களையும் உருவாக்கிட தலைப்பட்டன.

தமிமுன் அன்சாரி குடும்பத்தை தொடர்ந்து தொந்தரவு செய்து அவர்களுக்கு சொந்தமான கார்-ஐ கைப்பற்றி இருக்கின்றார்கள். அதை திருப்பி தந்திடாமல்




இது மூலம் தமிழகத்து முஸ்லிம்களும் பழிக்கப்பட வேண்டியவர்கள் என்றொரு பிரம்மையை மக்கள் மத்தியில் பதிய வைத்திட முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

ஆனால் அ.மார்க்ஸ் அவர்கள் தலைமையில் சென்ற உண்மை அறியும் குழு தான் செய்த ஆய்வின் மூலம் உளவுத்துறையின் பொய்யையும் புரட்டையும் அம்பலப் படுத்தியுள்ளது.

திக்குமுக்காடிபோன உளவுத்துறை காலந் தாழ்த்தி வருகின்றார்கள். இதற்காக ஒரு பெரும் போரையே நடத்தி முடித்து விட்டார்கள் வழக்கறிஞர் கென்னடி அவர்கள்.

இங்கே வழக்கு நடந்து கொண்டிருக்கும் போதே பாகிஸ்தானின் இலங்கை தூதரை பாகிஸ்தான் மாற்றி இருக்கின்றது என்றொரு காரணத்தைக் காட்டி வழக்கை மேலும் சிக்கலாக்கினர்.

வழக்கை சிக்கலாக்கினார்கள் என்றால் அன்சாரிக்கு பெயில் கிடைக்காமல் செய்து

விட்டார்கள். எனினும் வழக்கறிஞர் கென்னடி வழக்கறிஞர் கம்ரூத்தீன் ஆகியோர் தொடர்ந்து பிணை(பெயில்)க்காக வாதாடி வந்தார்கள்.

குற்றப்பத்திரிகையை 90 நாட்களுக்குள் தாக்கல் செய்திட இயலாது என்பது தான் உண்மை நிலை. ஆகவே அன்சாரிக்குப் பிணை கிடைப்பது என்பது சட்டப்படி தவிர்க்க இயலாத ஒன்று.

**NSA :** அதனால் வேறு வழியின்றி என்.எஸ்.ஏ என்ற தேசிய பாதுகாப்பு சட்டத்தை பாய்ச்சி இருக்கின்றார்கள். தேசிய பாதுகாப்புச் சட்டத்தை பாய்ச்சிட மேற்கொண்ட முயற்சிகளை குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய பயன்படுத்தி இருக்கலாம். ஆனால் தேசிய பாதுகாப்பு சட்டத்தில் போடுவதற்கென அரசு நிர்ணயித்துள்ள பணத்தை பெற முடியாது. ஆகவே என்.எஸ்.ஏ என்ற தேசிய பாதுகாப்பு சட்டத்தை பாய்ச்சி இருக்கின்றார்கள்.

முந்தைய அண்ணா திமுக ஆட்சியின் போதும் இப்படித்தான் நெல்லிக்குப்பத்தில் இரண்டு அப்பாவிகளைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்தார்கள் எந்த காரணமுமில்லாமல். அதன் பின் சுமார் எட்டு ஆண்டுகளுக்குப்பின் தான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்கள்.

ஆகவே அதிமுக ஆட்சியில் தேசிய பாதுகாப்பு சட்டம் என்பது "75" வழக்குக்கு ஒப்பானது. ஆனால் அன்சாரி விவகாரத்தில் அதற்கான மீளாய்வுக்கு Review Committee உடனேயே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

**அ மார்க்ஸ்:**

இந்த மீளாய்வு கமிட்டியில் அ.மார்க்ஸ் அவர்கள் தனது அறிக்கையிலுள்ள அனைத்யையும் ஒருங்கிணைத்து வாதாடி இருக்கின்றார். இதனை 28 12 2012 தி ஹிந்து பத்திரிகையும் வெளியிட்டிருந்தது. அ.மார்க்ஸ் தனது வாதத்தில்:

**கைது எங்கே வைத்து:** அன்சாரி திருச்சி விமான நிலையத்தில் வைத்து காவல் துறையினரைக் கண்டவுடன் பயந்து ஓடிவிட்டதாகவும் ஒரு மரக்கடையின் பக்கத்தில் வைத்து கைது செய்ததாகவும கூறியுள்ளார்கள். இது ஐமுக்காளத்தில் வடிகட்டின பொய்.

விமான நிலையத்தில் அன்சாரி விமானத்தில் ஏறும் அனுமதி சீட்டையும் போர்டிங் பாஸ் வரைக்கும் வாங்கிய பின்னர் தான் கைது செய்யப்பட்டார் என்ற உண்மை காவல்துறையினர் மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டுகள் அனைத்தையும் உறுதிபடுத்திட போதுமானது என்பதை தெளிவுப்படுத்தினார்

**லேப்டாப்:** கைது செய்யப்பட்ட பின் அன்சாரியை சித்ரவதை செய்து அவனுடைய மனைவிக்கு போன் செய்ய சொல்லி கட்டாயப்படுத்தினார்கள். அந்த போனில் ரவி என்றொருவர் வீட்டுக்கு வருவார். அவரிடம் தனது லேப்டாப்-ஐ கொடுக்க வேண்டும் எனவும் சொல்லிடச் சொன்னார்கள்.

இந்த ரவி என்பவர் வேறு யாருமல்ல. காவல்துறையைச் சார்ந்தவர் தான் என்பதையும் தெளிவுபடுத்தினார்கள் பேராசிரியர் அ.மார்க்ஸ் அவர்கள்.

இப்படி தன் வாதங்களை முன்வைத்து தேசிய பாதுகாப்புச் சட்டத்தை அவன் மீது பாய்ச்சியது தவறு. அதனை விலக்கிட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

**விடுதலை:** தேசிய பாதுகாப்பு சட்டம் விலக்கப்படுமேயானால் உடனேயே அன்சாரி பிணையில் வந்து விடுவார். காரணம் அவருக்கு திருச்சி நீதி மன்றம் ஏற்கனவே பிணை வழங்கியுள்ளது. இது ஒரு நாடெங்கும் உளவுத்துறையால் முஸ்லிம்கள் மீது திட்டமிட்டு பாய்ச்சப்படும் பொய் வழக்குகளில் ஒன்று என்றால் தேசிய பாதுகாப்பு சட்டம் அப்படியே நீடிக்கும். அந்த நிலையில் நாட்டில் பொய் வழக்குகளால் பொசுங்கி போன குடும்பங்களுள் ஒன்றாக அன்சாரியின் குடும்பமும் ஆக்கப்பட்டுவிடும்.

இதில் சமர்பிக்கப்பட்டுள்ள உண்மைகளை இந்த மீளாய்வுக் கமிட்டி யதார்த்தமாக பார்த்தால் அன்சாரியின் குடும்பம் காப்பாற்றப்படலாம்

**மனநோயாளி:** அன்சாரியை சிறைக்கு பார்க்க செல்லும் போதெல்லாம் அவருடைய மாமாவை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்கள். அதே போல் அடிக்கடி வீட்டுக்கு சென்றும் தொல்லைகளை கொடுத்துள்ளார்கள். காரை கொடு, வண்டியை கொடு என்றெல்லாம் பல அழுத்தங்கள். இவற்றால் அவனுடைய மாமா மனநோயாளியாகிவிட்டார். ஆகவே முதல் சேதாரம் நடந்தேறி விட்டது.

நீதி சிறுபான்மையினருக்கில்லை. அவர்கள் நீதியின் பெயரால் கொடுமையையே சந்திப்பார்கள் என்று மீண்டுமொரு முறை உண்மைப்படுத்தப்படுகின்றது - எம் ஜி எம்

# தேசியப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் குண்டர் சட்டம் தொடர்பான அறிவுரைக் குழுமத்தின் முன் திரு.மார்க்ஸ் அவர்கள் அளித்த அறிக்கை

*தேசியப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் குண்டர் சட்டம் தொடர்பான அறிவுரைக் குழுமம் முன் பணிந்து அளிக்கப்படுகிறது*

*இலங்கை வழியாக இராணுவ இரகசியங்களைப் பாகிஸ்தானுக்குக் கடத்தியதாகக் கைது செய்யப்பட்டு சென்ற* ***17.09.2012*** *முதல் நீதிமன்றக் காவலில் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த தஞ்சையைச் சேர்ந்த தமிமுன் அன்சாரியைத் (த/பெ: அப்துல் ரஹ்மான்) தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் (1980) 3(1)(*a*) பிரிவின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகச் சென்ற* ***05-12-2012*** *அன்று பொது (சட்டம் & ஒழுங்கு) துறை செயலர் உத்தரவிட்டுள்ளார் (கடித எண். 4619/ச(ம)ஒ-எப்/2012). தமிமுன் அன்சாரியை நன்கு தெரிந்தவன் என்கிற முறையிலும், இவர் மீதான ஆதார வழக்கு குறித்த உண்மைகளை நேரில் சென்று ஆராய்ந்தவன் என்கிற முறையிலும் கீழ்க்கண்ட உண்மைகளைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

## அ. ஆதார வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் கண்டுள்ள உண்மைக்குப் புறம்பான செய்திகளும் முரண்களும்:


*1. திருச்சி 'கியூ' பிரிவு போலீசார் அவர் மீது பதிவு செய்துள்ள வழக்கில் (மு.த.அ எண் 1/2012. குற்றப் பிரிவுகள்;* The Official Secret Act *3, 4* & *9 மற்றும்* IPC *120(*B*)). இவருடன் சக குற்றவாளிகளாக இலங்கை கொழும்பு நகரைச் சேர்ந்த ஷாஜி மற்றும் லங்கா ஷாஜி ஆகியோரும் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரி அமீர் சுபைர் சித்திக் என்பவரும் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் பாகிஸ்தான் நாட்டு உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐயின் தென் ஆசியப் பகுதியின் முக்கிய முகவர்கள் என்பதாகவும் கியூ பிரிவு போலீசார் கூறுகின்றனர்.*

*"மத விரோதம் காரணமாகவும் சொந்த லாபத்திற்காகவும்" தமிம் அன்சாரி இதைச் செய்துள்ளார் எனவும், (1) இந்தியாவை இஸ்லாமிய நாடாக்கும் நோக்கத்துடனும், (2) வட இந்தியாவைப் போல தென்னிந்தியாவிலும் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தி இந்திய அரசை அச்சுறுத்தும் நோக்கத்துடனும் இச்சதி வேலை தொடங்கப்பட்டுள்ளதாகவும் முதல் தகவல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.*

*2. இக்குற்றச்சாட்டுகள் அத்தனையும் பொய்யானவை என்பது மட்டுமல்ல இவற்றுக்கு எந்த ஆதாரமும் கியூ பிரிவு போலீசால் முன்வைக்கப்படவில்லை. முதல் தகவல் அறிக்கையில் உள்ள பல செய்திகள் பொய்யானவை. இது குறித்த உண்மைகளை நேரில் சென்று சென்ற செப்டம்பர் 21, 22, 23 தேதிகளில் நானும் தமிழகத்தைச் சேர்ந்த மூத்த மனித உரிமைப் போராளிகள் பேரா.கல்யாணி, எஸ்.வி.இராஜதுரை, பேரா. கோச்சடை, கோ.சுகுமாரன், வழக்குரைஞர் கமருதீன் ஆகியோர் நேரில் சென்று விசாரித்தோம். நாங்கள் அறிந்த உண்மைகள் வருமாறு:*

*3. அதிராம்பட்டினத்தைச் சேர்ந்த தமீம் அன்சாரி (35) தமிழில் முதுகலைப்பட்டம் பயின்றவர். அவரது தந்தை அப்துல் ரஹ்மான் மற்றும் மூன்று சகோதரர்கள் வெளிநாடுகளில் உள்ளனர். அன்சாரிக்கு மனைவியும் ஒரு ஆண் குழந்தையும் உண்டு. மாணவப் பருவம் தொட்டு மார்க்சிஸ்ட் கட்சியின் வெகு மக்கள் அமைப்புகளில் முக்கிய பொறுப்புகளில் இருந்துள்ளார். இந்திய மாணவர் சங்கத்தின் தஞ்சை மாவட்டச் செயலாளராகவும் மாநிலத் துணைச் செயலாளராகவும் பதவி வகித்துள்ளார். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலும் செயல்பட்டுள்ளார். அறிவியல் மன்றத்திலும் (*Science Forum*) மாவட்டச் செயலாளராக இருமுறை இருந்துள்ளார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் பல ஆண்டுகளாக உறுப்பினராக இருந்துள்ளார். அன்சாரி எந்த*

நாளிலும் முஸ்லிம் அமைப்புகளில் இருந்ததில்லை. அவரது தொடர்புகள் யாவும் இடதுசாரி அமைப்புகளுடனேயே இருந்துள்ளன. இதற்கு முன் அவர் எந்த வழக்கிலுமோ, குற்றச்சாட்டுகளிலுமோ தொடர்பு படுத்தப்பட்டதுமில்லை. கட்டுப்பாட்டிற்குப் பெயர் பெற்ற மார்க்ஸ்ட் கட்சியில் அவர் இருந்த காலத்தில் அவர் மீது இப்படியான தொடர்புகளுக்காகக் கட்சி நடவடிக்கை ஏதும் எடுக்ககப்பட்டதுமில்லை. கல்லூரியில் படித்த காலத்தில் அவர் தேசிய மாணவர் படையில் இருந்து சான்றிதழ்கள் பெற்றவர். பொதுப் பணிகளில் பங்கு பெற்ற செய்திகள் பல பத்திரிக்கைகளில் வந்துள்ளன. குடந்தையில் சில ஆண்டுகளுக்கு முன் பள்ளி



ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டு 90க்கும் மேற்பட்ட குழந்தைகள் தீயில் கருகிச் செத்தபோது தனது உயிரைப் பொருட்படுத்தாமல் பல குழந்தைகளைக் காப்பாற்றியவர் எனப் பலராலும் பாராட்டப்பட்டவர்.

தஞ்சையிலிருந்து கொண்டு மருந்து ஏற்றுமதி முதலான பல தொழில்களை முயற்சி செய்து பெரிய வெற்றி அடையாத அவர், இறுதியில் இலங்கைத் தலைநகரம் கொழும்பில் உள்ள ஹாஜி என்கிற சித்திக் அலி எனப்படும் வெங்காய வியாபாரிக்கு வெங்காயம், உருளைக்கிழங்கு முதலியவற்றை ஏற்றுமதி செய்துள்ளார். நீலகிரி முதலான இடங்களுக்குச் சென்று இவற்றைக் கொள்முதல் செய்து கப்பலில் அனுப்பியுள்ளார். இது தொடர்பாக அன்சாரி இதுவரை நான்கு முறை இலங்கை சென்று வந்துள்ளார். கிழக்குக் கடற்கரையோர முஸ்லிம்கள் இலங்கையுடன் பாரம்பரியமாகக் கடல் வணிகம் செய்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த வணிக உறவில் ஹாஜிக்கும் அன்சாரிக்கும் இடையே ஒரு சிக்கல் உருவாகியுள்ளது. அன்சாரி அனுப்பிய ஒரு லோட் வெங்காயம் அழுகி விட்டதெனக் கூறி அதன் விலையான 10 லட்சம் ரூபாயை ஹாஜி தர மறுத்துள்ளார். இதைப் பெறுவதற்காக ஐந்தாம் முறையாக அன்சாரி கடந்த 16ம் தேதி காலை 7.30 மணி அளவில் திருச்சியிலிருந்து இலங்கை புறப்படும் விமானத்தில் டிக்கட் பதிவு செய்துள்ளார்.

4. அன்று நடந்தவை: 16 காலை 5 மணிக்கு தஞ்சையிலுள்ள தன் வீட்டிலிருந்து புறப்பட்ட அவர் 5.30 வரை மனைவியிடம் செல் போனில் பேசியுள்ளார். அதற்குப் பின் 11 மணிவரை அவரை செல்போனில் தொடர்பு கொள்ள இயலவில்லை. திட்டமிட்டபடி அவர் பயணம் செய்திருந்தால் 10 மணி வாக்கில் அவர் கொழும்பு சென்றிருப்பார். கொழும்பு சிம் எண்ணுக்குத் தொடர்பு கொண்டபோது அதுவும் இயங்கவில்லை. 11 மணி வாக்கில் இங்குள்ள சிம் எண்ணில் தணிந்த குரலில் அன்சாரி மனைவியுடன் பேசியுள்ளார். தான் சில காரணங்களால் இலங்கை செல்லவில்லை எனவும், ரவி என ஒருவர் வருவார் அவரிடம் தனது லேப்டாப், மெமரி கார்ட் ரீடர்கள் முதலியவற்றைக் கொடுத்தனுப்புமாறும் கூறி போனைத் துண்டித்துள்ளார். சற்று நேரத்தில் ரவி எனச் சொல்லிக் கொண்டு ஒருவர் வந்து லேப்டாப்பைக் கேட்டுள்ளார். சந்தேகம் கொண்ட மனைவி அன்சாரியைத் தொடர்புக் கொண்டபோது வந்துள்ள நபரிடம் லேப்டாப்

முதலியவற்றைக் கொடுக்கச் சொல்லி போனைத் துண்டித்துள்ளார்.

அடுத்த நாள் காலை வரை அன்சாரியுடன் தொடர்பு கொள்ள இயலவில்லை. காலை 10 மணி அளவில் அன்சாரியிடமிருந்து போன் வந்துள்ளது. தான் கோவை செல்வதாகவும், தனது போனில் சார்ஜ் குறைந்து வருவதால் இனி பேச இயலாது எனவும் கூறித் தொடர்பைத் துண்டித்துள்ளார். அன்று (17) மாலை தொலைக்காட்சிகளில் காட்டப் பட்ட செய்திகளிலிருந்தே குடும்பத்தினர் அன்சாரி கைது செய்யப்பட்டுள்ளதை அறிந்து அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

நடந்தது இதுதான். காலை 7.30 மணி அளவில் திருச்சி விமான நிலைய இம்மிக்ரேஷன் போலீசின் ஒத்துழைப்புடன் கியூ பிரிவு போலீசார் அன்சாரியைக் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர். போர்டிங் பாஸ் எல்லாம் வாங்கியபின் இந்தக் கைது நடந்துள்ளது. அவரை என்கவுன்டர் செய்வது என்கிற அளவில் மிரட்டி செல்போனில் பேச வைத்து லேப்டாப் முதலியவற்றைப் பெற்றுள்ளனர். 17 மாலை திருச்சி நீதிமன்றத்தில் அன்சாரியை ஆஜர்படுத்தியுள்ளனர்.

5. முதல் தகவல் அறிக்கையிலுள்ள முரண்கள்: பதினாறு காலை 7.30 மணி அளவில் திருச்சி விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட அவரை, அன்று இரவு 8 மணி அளவில் திருச்சி டோல்கேட் டி.வி.எஸ் அருகில் தஞ்சை செல்லும் பேருந்து நிறுத்தத்திற்குப் பக்கத்திலுள்ள டாஸ்மாக் கடை அருகில் கைது செய்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்படுகிறது. கியூ பிரிவு போலீசைப் பார்த்தவுடன் அன்சாரி ஓடியதாகவும், அவரை, இவர்கள் ஓடிப் பிடித்துக் கைது செய்ததாகவும் சொல்லப்படுகிறது. டாஸ்மாக் கடை உட்பட அந்தப் பக்கத்திலுள்ள கடைகள் அனைத்தையும் எங்கள் குழு விசாரித்தது, ஆப்படியான ஒரு சம்பவம் அன்று நடக்கவே இல்லை என்பதை எல்லோரும் உறுதிப்படுத்தினர். தவிரவும் சீருடை இல்லாத கியூ பிரிவு போலீசைப் பாத்தவுடன் அன்சாரி ஒடினர் என்பதை ஏற்க இயலாது. அப்படி ஒரு சம்பவம் அன்று அந்த இடத்தில் நடக்கவே இல்லை என்பதுதான் உண்மை. ஆக ஒரு பகற்பொழுது முழுவதும் சட்ட விரோதக் காவலில் வைத்திருந்துள்ளனர்.

முதல் தகவல் அறிக்கையில் உள்ள இந்தப் பொய், இது ஒரு இட்டுக்கட்டப்பட்ட வழக்கு என்பதை உறுதிப்படுத்துகிறது.

6. அன்சாரி மூலமாக பாகிஸ்தான் உளவுத் துறை பெற விரும்பியதாகச் சொல்லப்படும் தகவல்கள் யாவும் மிக எளிதில் கூகுள் முதலான இணையத் தளங்களில் கிடைப்பவை. எடுத்துக்காட்டாக வெலிங்டன் பாரக்சை பாகிஸ்தான் தூதர் சுபைர் கொடுத்த ப்ளாக்பெர்ரி செல்போனின் மூலம் காருக்குள் அமர்ந்தவாறு அன்சாரி படம் எடுத்து அனுப்பினாராம். வெலிங்டன் பாரக்ஸ் படம் கூகுளில் மிகத் தெளிவாகக் கிடைக்கிறது. செல்போனில் எடுக்கப்படும் படத்தைக் காட்டிலும் அது கூடுதல் விவரங்களைக் கொண்டது. தவிரவும் வெலிங்டன் பாரக்ஸ் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. அதனுடைய வடிவமைப்பு உலகறிந்த இரகசியம். செல்போனில் வெளியிலிருந்து படமெடுத்து இலங்கை வழியாகக் கடத்தப்பட வேண்டிய அளவுக்கு அது யாருமறியா ஒன்றல்ல. இன்னொன்றும் சிந்தனைக்குரியது. இலங்கை இராணுவத்திற்கு இந்திய அரசு வெலிங்டன் பாரக்சிலும் மற்ற இராணுவத் தளங்களிலும் பயிற்சி அளிக்கிறது. அவர்களுக்குக் கிடைக்காத என்ன இரகசியத்தை இந்தச் செல்போன் படங்கள் தந்துவிட இயலும்? இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான இராணுவ உறவுகளை அறிவோம். Most Favoured Nation என்கிற நிலையில் அவை செயல்படுகின்றன என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

7. தவிரவும் தான் பதிவு செய்த 'இரகசியங்களை சி.டி யில் பதிவு செய்து நேரடியாகக் கொண்டு கொடுக்க அன்சாரி இலங்கை சென்றார் என்பதும் நம்பும்படியாக இல்லை. முன்னதாகப் பலமுறை விமானப் பயணம் செய்துள்ள அன்சாரி, 16ந்தேதி அன்று விமான நிலையத்தில் கைப்பை பரிசோதனை செய்யப்படுவதைக் கண்டு அதிர்ர்ச்சியடைந்து பயணத்தை ரத்து செய்து திரும்பினார் என்பதும் ஏற்றுக்கொள்ளுமாறு இல்லை.

8. தஞ்சைக்கருகில் உள்ள வல்லத்தைச் சேர்ந்த ராதா என்கிற ஒய்வு பெற்ற இராணுவ அதிகாரியிடம் அன்சாரி நெருங்கிப் பழகி இராணுவ இரகசியங்கள் பலவற்றைப் பெற்றார் எனச் சொல்லப்படுகிறது. அந்த ராதாவை சுமார்

இரண்டு மாதங்கள்வரை விசாரிக்கவே இல்லை? ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களிடமெல்லாம் இராணுவ இரகசியங்கள் இருக்கும் என்பதும் நம்பத் தகுந்ததாக இல்லை. தற்போது அளிக்கப்பட்டுள்ள தடுப்புக் காவல் ஆணையில் (பத்தி xii) ராதா (எ) ராதாகிருஷ்ணனிடமிருந்து பெற்ற விவரங்களாக, அவரது இராணுவப் பதக்கங்கள், அவரது சீருடை ஆகியவற்றின் புகைப்படங்கள், அவரது பராகிளைடிங் மற்றும் மோட்டார் சைக்கிள் ரைடிங் முதலான சி.டிக்கள் எனச் சொல்லப்படுகிறது. இவை எந்த வகையிலும் இரகசியங்கள் அல்ல என்பதும் எவ்வகையிலும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்தன அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.

*9.*தூதரக அதிகாரிகளுக்கே உரித்தான சிறப்பு உரிமைகளை உடையவர்களை எல்லாம் (Diplomatic immunity) வழக்கில் சேர்த்திருப்பதென்பது வழக்கை நீண்ட நட்களுக்கு இழுத்தடிக்கும் நோக்குடன் செய்யப்பட்டதாகவே உள்ளது.

*10. 21* மாலை அன்சாரியைப் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி அளித்தபோது அவர் எங்கு வைத்து விசாரிக்கப்படுகிறார் என்பது அவரது வழக்குரைஞர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் எனவும், தேவையானால் அவர் தன் வழக்குரைஞர்களைக் கலந்தாலோசிக்கலாம் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் அன்சாரி போலீஸ் கஸ்டடியில் எடுக்கப்பட்டது தொடங்கி மீண்டும் நீதிமன்றக் காவலுக்குக் கொண்டு வரப்படும் வரை கியூ பிரிவு போலீசார் வழக்ககுரைஞர்களுக்குத் தகவல் தெரிவிக்க வில்லை. *16*ந்தேதி அன்று அன்சாரியின் மனைவியிடமிருந்து சட்ட விரோதமாகக் கைப்பற்றப்பட்ட லேப்டாப் முதலியவற்றை இந்த விசாரணையின்போது கைப்பற்றியதாகாக் காட்டுவதற்காகவே இப்படிச் செய்திருக்க வேண்டும். மீண்டும் *18.10.2012* அன்று முதல் ஆறு நாட்கள் போலீஸ் காவலில் வைத்து விசாரித்த போதும் அன்சாரியின் வழக்குரை ஞருக்கு விவரம் ஏதும் அறிவிக்கப்படவில்லை. இந்த நாட்களில் தமீம் அன்சாரி தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்பதும் அவருக்கும் நான்காவது எதிரிக்கும் இடையிலான தகவல் பரிமாற்றங்கள் அடங்கிய சி.டி கைப்பற்றப்பட்டது என்பதும் பொய் என்பதாலேயே தமீம் அன்சாரியின் வழக்குரைஞர்களுக்குச் செய்தி அறிவிக்கப் படவில்லை.

## ஆ. தடுப்புக் காவல் ஆணை மற்றும் அதற்குத் துணையாக அளிக்கப்பட்டுள்ள ஆவணங்களிலுள்ள முரண்பாடுகள்:

*1.*ஆதார வழக்கில் கைது செய்யப்பட்டு *2* மாதங்கள் *18* நாட்களுக்கு மேலான பின்னரே தடுப்புக் காவல் ஆணை இடப்பட்டுள்ளது. இதற்கிடையில் இவ்வழக்கு தொடர்பாக வேறு யாரும் கைது செய்யப்படவில்லை. தமீம் அன்சாரி தவிர இதர எதிரிகளாகச் சுட்டிக் காட்டப்படும் யாரும் கைது செய்யப்படவோ, விசாரிக்கப்படவோ இல்லை. அதற்கான முயற்சிகள் ஏதும் செய்யப்படவும் இல்லை. கூடுதலாக முக்கிய விவரங்களோ, ஆவணங்களோ கிடைக்காத நிலையில் இத்தனை தாமதமாகத் தடுப்புக் காவலில் வைப்பதற்கான காரணம் குறித்து மனதைச் செலுத்தாமல் இந்த ஆணை இடப்பட்டுள்ளது.

*2.*தடுப்புக் காவல் ஆணையில் குறிப்பிடப்படும் *2,3*ம் எதிரிகள் தமீம் அன்சாரியுடன் வணிக உறவு கொண்டிருந் தவர்கள், *4*ம் எதிரி. இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றும் ஒரு அதிகாரி. இவர்கள் எல்லோரும் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் கியூ பிரிவு காவல்துறையால் அளிக்கப்படவில்லை. அவர்கள் விசாரிக்கப்படவும் இல்லை. இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதராலய உதவி அதிகாரி அமீர் சுபைர் சித்திக் எனப்படும் 4வது எதிரியை தமீம் அன்சாரி இதுவரை பார்த்ததே இல்லை என்பதோடு அப்படி ஒருவர் இருப்பதே அவருக்குத் தெரியாது. தமீம் அன்சாரிக்கும் இவர்களுக்கும் இடையே நடந்ததாகக் கூறப்படும் “இந்தியாவை முஸ்லிம் நாடாக மாற்றுவது”, “தென்னிந்திய இராணுவ மையங்களின்மீது தாக்குதல் நடத்துவது” உள்ளிட்ட சதித் திட்டங்கள் மற்றும் உரையாடல்கள் ஆகியவற்றிற்கும், *4*வது எதிரியை அவர் சந்தித்ததற்கும் தமீம் அன்சாரி போலீஸ் காவலில் இருந்தபோது அளித்த ஒப்புதல் வாக்கு மூலத்தைத் தவிர, இந்த மூன்று மாத காலத்தில் விசாரணை அதிகாரியால் வேறு எந்தச் சிறு ஆதாரத்தையும் காட்ட

இயலவில்லை. நீதிமன்றத்திற்கு வெளியே, தெரியாத நபர்களின் முன்னிலையில் போலீஸாரிடம் கொடுக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் செல்லத்தக்கதல்ல என்கிற சட்ட விதியின்மீது மனத்தைச் செலுத்தாமல் இந்த ஆணை இடப்பட்டுள்ளது.

## 3. தடுப்புக் காவல் ஆவணப் புத்தகத்தில் காணப்படாத சில முக்கிய ஆவணங்கள்:

(அ). தமீம் அன்சாரியிடம் பெறப்பட்டதாகச் சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திற்குச் சாட்சியாகக் காட்டப்படும் கொட்டப்பட்டு கிராம அலுவலர் முத்துக்குமார் மற்றும் அவரது உதவியாளர் முத்துக்குமார் ஆகியோர் சம்பந்தப்பட்ட இடத்தில் வசிப்பவர்களல்ல. அவர்கள் முன்னிலையில் தயாரிக்கப்பட்டதாக இவர்களின் 161 (3) வாக்குமூலத்தில் சொல்லப்படும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆவணப்புத்தகத்தில் இல்லை.

(ஆ). ஆவணப் புத்தகத்தில் இணைக்கப் பட்ட 161(3) வாக்குமூலங்களில் கியூ பிரிவு தலைமை காவலர் எண்: 1542 ஜி. ஜான்லியோன் ராஜின் வாக்குமூலம் காணப்படவில்லை. அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதா? பெறப்படவில்லையாயின் காரணம் என்ன? பெற்றிருந்தால் அது ஏன் இணைக்கப் படவில்லை?

(இ). ஆதார வழக்கில் 38 நபர்களிடம் இருந்து தடுப்புக் காவல் உத்தரவுக்கு முன்னதாகவே 161(3) வாக்கு மூலங்கள் பெறப்பட்டதாகவும், அனைத்து வாக்கு மூலங்களும் 26.11.2012 தேதிக்குப் பிறகு வெவ்வேறு நாட்களில் திருச்சி நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆனால் ஆவணப் புத்தகங்களில் வெறும் 23 நபர்களின் வாக்குமூலங்கள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளன.

(ஈ). ஆவணப் புத்தகத்தின் 227, 239, 251, 263, 275, 279, 285, 289, 293, 303, 309, 321, 335, 339, 345, 349 பக்கங்களில் உள்ள 161(3) வாக்குமூலங்களில் அவை பதிவு செய்யப்பட்ட தேதி குறிப்பிடப்படவில்லை. வாக்குமூலத்தில் தேதி இல்லாதது பல்வேறு அய்யங்களுக்குக் காரணமாகின்றது.

(உ). முன்னதாகக் கைது செய்யப்பட்ட விவரமோ, இப்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட விவரமோ தமீன் அன்சாரியின் மனைவிக்கோ பெற்றோருக்கோ தெரிவிக்கப் படவில்லை. இவை டி.கே.பாசு வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள நெறிமுறைகளுக்கும் இதர சட்ட விதிகளுக்கும் எதிரானவை.

(ஊ). ஆவணப் புத்தகத்தின் 199, 201 பக்கங்களில் 'தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம்' என்னும் அமைப்பு, தமீம் அன்சாரி கைது செய்யப்பட்டதைக் கண்டித்து வெளியிட்ட சுவரொட்டிகளின் புகைப்படங் கள் இணைக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் ஒட்டிய கண்டனச் சுவரொட்டிகள், மூத்த மனித உரிமைப் போராளிகள் மற்றும் பேராசிரியர்கள் அடங்கிய உண்மை அறியும் குழு அறிக்கை மற்றும் அவை குறித்துத் தமிழ் ஆங்கில நாளிதழ்கள் முக்கியத்துவம் அளித்து வெளியிட்ட செய்திகள் ஆகியன ஆவணத்தில் இணைக்கப்படவில்லை. மற்றவற்றை மறைத்து ஒரு முஸ்லிம் அமைப்பை மட்டுமே இங்கே குறிப்பிடுவது முஸ்லிம்கள் இத்தகைய தேச விரோதச் செயல்களை ஆதரிக்கக்கூடியவர்கள் என்கிற அனுமானத்தின் அடிப்படையிலேயே செய்யப்பட்டுள்ளது. இது காவல்துறை உள் நோக்கத்துடன் செயல்படுவதற்கு ஒரு அப்பட்டமான ஆதாரமாக உள்ளது. த.மு.மு.க என்பது வெளிப்படையாக இயங்கும் அமைப்பு என்பதோடு இவ்வமைப்பைச் சேர்ந்த இருவர் இன்று சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். முஸ்லிம்களின் பிரச்சினைகளை மட்டுமின்றி சிறு வணிகத்தில் அந்நிய முதலீடு உட்பட்ட பல்வேறு பொதுப் பிரச்சினைகளுக்காகவும் இயங்கும் ஒரு அமைப்பு.

(எ). தமீம் அன்சாரியைப் போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க கியூ பிரிவு போலிஸ் நீதித்துறை நடுவர் முன் சமர்ப்பித்த மனு, அதற்கெதிராக தமீம் அன்சாரியின் வழக்குரைஞர் தாக்கல் செய்த மெமோ (21-09-2012) மற்றும் தமீம் அன்சாரி எழுத்துமூலம் சமர்ப்பித்த ஆட்சேபணை மனு; போலீஸ் காவலில் இரு முறை வைக்கப்பட்டிருந்த போதும் தமீம் அன்சாரியின் வழக்குரைஞர்கள் அவரைச் சந்திக்க அனுமதிக்கப்படாததை

எதிர்த்து அவர்கள் கியூ பிரிவு உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிய தந்திகள், செப்டம்பர் 22 மற்றும் அக்டோபர் 24 தேதிகளில் நீதித்துறை நடுவர்கள் முன் சமர்ப்பித்த மெமோ, அஃபிடவிட், மனு மற்றும் கியூ பிரிவு ஆய்வாளர் சமர்ப்பித்த பதில் மனு; கியூ பிரிவு புலனாய்வு ஆய்வாளர் தடுப்புக் காவல் வேண்டி ஏதும் சத்தியப் பிரமான வாக்குமூலம் அளித்திருந்தால் அது முதலிய ஆவணங்கள் ஏதும் தடுப்புக் காவல் ஆவணத் தொகுப்பில் சேர்க்கப்படவில்லை.

வீட்டு உபயோகத்திற்காக இருந்த டாடா இண்டிகா காரை கியூ போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க 02-11-2012 அன்று தஞ்சையிலுள்ள கியூ பிரிவு அலுவலகத்தில் டி.எஸ்.பி இராஜேந்திரனிடம் அன்சாரியின் மாமா லியாகத் அலி ஒப்படைத்தார். இதற்கு ஒப்புகை இரசீது ஏதும் தரப்படவில்லை. ஆனால் திருச்சி அலுவலகத்திற்குக் கொண்டு சென்று அன்சாரியின் மாமனார் அப்துல் ஜலீலும் மாமா லியாகத் அலியும் ஒப்படைத்ததாகப் பொய்யாக வழக்கு ஆவணங்களில் காட்டப்பட்டுள்ளது. இந்தக் காரை ஒப்படைக்க வேண்டி அன்சாரி சார்பில் நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட மனு (R.P.No.8123/2012), இதற்கு எதிராக கியூ பிரிவு போலீஸ் அளித்த ஆட்சேபணை மனு ஆகியனவும் ஆவணத் தொகுப்பில் இடம் பெறவில்லை.

தமீம் அன்சாரி பக்கமுள்ள நியாயங்களை விரித்துரைக்கும் இந்த ஆவணங்கள், தடுப்புக் காவல் ஆணையை வழங்கும் அதிகாரியின் பார்வையிலிருந்து இவ்வாறு திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய முக்கிய ஆவணங்கள் தடுப்புக் காவல் ஆணையிடும் அதிகாரியின் கண்களிலிருந்து காவல்துறையால் மறைக்கப் பட்டுள்ளன என்றால், அது குறித்து எந்தல் கவலையும் இன்றி தடுப்புக் காவல் ஆணையில் அதிகாரி கையொப்பமிட்டுள்ளார்.

ஒரு இளைஞனின் வாழ்வில் மிகப்பெரிய வீழ்ச்சியை அளிக்கக் கூடிய ஒரு ஆணையில் பொறுப்புள்ள அதிகாரி மனத்தைச் செலுத்தாமல் கையொப்பமிட்டுள்ளது வருந்தத் தக்கது. இது அப்பட்டமான சட்டமீறல் ஆகும்.

(4). அன்சாரியின் மனைவி நபீலா, மாமனார் அப்துல் ஜலீல், மாமா லியாகத் அலி ஆகியோர் கியூ பிரிவு போலீசாரிடமோ வேறு யாரிடமோ வாக்குமூலம் எதுவும் அளிக்க வில்லை. ஆனால் இவர்கள் 161(3) வாக்குமூலங்கள் அளித்துள்ளதாக ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது. இது அப்பட்டமான ஒரு பொய்.

(5). அன்சாரி பிணையில் வெளிவரும் சாத்தியக் கூறு உள்ளதால் அவரைத் தடுப்புக்காவலில் வைக்க வேண்டுமென தடுப்புக்காவல் ஆணை பத்தி 11ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதார வழக்கில் அன்சாரி பிணை மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பதும் அவர்மீது இ.த.ச 120(B) மற்றும் Official Secrets Act S 3,4,9 ஆகிய கடுமையான சட்டப் பிரிவுகளின் கீழும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. காவலில் வைக்கப்பட்டு 90 நாட்களுக்குள் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அவருக்கு பிணையில் விடுதலை கிடைக்க வாய்ப்பிருந்திருக்காது. இது குறித்தும் தடுப்புக் காவல் ஆணையில் கையொப்பமிட்ட அதிகாரி மனதைச் செலுத்தவில்லை.

## இந்த வழக்கைப் புலனாய்வு செய்யும் 'கியூ' பிரிவு குறித்து ஒரு குறிப்பு:

கியூ பிரிவு போலீஸ் என்பது 1970ல் வால்டர் தேவாரம் அதிகாரியாக இருந்தபோது நக்சலைட் கட்சியினர் குறித்த உளவுகளை அறிய உருவாக்கப்பட்ட ஒரு உளவு அமைப்பு. வெறும் உளவு அமைப்பாக இருந்த கியூ பிரிவிற்கு 1993ல் போலீஸ் அதிகாரம் கொடுக்கப்பட்டது. எனினும் அதில் பணியாற்றுபவர்களுக்குச் சீருடை கிடையாது. காவல் நிலையத்தில் பெயர்ப் பலைகைகள் கூட இருப்பதில்லை.

உளவுத் துறையும் காவல்துறையும் அவற்றின் நோக்கம், செயல்படும் விதம் உள்ளிட்ட எல்லா அம்சங்களிலும் வேறுபட்டவை. உளவுத் துறை என்பது ஒரு இரகசிய அமைப்பு. ஒரு வகையில் சட்ட நெறிகளுக்கு அப்பாற்பட்ட அமைப்பும்கூட (clandestine organization). இது சேகரிக்கிற உளவுத் தகவல்களுக்கு (intelligence) சாட்சிய

மதிப்பு (evidential value) கிடையாது. அதாவது சேகரிக்கப்பட்ட உளவுகளை அப்படியே சாட்சியமாக ஏற்க முடியாது. அமெரிக்க கூட்டரசுப் புலனாய்வு மையத்தின் (FBI) தலைவராக 48 ஆண்டுகள் பணி செய்த ஜே. எட்கார் ஹூவர் ஒருமுறை ஒரு இரகசியக் குறிப்பில் எழுதியது போல உளவுத் துறை என்பது அரசுக்கு எதிரான செயற்பாடுகளையும் அமைப்புகளையும் சிதைத்து அழிக்கும் ஒரு நிறுவனம். இந்த அழிவுச் செயலை நியாயப்படுத்துவதற்காக அது முன்வைக்கும் "குற்றச்சாட்டுகளுக்குப் பின்னால் ஆதாரபூர்வமான உண்மைகள் உள்ளனவா இல்லையா என்பது முக்கியமில்லை". சட்டபூர்வமற்ற படைகளை உருவாக்குவது, போட்டி ஆயுத இயக்கங்களை உருவாக்கி அவைகட்கு ஆயுதங்களையும் பயிற்சிகளையும் அளிப்பது முதலான செயல்களை இந்திய உளவு நிறுவனங்கள் செய்து வருவதை நாமறிவோம்.

காவல்துறை என்பது உளவு உள்ளிட்ட தகவகல்களின் அடிப்படையில், கைது செய்யப்படக் கூடிய குற்றத்தைச் (cognizable offence) செய்தவர் என ஒருவரைக் கருதினால், முறையாக முதல் தகவல் அறிக்கை ஒன்றைப் (FIR) பதிவு செய்து, நீதிமன்றத்தில் தாக்கல் செய்து கைதுசெய்தல், தேடுதல், பொருட்களைக் கைப்பற்றுதல் முதலான வற்றைச் செய்யும் ஒரு நிறுவனம். அத்துடன் அதன் பணி முடிந்து விடுவதில்லை. நீதிமன்றத்தில் அது சேகரித்த சாட்சியங்களின் உண்மைத் தன்மையையும் அது நிறுவியாக வேண்டும்.

இந்த இரு நிறுவனங்களையும் ஒன்றாய் இணைப்பது வழக்கமல்ல என்பது மட்டுமின்றி அது நீதியுமல்ல. இன்னும் அதிகமான அரசியல் பழிவாங்கல்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் அது வழிவகுக்கும்.

கியூ பிரிவு போலீஸ் இத்தகைய ஆபத்தை உள்ளடக்கியுள்ளது. உளவுத்துறையும் காவல்துறையும் ஒன்றாக இணைந்துள்ள வகையில் அரசியல் நோக்குடன் அவை செயல்படுகின்றன. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிக அளவில் அமெரிக்கத் திரைப்படத்திற்கெதிரான முஸ்லிம் போராட்டங் கள் நடைபெற்றிருந்த ஒரு தருணத்தில் முஸ்லிம்களை தேசத்தைக் காட்டிக் கொடுப்பவர்களாகச் சித்திரிக்கும் நோக்குடன் கியூ பிரிவு அன்சாரி விஷயத்தில் செயல்பட்டுள்ளது. தவிரவும் கூடங்குளம் போராட்டம் பெரிய அளவில் நடைபெற்று வரும் சூழலில் தமிழகத்தின் மீது பயங்கரவாதத் தாக்குதல் என்கிற அச்சத்தைக் கிளப்பி விடுவது தமிழகத்தின் மீதான காவல் கண்காணிப்பை மிகுதிப்படுத்துவதற்கான ஒரு உளவுத்துறை உத்தியாகவும் உள்ளது.

இத்தகைய அரசியல் நோக்கங்களின் பின்னணியில் ஒரு அப்பாவி இளைஞர் இன்று அரசியல் காரணங்களுக்காகப் பலிகடா ஆக்கப்பட்டுள்ளார். அரசியல் காரணங்க ளுக்காக இரக்கமின்றிச் செயல்படும் காவல்துறை, அரசின் முகவராகச் செயல்பட்டு. கொடுக்கப்பட்ட ஆவணங்களின்மீது மனதைச் செலுத்தாமல் தடுப்புக் காவல் ஆணையில் கையொப்பமிட்டுள்ள அரசுச் செயலாளர் ஆகியோரால் இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதியை, நீதி வழங்கு அநுபவம் மிக்க இந்த அறிவுரைக் குழுமம்தான் சரி செய்ய வேண்டும்.

பொடா, தடா ஆகிய சட்டங்களில் கைது செய்யப்பட்டவர்களில் முஸ்லிம்களின் வீதம் அதிகம் என்பதையும், இவர்களில் 90 சதத்திற்கும் மேலானோர் பல ஆண்டுகள் சிறை வாசத்திற்குப் பின் குற்றம் நிரூபிக்கப்படாமல் விடுதலை செய்யப்பட்டார்கள் என்பதையும் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நீண்ட சிறைவாசம் மற்றும் அதனால் ஏற்பட்ட அவப் பெயர் ஆகியவற்றால் அவர்களில் பலர் இன்று தம் வாழ்வை இழந்து நிற்கின்றனர். அந்த நிலை தமீம் அன்சாரிக்கும் வந்துவிடலாகாது.

கண்ணீருடன் தங்கள் அலுவலகம் முன் காத்திருக்கும் தமீம் அன்சாரியின் இளம் மனைவிக்கும் அவர்களின் நான்கு வயது மகனுக்கும் நீதி வழங்குங்கள்; தமீம் அன்சாரிக்கு வழங்கப்பட்டுள்ள இந்தத் தடுப்புக் காவல் ஆணை தவறானது என அரசுக்கு அறிவுரை வழங்குங்கள் என உங்களிடம் மன்றாடிக் கேட்கிறேன்.

***டிசம்பர் 26, 2012, அ.மார்க்ஸ், சென்னை. முன்னாள் இயற்பியல் பேராசிரியர், (முகவரி: 3/5, முதலாம் குறுக்குத் தெரு, சாஸ்திரி நகர், அடையாறு, சென்னை- 600 020)***

# குண்டுவெடிப்பில் பொய் வழக்குகளும் தீவிரவாத தடுப்புப் படைகளும்

மராட்டிய மாநிலம். அதில் முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழுமிடம் மாலேகான். கைத்தறி தான் மக்கள் வாழ்வதற்கான ஆதாரம். முஸ்லிம்களும் இந்த தொழிலைத்தான் முக்கியத் தொழிலாகச் செய்து வருகின்றார்கள்

இவர்களின் அதாவது மாலேகானில் வாழும் முஸ்லிம்களின் பூர்வீகம் டெல்லியாகும். இவர்கள் இந்திய விடுதலைப்போரில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப்போராடினார்கள் என்பதனால் ஆங்கிலேயர்கள் இவர்களை டெல்லியிலிருந்து பிடுங்கி அப்போது வாழ்வதற்கு இலாயக்கற்ற பகுதி எனக் கருதப்பட்ட மாலேகானில் கொண்டு விட்டார்கள்.

நிர்கதியாக விடப்பட்ட அவர்கள் ஒரு புது முயற்சியை மேற்கொண்டு வெறுங்கையோடு வாழ்க்கையை தேடிய வேண்டியதாயிற்று. கைத்தறியை நம்பி வாழ்ந்திட வேண்டியதாயிற்று. அன்று ஆங்கிலேயர்களை எதிர்க்கும் ஓர் அடையாளமாகவும் இந்தக் கைத்தறி கருதப் பட்டது.

கைத்தறியை நம்பியிருக்கும் சமுதாயங்களின் தவிர்க்க இயலாத விளைவு வறுமை. இந்த வறுமையில் தான் மாலேகான் முஸ்லிம்களும் சிக்கிக் கொண்டார்கள்

தன்னை எதிர்ப்பவர்கள் இந்த முஸ்லிம்கள் என ஆங்கிலேயர்கள் அறிந்ததால் எந்த அடிப்படை வசதிகளையும் அந்த முஸ்லிம்களுக்குச் செய்து தந்திடவில்லை ஆங்கிலேய அரசு. விடுதலைக்குப்பின் இந்தியாவை ஆளவந்தவர்களும் இந்த மக்களை ஓரவஞ்சனைகளுடனேயே நடத்தினார்கள். காரணம் அவர்கள் முஸ்லிம்கள்.

விசைத்தறிகள் கைத்தறிகளை விஞ்சி வாகை கண்ட பின் உள்ளதும் போச்சுடா நொள்ளக்கண்ணா என்ற அளவில் தான் அவர்கள் தங்கள் வாழ்க்கையை நகர்த்தினார்கள்.

**அப்ரார்:** இந்த வறுமையைப் பயன்படுத்தித் தான் நமது உளவுத்துறையினர் அப்ரார் அஹ்மத் போன்ற அப்பாவிகளைக் கையிலெடுத்தார்கள். அவனைப் அபிநவ் பாரத் போன்றவர்கள் வைக்கும் குண்டுகளுக்கெல்லாம் பலிகடா ஆக்கிட முடிவு செய்தார்கள்.

இந்த பின்னணியில் 2006ம் ஆண்டு செப்டம்பர் 18ம் நாள் வெள்ளிக்கிழமை ஜும்மாவிலும் (அன்று ஷபேபராத்) அங்கு கூடிய மக்கள் மத்தியிலும் குண்டுகளை வைத்தார்கள் அபிநவ் பாரத் என்ற தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்கள்.

குண்டுவெடிப்பில் 43 முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டார்கள். பலநூறு முஸ்லிம்கள் காயம்பட்டார்கள். குண்டு வைத்ததாக முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

அப்பாவி முஸ்லிம்களை குண்டு வைத்தவர்கள் என குற்றப்படுத்திக்கொடுக்கும் பாதகத்தை அப்ரார் அஹ்மத் தான் (முஸ்லிம்) செய்தான். இந்த ஒரு நன்றிக்கு வேறொரு சன்மானமாக இந்தியாவில் பல்வேறு குண்டு வெடிப்புகளையும் நடத்திய இராணுவத் தளபதி பிரசாந்த் புரோகித்-ஐ சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றான் அப்ரார் அஹ்மத்.

அப்பாவி முஸ்லிம்களை சிக்க வைக்கும் அப்ரார் அஹ்மத்-ஐ கலோனல் இராணுவ தளபதி பிரசாத் புரோகிதிடம் அழைத்துச் சென்றவர் மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புப்படையின் தலைவர் கே.பி. இரகுவன்ஷி என்பவர். கலோனல் பிரசாத் புரோகித் அப்ரார் அஹ்மத் இருவரும் 22 அக்டோபர் 2006ல் சந்தித்தார்கள். இந்த சந்திப்பு நமது இந்தியாவின் மிக முக்கியமான இராணுவ தளங்களுள் ஒன்றான தேவலாலி (மராட்டிய மாநிலம் நாசிக் மாவட்டம்) வைத்துதான் நடந்தது.

**சன்மானம் :** சந்திப்பின் போது இராணுவத் தளபதி பிரசாத் புரோகித் இப்படிக் கூறினார்: மராட்டிய தீவிரவாத

தடுப்புப்படையினர் உன்னிடம் என்னென்ன வாக்குறுதிகளை வழங்கினார்களோ அந்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். உனக்கு நிலமும் சொத்துக்களும் கஷ்மீரைத் தவிர இந்தியாவின் எந்தப்பகுதியில் வேண்டுமென் றாலும் வழங்கப்படும்.

இராணுவ தளபதி புரோகித் இன் சந்திப்பிற்கு பின் அப்ரார் அஹ்மத்ஜ வெளியே விட்டு வைப்பது சரியல்ல என இராணுவத் தளபதி கருதினார். இதே எண்ணம் நமது மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புப்படையின் தலைவர் கே.பி இரஹுவான்ஷிக்கும் வந்தது

இதற்குள் அப்ரார் அஹ்மத் வழி 6 முஸ்லிம் அப்பாவிகளை மாலேகான் குண்டுவெடிப்பை நிகழ்த்தியவர்கள் எனக் கைது செய்துவிட்டார்கள். ஆகவே இனி அப்ரார் அஹ்மத்ஜ கைது செய்து சிறையில் அடைப்பது என முடிவு செய்தார்கள்.

**உல்லாசப்பயணம் :** அப்ரார் அஹ்மத்ஜ அழைத்து நீ ஒரு போலீஸ் இன்பார்மர் (போலீசுக்கு ஆள்காட்டி) என்பது மாலேகான் முஸ்லிம்களுக்கு தெரிந்துவிட்டது. இனி அவர்கள் உன்னை கொலை செய்துவிடுவார்கள். ஆகவே நீ எங்களோடு வந்துவிடு என்றார்கள். அப்ரார் அஹ்மத் நான் என் மனைவியை விட்டுவிட்டு தனியாக வந்திட இயலாது எனக் கூறிவிட்டான்.

“பரவாயில்லை, உன் மனைவியையும் அழைத்து வா” என்றார்கள்

அப்ரார் அஹ்மத்ஜயும் அவனுடைய மனைவி ஜன்னத்து நிசாவையும் மத்தியப்பிரதேசம் ஜெஃரா, இந்தூர், உஜ்ஜைன் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் சென்று உல்லாசமாக சுற்றவிட்டார்கள். பாரதீய ஜனதா கட்சி ஆட்சி செய்த இடங்களில் அரசு விருந்தினர் மாளிகைகள் அப்ரார் அஹ்மதுக்கும் ஜன்னத் நிசாவுக்கும் உல்லாச புரிகள். இவர்கள் மீது தூசோ துரும்போ விழுந்து படாமலிருக்க ஒரு காவலரையும் நியமித்திருந்தார்கள். இவர்களை பத்திரமாக பார்த்துக் கொள்ளும் பொறுப்பை அருண் என்ற காவலர் ஏற்றுக் கொண்டார். அவருக்கும் இலவச உல்லாசஉலா.

சிலபல இடங்களில் அப்ரார் அஹ்மதும் அவனுடைய அருமை மனைவியும் கோவில்களில் தங்க வைக்கப்பட்டார்கள். பின்னர் பல குண்டுவெடிப்புகளின் தாய் பெண் சந்நியாசி பிரக்யா சிங் தாக்கூரை திவாஸ் என்னுமிடத்தில் வைத்து அப்ரார் அஹ்மத்வும் அவனுடைய மனைவியும் சந்தித்தார்கள்.

இந்த பிரக்யா சிங் தாக்கூர் என்ற இந்து சந்நியாசி தான் 2008 மாலேகான் குண்டுவெடிப்பு உள்பட பல குண்டு வெடிப்புகளில் குற்றம் சுமத்தப்பட்டு நிற்பவர். அதேபோல் இந்த இந்து சந்நியாசியின் முன்னாள் தொண்டன் சுனில் ஜோஷியைக் கொலை செய்த வழக்கிலும் குற்றம் சுமத்தப்பட்டு நிற்பவர்

இப்படி இந்த உல்லாச உலா முடிந்தவுடன் அப்ரார் அஹ்மத்ஜயும் அதே செப்டம்பர் 8 2006 மாலேகான் குண்டு வெடிப்பில் குற்றம் சுமத்தி சிறையில் அடைத்து விட்டார்கள். ஆனால் அவனுடைய மனைவிக்கு காவலன் அருண் வழியாக தொடர்ந்து காசோலைகள் மூலம் பணம் அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

2006 நந்தேத் குண்டுவெடிப்பு, 2006 மாலேகான் குண்டுவெடிப்பு இவற்றின் உண்மையான குற்றவாளிகளை மராட்டிய தீவிரவாத தடுப்புப்படை மறைக்கின்றது என்று முஸ்லிம்களும் மனித உரிமை ஆர்வலர்களும் தொடர்ந்து அரசை குற்றஞ்சாட்டி வந்தார்கள். இந்நிலையில் தான் இரண்டு முஸ்லிம் இளைஞர்களை மராட்டிய தீவிரவாத தடுப்புப்படைகொலை செய்தது.

**மராட்டிய மாநில தீவிரவாதத் தடுப்புப்படை செய்த முதல் கொலை:**

மாலேகானில் குண்டு வைத்தவர் களில் ஒருவரை முஹம்மத் அஸார் என்ற 32 வயது முஸ்லிம் இளைஞன் பார்த்து விட்டான். இவன் விசைத்தறி ஒன்றில் வேலை பார்த்து வந்தவன். இவன் குண்டு வைத்த இந்துவை பார்த்ததை ஊரில் மாலேகானில் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான மௌலானா அப்துல் மாலிக் பாரா என்பவரிடம் சொல்லி விட்டான். மௌலானா அப்துல் மாலிக் பாரா அவர்கள் இதனை நாம் காவல் துறையிடம் சொல்லி குண்டுவைத்த அந்த கயவனை பிடித்திட செய்திட வேண்டும் என்றார்.

மாலேகான் குண்டுவெடிப்பை 2006 ஏற்பாடு செய்த ஏடிஎஸ் தீவிரவாத தடுப்புப்படையினர் இதனை தங்கள் ஒற்றர்கள் மூலம் தெரிந்துகொண்டார்கள். தங்கள்

Reg. No. 313/99

جماعة العلماء لاهل السنة والجماعة ولاية تامل نادو الهند

சென்னை திருவல்லிக்கேணி வட்டார அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்

# ஜமாஅத்துல் உலமா பேரவை

Cell : 94441 19195 Website : www.ulama.in E-mail : jamathululama@yahoo.co.in

بسم الله الرحمن الرحيم

சென்னை திருவல்லிக்கேணி வட்டார

# ஜமாஅத்துல் உலமா பேரவை

சார்பில்

## மாபெரும் கருத்தரங்கம், ஆய்வரங்கம் மற்றும் மாநாடு

அன்புடையீர் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்......

சென்னையில், இன்ஷாஅல்லாஹ் எதிர்வரும் 2013 ஏப்ரல் 28-29 ஆகிய தேதிகளில் சென்னை திருவல்லிக்கேணி வட்டார ஜமாஅத்துல் உலமா சார்பில் இரண்டுநாள் மாபெரும் கருத்தரங்கம் மற்றும் மாநாடு நடத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதிலுமிருந்தும் ஆலிம்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ள இந்த மாநாட்டில் ஃபிக்ஹ் ஆய்வரங்கம், இளம் உலமாக்களின் தனியுரைகள், பட்டிமன்றம், மூத்த உலமாக்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு மற்றும் இறுதி நாள் மாநாடு ஆகியவை நடைபெற உள்ளன.

மாநாட்டையொட்டி கட்டுரைப் போட்டி நடைபெற உள்ளது. தரமான கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. மேலும், சிறப்பு மலரும் ஆய்வுக்கோவையும் வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.

சமூக சேவையில் ஈடுபட்டுவரும் ஆலிம்களுக்கு விருதுகள் வழங்கப்பட உள்ளன. தங்கள் பகுதியில் சமூக சேவையில் ஈடுபட்டுவரும் ஆலிம்கள் பற்றிய தகவல்களை எங்களுக்குத் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டுரைப் போட்டி தலைப்பு:

1. எதிர்காலம் இஸ்லாத்திற்கே....
2. இஸ்லாமும் இதர மதத்தவர்களும்

மேலும் விபரங்களுக்கு:

**மாநாட்டுகுழு**

97103 24961 / 94444 94628

கொலைப்படையை ஏவி இரவோடு இரவாக 32 வயதுடைய முஹம்மத் அஸாரை கொலை செய்து அவன் வீட்டு காம்பவுண்டுக்கு உள்ளாலேயே போட்டு விட்டார்கள்

வழக்கம்போல இறந்த உடலைக் கண்டவுடன் ஊரார் காவல்துறைக்கு தகவல் கொடுத்தார்கள். காவல் துறையினர் கொலை செய்தவனைக் கண்டுபிடிக்கவோ வழக்குத் தொடரவோ இல்லை. மாறாக முஹம்மத் அஸார் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறி வழக்கை மூடிவிட்டார்கள் .

இதன்மூலம் 2006 மாலேகானில் குண்டுவைத்த இந்துத்துவ தீவிரவாதிகளைக் காப்பாற்றி விட்டார்கள். அவர்களுள் ஒருவனைக் கண்டவனையும் கொன்று விட்டார்கள்

## கொலை எண் இரண்டு....?

மராட்டிய மாநில காவல் துறையின் சிறப்புப்பிரிவு தீவிரவாத தடுப்புப்படை. இது நிறைவேற்றிய இரண்டாவது கொலை இன்னும் இரகசியமானது.

மாலேகான் 2006 குண்டுவெடிப்பின் போது முஸ்லிம்கள் பிணக்குன்றுகளாகக் குவிந்தார்கள். அந்தப் பிணங்களை அப்புறப் படுத்துவதில் காவல் துறையினரும் சமூக ஆர்வலர்களும் தங்களை மும்முரமாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள். இதில் முஸ்லிம் டெய்லர் ஒருவரும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். ஒரு உடலை இந்த முஸ்லிம் டெய்லர் தூக்கிடும்போது அதிலிருந்து ஒரு தாடி பொத்தென்று தரையில் கழன்று விழுந்தது. ஆச்சர்யமும் அதிசயமும் ஒன்றுபோலவே அவரை ஆட்கொண்டது. உடனேயே அந்த உடலையும் தாடியையும் காவல்துறைக்கு தூக்கி சென்றார். விபரத்தைச் சொன்னார். உடனேயே காவல் துறையினர் அந்த உடலையும் தாடியையும் கைப்பற்றினார்கள். அந்த உடலையும் தாடியையும் சிறப்பு பரிசோதனைக்காக மும்பை அனுப்ப வேண்டும் அதற்கு அந்த முஸ்லிம் டெய்லரும் உடன் சென்றிட வேண்டும் என்றார்கள். அன்று அந்த உடலோடும் தாடியோடும் சென்ற முஸ்லிம் டெய்லர் இன்றளவும் திரும்பிடவில்லை. அந்த உடலும் தாடியும் என்ன ஆனது என்பதும் தெரியவில்லை...?

**இரகுவான்ஷி :** இந்த மராட்டிய மாநில சிறப்புபடையின் தலைவர் கே.பி. இரகுவான்ஷி இப்படி பல கொலைகளை செய்திருக்கின்றார் என்பது மட்டுமல்ல மராட்டிய காவல்துறையின் மாவீரனும் இந்தியாவில் நடந்துகொண்டிருக்கும் குண்டு வெடிப்புகளின் உண்மையான பின்னணிக ளையும் கண்டுபிடித்து உலகுக்கு அறிவித்த உத்தமருமான கர்கரேயின் கடைசி அத்தியாத்தை எழுதியவரும் இவர்தான். இதனை விளக்கமாக அறிந்திட படியுங்கள் கர்கரேயைக் கொலை செய்தது யார்? - வேர்கள் வெளியீட்டகம்.

இப்படி மராட்டிய தீவிரவாத தடுப்புப்படை பலகொலைகளை செய்து மாலேகான் குண்டுவெடிப்பு 2006 இன் முக்கிய குற்றவாளிகளை தப்பிக்க விட்டுவிட்டது. அப்ரார் அஹ்மத் பல அப்பாவி முஸ்லிம்களை இந்த குண்டுவெடிப்பில் சம்மந்தப்படுத்தி அவர்களின் வாழ்க்கையைப் பாழாக்கி தன்னுடைய வாழ்க்கையை வளப்படுத்திட முயற்சி செய்தான்.

பின்னர் அவனும் சிக்கிக் கொண்டான். சிறைப்பட்டான். ஆனால் அவனுக்கு பணம் சென்றுகொண்டேதான் இருந்தது. அதுவும் அதிக நாள் நீடிக்கவில்லை

2008 செப்டம்பர் 29ஆம் நாள் அதே மாலேகானில் மீண்டும் ஒரு முறை குண்டு வெடித்தது. முஸ்லிம்கள் பலர் மாண்டார்கள். இந்த முறை இந்த குண்டுவெடிப்புகளை ஆய்வு செய்திடும் பொறுப்பு வீரமகன் கர்கரேயிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் தன் ஆய்வின் முடிவில் அபிநவ் பாரத்ஜ சார்ந்தவர்களைக் கைது செய்தார். அப்ரார் அஹ்மத் போன்ற ஆட்காட்டிகளுக்கு சென்று கொண்டிருந்த பணம் நின்றது.

2006ல் சிறை சென்ற எல்லா முஸ்லிம்களும் 2011ல் விடுவிக்கப் பட்டார்கள். காரணம் முஸ்லிம்கள் அப்பாவிகள் என்பது நிரூபிக்கப்பட்டது. உண்மையிலேயே குண்டுவைத்த இந்துத்துவ தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டார்கள்.


இந்த பின்னணியில் வெளிவந்த அப்ரார் அஹ்மத் தனது பாவங்களை தி வீக் என்ற பத்திரிகையில் நவம்பர் 25 2012 இல் விரிவாக விவரித்துள்ளான் அதன் சுருக்கத்தையே இங்கு தந்திருக்கின்றோம். **- எம்.ஜி.எம்**

### புதைக்கப்பட்ட மக்கள்: மறைக்கப்பட்ட வரலாறு :

# பெய்ரூத்திலிருந்து ஜெரூசலம் வரை !!!


கரு: டாக்டர். ஆங்ச்சுவீ

தமிழ்வடிவம் : மு. குலாம் முஹம்மது


இஸ்ரேலிய இராணுவத்தினர் எங்களை அழித்தார்கள், அநியாயங்களுக்குள்ளாக்கினார்கள். எல்லாம் உண்மை தான். என்றாலும் அவர்களே நோயாளிகளாக மருத்துவமனைக்கு வந்தால் அவர்களுக்கும் வைத்தியம் செய்வது, எங்களது ஒழுக்கம். நாங்கள் பாலஸ்தீன் செம்பிறைச்சங்கத்தைச் சார்ந்தவர்கள் என்று அஜீசா ஹாலித் சொன்னது எனது காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருந்தது.

நான் அந்த இஸ்ரேலிய இராணுவ வீரர்களுக்கும் மருத்துவம் செய்தேன். எந்த காஸா மருத்துவமனையை அவர்கள் துவம்சம் செய்ய வேண்டும் என முடிவுகட்டி செய்து முடித்தார்களோ அந்த மருத்துவ மனையே அவர்களுக்கு பயன்பட்டது, அஜீஸா ஹாலித் இன் பெருந்தன்மையால்.

இந்த அஜீஸா ஹாலித் தான் இஸ்ரேலிய இராணுவத்தால் இடிக்கப்பட்ட அந்த காஸா மருத்துவமனையை மீண்டும் கட்டியெழுப்பினார்கள்.

இவையெல்லாம் என்னுள் அழுத்தமான தாக்கங்களை ஏற்படுத்தின. நான் என்னால் முடிந்த சேவைகளை (அதிகமான அறுவை சிகிச்சைகளை) செய்தேன். செய்துகொண்டே இருந்தேன். அப்போது தான் நான் அந்த செய்தியைக் கேள்விப்பட்டேன். காஸா மருத்துவ மனையில் நான் பார்த்துக் கொண்டிருந்த எலும்பு முறிவு அறுவை சிகிச்சைப் பகுதிக்கு வேறு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டதாகவும் நான் காஸா மருத்துவமனை பணிகளிலிருந்து அடுத்த நாளே விடுவிக்கப்படவேண்டும் என்றும் உத்தரவு. இந்த உத்தரவு என்னை அந்த மருத்துவ மனைக்குத் தொண்டு செய்ய அனுப்பியவர்களிடமிருந்தே வந்ததால் அஜீஸா ஹாலித் போன்றவர்களால் எதுவும் செய்திட இயலவில்லை.

"நீ வேண்டும்" என்று அடிக்கடி அழைக்கும் அஜீஸா ஹாலித் போன்றவர்களாலேயே எதுவும் செய்திட இயலாத அளவுக்கு என்னை அங்கே அனுப்பியவர்களுக்கு சில "அரிய ஆற்றல்கள்" அழுத்தங்களைத் தந்துள்ளன.

உண்மையைச் சொன்னால் என்னை அழைத்த லெபனான் அரசு தான் என்னுடைய ஒப்பந்தம் முடிந்துவிட்டது. நான் திரும்பி போய்விடவேண்டும் எனக் கூறியுள்ளது

ஆனால் அந்த லெபனான் அரசு சொன்ன காரணம் தான் மிகவும் வேடிக்கையானது. அது, எலும்பு முறிவு சிகிச்சைப்பகுதிக்கு மருத்துவர்கள் தேவை இல்லை என்பது தான். இது மிகவும் வேடிக்கையான காரணம்.

நான் தான் காஸா மருத்துவ மனையிலுள்ள எலும்பு முறிவுப் பிரிவை தலைமையேற்று நடத்தி வந்தேன். எலும்பு முறிவுப்பிரிவில் எஃப்.ஆர்.சி.எஸ் படித்த ஒரே டாக்டர் நான் தான்.

அதாவது காஸா மருத்துவமனையில் இந்தப் பிரிவில் மிகவும் அதிகமாகத் தேர்ச்சிப் பெற்ற ஒரே மருத்துவர் நான்தான். அதேபோல் இஸ்ரேலியப்படைகளின் தாக்குதல்களால் அதிகமாக அந்த பாலஸ்தீன மக்களுக்குத் தேவைப்பட்டதும், இந்த அறுவை சிகிச்சை தான்

அறுவை சிகிச்சைக்காகக் காத்திருப்போர் பட்டியல் மிகவும் நீளமானது. அறுவை சிகிச்சைக்கு காலதாமதமானதால் புண்கள் பழுத்து சீளும் சிராய்ப்புமாய் நொந்து நொடிந்து கொண்டிருப்பவர்கள் பலர்.

ஒடிந்துபோன எலும்புகள், சதைப்பகுதியை பறிகொடுத்து பளிச்சென வெளியே தெரிந்து கொண்டிருந்தன. இந்த பகுதிகளுக்கு வேறிடத்திலிருந்து சதையைக் கொய்து வைத்திட வேண்டும். எலும்புகளை மறைத்திட வேண்டும். இல்லையேல் இவை பழுத்து கெட்டுப்போகும். விரைந்து இந்த அறுவை சிகிச்சையை செய்யாவிட்டால் இதுவே அவர்களை அழிக்கப்போதுமானது. இப்படி எண்ணற்ற சிகிச்சைகள் மீதமிருக்க காஸா மருத்துவமனையில் எலும்பு முறிவு பகுதிக்கு ஆட்கள் தேவை இல்லை என்பது வேடிக்கையானது. விசித்திரமானது.

இத்தோடு மட்டுமல்லாமல் சிலருடைய உயிரைக் காப்பாற்றிட வேண்டும் என்றால் நொடிந்துபோன சில உறுப்புகளை முற்றாக மாற்றியாக வேண்டும்

பாலஸ்தீன முஸ்லிம்களிடம் பரிவும் பாசமும் காட்டியவர்களுள் மிகவும் முக்கியமானவர் அபூஅலீ என்பவர். இவர் தான் அந்த அறுவை சிகிச்சை பகுதியிலுள்ள அரங்கத்தை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருப்பவர். இவர் சதா சர்வ காலமும் அறுவை சிகிச்சை உபகரணங்களை அங்காடியில் வாங்குவதற்கு அலைந்து கொண்டே இருப்பார். இப்படி அலைந்து கொண்டிருப்பது மிகவும் ஆபத்தானது, லெபனானைப் பொறுத்தவரை. காரணம் லெபனானின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து வைத்திருந்த இஸ்ரேலிய இராணுவம் யாரை வேண்டுமானாலும் அதுவும் எப்போது வேண்டுமானாலும் கைது செய்யலாம்.

ஒரு முறை ஆண்கள் கைது செய்யப்பட்டு விட்டால் அத்தோடு அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுவிடுவார்கள். அவ்வளவுதான்.

இத்தகையதொரு கடினமான சூழலில் தான் அபூஅலீ எதுவரினும் சரியே என தன் நொடிந்துபோன மக்களுக்காக மருத்துவ பொருள்களை வாங்கிட அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார்.

அடுத்தடுத்து இஸ்ரேலிய இராணுவம் போட்டிருந்த தடைகளையும் சோதனை சாவடிகளையும் அவர் கடந்து சென்றிட வேண்டியிருந்தது.

இப்படி அபூஅலீ அலைந்து கொண்டிருப்பதற்கு காரணம் நான் அடிக்கடி அவரிடம் ஒரு பெரிய அறுவை சிகிச்சையை செய்கின்ற அளவில் நாம் இன்னும் தயாராகவில்லை என்பதை சொல்லி வந்தேன். அவர் இன்னும் ஒரு வாரத்திற்குள் நான் அந்த அறுவை சிகிச்சை அரங்கத்தை பெரிய அறுவை சிகிச்சை களையும் செய்வதற்குரியதாக ஆக்கித் தந்து விடுகின்றேன் என வாக்களித்தார். அதற்காகத்தான் ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருந்தார்.

இந்த அரங்கம் முழுமையாகத் தயாரானால் தான் பல பழைய காயங்களுக்கு மருத்துவம் செய்திட இயலும். இவற்றில் பல லெபனானின் ஒரு பகுதியை இஸ்ரேல் ஆக்கிரமிக்கும்போது வீசிய குண்டுகளில் பட்டக் காயங்களாகும்.

அந்த மக்களுக்கு இன்றளவும் எந்த சிகிச்சையும் கிடைக்கவில்லை. அவர்கள் மருத்துவம் பெற்று உயிருடன் வாழ்ந்திடுவதை இஸ்ரேலிய இராணுவம் நிச்சயமாக விரும்பிடவில்லை. இதற்கெல்லாம் ஓர் அருமருந்தாக காஸா மருத்துவமனை தயாராகும் போது நான் வெளியே சென்றிடவேண்டும் என என்னை காஸா மருத்துவமனைக்குத் தருவித்தவர்கள் கூறுகின்றார்கள் இது வேடிக்கையிலும் வேடிக்கை.

இந்தச்சோக செய்தியை நான் யாருக்கும் சொல்லவில்லை. சொன்னால் நிச்சயமாக என்மீது பாசங்கொண்டவர்கள் பதறிப்

போவார்கள். அவர்களின் மனம் கிஞ்சிற்றும் சோர்வடைவதை நான் விரும்பவில்லை.

எல்லாமிருந்தாலும் உண்மையிலேயே என்னை வெளியேற்றுவதற்கு யார் காரணம் என்பதை நான் அறிவேன்.

பாலஸ்தீன செம்பிறை சங்கத்திற்கும் இதற்கும் எள்ளளவும் சம்மந்தமில்லை. அவர்களுக்கு நான் வேண்டும். ஆனால் அந்த மேலை நாட்டுப்பெண்கள் அந்த கிருஸ்தவ பெண்கள் இவர்களெல்லாம் என்னைக்குறி வைக்கத் தொடங்கி விட்டார்கள். அவர்களை பொருத்தவரை நான் பாலஸ்தீன முஸ்லிம்களின் மேல் அதிகப்பற்று கொண்டவள். இஸ்ரேலியருக்கு எதிரானவள். ஆகவே அகற்றப்பட வேண்டியவள். அவர்களுக்கு ஒரு நிமிடம் கூட என்னோடு வேலை செய்ய இயலவில்லை. மனமுமில்லை. அவர்கள் என்னை அகற்றுவதில் வெற்றிக்கண்டு விட்டார்கள்.

உலகில் மன அழுத்தம் தரும் செய்திகளையே சிந்தித்துக் கொண்டிருப்பது சரியல்ல. மாறாக சுற்றி இருப்பவர்களோடு சந்தோசமாக இருக்கத்தலைப்பட்டேன். அரபு டீயை வரவைத்து அருந்தினேன். என்னோடு இருந்தவர்களிடம் உரையாடினேன்

நொடிந்தும் நொறுங்கியும் போன அந்தக் குழந்தைகளை தொட்டு வருடினேன். அவர்கள் அந்த வலியிலும் சற்று ஆறுதல் அடைந்தார்கள். நான் அவர்களைப்பார்த்து திருப்தி அடைந்தேன்

இதற்குள் காலை 4 மணி ஆகிவிட்டது

அதாவது நான் காஸா மருத்துவமனையைக் காலி செய்திட வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. வேகவேகமாக ஆடைகளை மாற்றிவிட்டு எல்லோரிடமும் என்னை விட்டுவிடுங்கள். நான் தென் பெய்ரூத் ஐ சுற்றிப்பார்க்க விரும்புகின்றேன் என்றேன்.

அப்போது எல்லோரும் என்னைக் கேள்வியால் துளாவினார்கள். நான் சொன்ன பதிலால் எல்லோரும் அதிர்ந்தார்கள்.

திரும்பிப்பார்த்தேன். அஜீஸா ஹாலித் கண்களில் கண்ணீருடன் நின்றுக் கொண்டிருந்தாள்.

எந்த சோதனையையும் இன்முகத்தோடு எதிர்கொள்ளும் அவள் எனக்காக மட்டுமே


இறைவனின் அழகிய வழிகாட்டுதல் அனைவருக்கும்!

மனிதன் இந்த உலகில் எப்படி வாழ வேண்டும்?

இந்த வினாவிற்கு முழுமையான விடையே திருக்குர்ஆன். இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை.

அறிந்திட விரும்புவோர் இலவசமாக திருக்குர்ஆன் தமிழ்மொழிபெயர்ப்பைப் பெற்றிட கீழ்க்காணும் முகவரிக்கு எழுதுங்கள்.

தாருல் இஸ்லாம் ஃபவுண்டேசன் டிரஸ்ட்

52/1, மண்ணடி தெரு,
கோனிகா கலர் லேப் பில்டிங்
4வது மாடி,அறை எண் 7.
மண்ணடி சென்னை-1

இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கு இல்லை.

அழுதாள். நான் செய்த மொத்த சேவைக்கும் அவளது கண்ணீர் எனக்குப்பரிசு.

அவளை நான் தேற்றினேன் என்னை அவள் தேற்றினாள்.

நான் வெளியே வருமுன் மீண்டும் சென்று அந்த எலும்பு முறிவுப் பிரிவை அறுவை சிகிச்சை அரங்கை ஏறிட்டுப் பார்த்தேன்.

அங்கே டாக்டர் அமின் என்பவர் சிகிச்சை செய்துகொண்டிருந்தார். அவருடைய இளமை அவருடைய சிகிச்சைக்கு ஒரு வேகத்தைத் தந்திருந்தது.

"ஒன்றும் கெட்டுப்போகவில்லை இந்த மருத்துவமனை வாழும். நீண்ட சேவையை செய்யும். காரணம் அஜீஸா அதன் முதன்மை நிர்வாகி."

"இந்த எலும்பு முறிவுப் பிரிவும் நன்றாக இயங்கும். டாக்டர் அமின் போன்றவர்கள் அதனைக் கைவிட மாட்டார்கள்."

உண்மையில் என்னை மருத்துவ மனையிலிருந்து அகற்றியவர்கள் அதாவது லெபனான் அரசு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றது என்பதை நான் புரிந்துக்கொண்டேன்.

நான் அனைவரிடமும் விடை பெற்றுக்கொண்டு என்னுடைய மே ஃபயர் ரெசிடென்சி வந்தேன். தெற்கு லெபனானைச் சுற்றிப்பார்க்கத் தொடங்கினேன்.

**வைகறை வெளிச்சம் பத்திரிக்கையில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்**

- இத்துடன் புதைக்கப்பட்ட மக்கள் மறைக்கப்பட்ட வரலாறு தொடர் முற்றும் (அல்ஹம்துலில்லாஹ்)

அன்பார்ந்த வாசகர்களே

ஆங் சுவீ சென் அவர்கள் லெபனானில் அகதிகளாக வாழ்ந்த பாலஸ்தீன முஸ்லிம்களுக்கு ஆற்றிய சேவையை நாம் இங்கே தந்தோம்.

அவர் சேவை செய்தார் என்பதைவிட அவர்தான் ஷாப்ரா ஷத்திலா படுகொலைகளின் நேரடி சாட்சியம்.

ஷாப்ரா ஷத்திலாவில் தாங்கள் மூன்று நாள்களாக நடத்திய படுகொலைகள் உலகுக்குத் தெரியாது என்றே நினைத்தார்கள் இஸ்ரேலியர்கள். ஏனெனில் இந்த படுகொலைகளை உலகுக்கு காட்டிட வேண்டிய ஊடகங்கள் அந்தப் பணியைச் செய்திடவில்லை. இதனால் கண்ணால் கண்ட சாட்சியங்கள் எதுவும் இல்லை என்றே இஸ்ரேலிய படையினர் எண்ணினார்கள். ஆனால் ஆங் சுவீ சென் நானிருக்கின்றேன் என்றார். அத்தோடு உலகில் நடைபெற்ற அத்தனை விசாரணைகளுக்கும் சென்று அந்த விசாரணைக் குழுக்களிடம் சாட்சியம் சொன்னார்.

அத்தோடு உலகெங்கிலும் நன்கொடைகளை வசூல் செய்து பாலஸ்தீன அகதிகளுக்கு உதவிகளைச் செய்தார்.

2007ம் ஆண்டு இந்த ஷாப்ரா ஷத்திலா அகதிகள் முகாம் கொலைகள் நடந்து 25 ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்போது இந்த நூலை மறுபதிப்பும் செய்தார்.

உலகெங்கிலும் சென்று இதனைப் பிரசாரமும் செய்தார். இவற்றை நவம்பர் 2012 வைகறை வெளிச்சத்தில் வெளியிட்டிருக்கிறோம் (வாசகர்கள் அதைப் படிக்கவும்)

ஆங் சுவீ சென் தன்னுடைய சேவைகளை தொடர்ந்து தருகின்றார். பாராட்டுகள்.

நாம் அவர் ஓர் ஐ விட்னஸ் கண்ணால் கண்ட சாட்சியம் என்ற அளவிலான அனைத்துத் தகவல்களையும் தந்துள்ளோம்.

வஸ்ஸலாம். - MGM

# கஷ்மீரின் பாதி விதவைகள்



பர்வீனா காணமற்போன குழந்தைகளின் பெற்றோர்கள் அமைப்பின் தலைவி. புல்வாமா கிராமத்தவர்களை ஒருவிதமாக சமாளித்து அனுப்பி விட்டோம் என நிம்மதி அடைந்தாள். ஆனாலும் அவளுக்கு நன்றாகத் தெரியும் சமதுல்லாஹ்வும் குலாம் நபி வானியும் கிடைக்கவே மாட்டார்கள் என்பது.

ஆனால் அந்த கிராமவாசிகளிடம் அதைப்பட்டவர்த்தனமாகச் சொல்லிவிட்டால் அவர்கள் துவண்டு போவார்கள் என்பதை பர்வீனா நன்றாக அறிவாள்.

அப்படித்துவண்டு போகாமல் அவர்கள் வெகுண்டெழுந்தால் அவர்களைச் சமாளிப்பது மிகவும் கடினமான பணியாக இருக்கும்.

ஆகவே அனுப்பி விட்டது ஒரு பெரும் செயலாகவே தெரிந்தது பர்வீனாவுக்கு .

ஆனால் நெஞ்சம் கனத்தது. கண்கள் பனித்தன. அந்த அப்பாவிகளிடம் நீங்கள் தேடும் சமதுல்லாஹ் கனானெய்யும் குலாம் நபிவானியும் கிடைக்கவே மாட்டார்கள். இது என் அனுபவம் என்று சொல்லமுடியவில்லை. அந்த வகையில் அந்தக் கிராமத்தவர்களை நாம் ஏமாற்றி விட்டோம் என்றே மனம் புழுங்கினாள். அதனால் கண்கள் பனித்தன. அவள் மனசாட்சி அவளை துளைத்தெடுத்தது

பர்வீனாவை பிரிதொரு நினைப்பும் வாட்டியெடுத்தது. அது அவர்கள் காட்டிய அந்த பிணங்கள் யாருடையவை? எந்த குடும்பத்தை சார்ந்தவை? அவர்களை இழந்தவர்கள் யார்? அவர்களின் குடும்பங்கள் எங்கே? இவர்கள் இந்த இராணுவத்தைச் சார்ந்தவர்கள் யாருக்கெல்லாம் இந்த பிணங்களையே காட்டிக்கொண்டிருக்கிறார்கள்? ஒரு பக்கம் நெஞ்சம் குமுறியது. இன்னொரு பக்கம் மக்களின் அவலங்கள் குறித்து ஆதங்கம் அனைத்தையும் விஞ்சி வந்தது. இந்த பிணங்களின் சொந்தக்காரர்களின் முகவரிகளைக் கண்டாக வேண்டும் இராணுவத்தின்

கொலைபாதங்களை அம்பலப்படுத்தியாக வேண்டும். அதனூடே சமதுல்லாஹ்வையும் குலாம் நபியையும் தேடும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும் என கங்கணம் கட்டினாள்.

அடுத்த நாளே காணாமல் போனவர்களின் பெற்றோர் குழுமத்தைக் கூட்டினாள். அவர்களிடம் இராணுவத்தின் பித்தலாட்டங்களை விளக்கிச் சொன்னாள். அனைவரும் வைத்தக்கண் வாங்காமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சோகம் சொட்ட கேட்டவர்களின் கண்களில் கண்ணீர் கொட்ட எடுத்துரைத்தாள் பர்வீனா.

எல்லோருடைய கண்களும் கலங்கின.

முடிவில் பர்வீனா என்ன செய்யலாம் எனக்கேட்டாள்.

இந்த கேள்விக்கு மட்டும் யாரும் பதில் சொல்லிடவில்லை. காரணம் அவர்கள் அனைவரும் அறிவார்கள் கஷ்மீரில் இதுபோல் தினம் தினம் நடக்கும் பிரச்னைகளுக்குத் தீர்வுகள் இல்லை என்பதை.

அழுவதைத் தவிர அங்கே வேறெதும் செய்திட இயலாது. அதனால் அவர்கள் தங்களால் முடிந்ததைச் செய்து முடித்து விட்டார்கள். அழுகை. அவ்வளவுதான்

இராணுவத்தின் கொட்டடியில் இருப்பவர்களை மீட்க ஒரு வழி இருந்திருந்தால் அன்றளவும் அவர்கள் 10,000 சமதுல்லாஹ் களையும் குலாம் நபி வானிகளையும் மீட்டிருப்பார்கள்

அந்த குடும்பங்களின் வாழ்க்கை அவ்வளவுதான் என்றே எல்லோரும் அமைதி காத்தார்கள்.

காணாமற் போனவர்களின் பெற்றோர்களின் குழுமத்தைச் சார்ந்த ஒருவர் வழக்கம் போல் முதல் தகவல் அறிக்கை ஒன்றைப்பதிவு செய்து நீதிமன்றத்தின் பார்வைக்கு கொண்டு வந்திட வேண்டியது தான் என்றார்.

இன்னொருவர் ஆயுதம் தாங்கிய படைகளின் சிறப்பு அதிகார சட்டத்தை ரத்துசெய்துவிட்டால் ஏதாவது நடக்கும். அதிலும் ஒன்றும் செய்ய முடியவில்லை என்ன செய்வது என்றே தெரியவில்லை என்று எல்லோருடைய விரக்தியையும் ஒட்டு மொத்தமாக வெளிப்படுத்தினார். அத்தோடு கலைந்துவிட்டார்கள். அனைவரின் கண்களும் கண்ணீரால் நிரம்பி நின்றன.

ஆமாம் அவர்களில் ஒவ்வொருவரும் அதுபோல் பாதிக்கப்பட்டவர்களல்லவா?

அனைவரையும் போல் பர்வீனாவினால் அத்துணை விரைவாக விடைபெற்றுச் சென்றிட இயலவில்லை. அந்த அப்பாவி கிராமவாசிகள் அவசியம் அடுத்த நாள் வருவார்கள். அவர்கள் இரண்டு குடும்பத்தைச் சார்ந்தவர்களோடு வருவார்கள்.

என்ன செய்யலாம் எனக்கேட்பார்கள். அவர்களுக்கு என்ன பதில் சொல்வது? ஒரேயடியாக எங்களால் எதுவும் ஆகாது எனச் சொல்லிட இயலாது.

அப்படிச்சொன்னால் அந்த இருவரின் மனைவியருக்கும் ஏதாவது ஆகிவிடும். அதன் பின் எல்லாம் கெட்டுவிடும். உண்மையைச் சொல்லாமல் இழுத்தடித்தால் அவர்களை ஏமாற்றுவது தான் அது. அதைவிட ஈனச்செயல் எதுவுமிருக்காது. இப்படி அடுக்கடுக்கான எண்ணங்கள் பர்வீனாவை அலைக்கழித்துக் கொண்டிருந்தன.

ஆனால் அந்த இருவரின் மனைவியரில் சமதுல்லாஹ்வின் மனைவி ஏற்கனவே மனநிலை பாதிக்கப்பட்டவளாக ஆகிவிட்டாள் என்பது பர்வீனாவுக்கு அப்போது தெரியாது. அதனால் அவள் அவர்கள் இருவருக்கும் கஷ்மீரின் யதார்த்த நிலையை எப்படிப் படிப்படியாக புரியவைப்பது என யோசித்துக் கொண்டிருந்தாள்.

மறுநாள் பர்வீனாவைத் தேடி கிராமத்து வாசிகள் வந்தார்கள். ஜெமிலாவும் குலாம் நபி வானியின் மனைவியும் உடன் வந்தாள்.

கணவன் இறந்துவிட்டான் என எண்ணிய அவள் இத்தா என்ற காத்திருக்கும் காலத்திற்குள் புகுந்தாள். இப்போது கணவன் இறக்கவில்லை என்பதனால் அவனை எப்படியெனும் கண்டுபிடித்துவிட இயலும் என்ற உறுதியில் அந்த கிராமவாசிகளோடு பர்வீனாவைப் பார்க்க வந்தாள்.

இனி பர்வீனாவோடு இணைந்து சமதுல்லாஹ் கனானெய்யும் தனது கணவன்

குலாம் நபிவானியையும் தேடிடுவதே தனது பணி என முடிவு செய்தாள். கிராமவாசிகளின் உதவியோடு இராணுவம் தூக்கிச் சென்றவர்களை மீட்டுவிடலாம் என்றும் நம்பினாள் ஜமீலா.

பர்வீனாவுக்கு ஜமீலாவை அறிமுகப்படுத்தினார்கள். இவர்தான் இராணுவத்தினர் கடத்தி வந்தவர்களில் குலாம் நபிவானி என்பவரின் மனைவி என அறிமுகப்படுத்தினார்கள்.

சற்றும் தாமதிக்காமல் பர்வினா சமதுல்லாஹ்வின் மனைவி என்றாள்.

அவளுக்கு மனநிலையில் பிரச்னை. சிரித்துக்கொண்டே இருக்கின்றாள் என்றார்கள்.

பர்வீனாவும் அவளுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்தாள். ஜெமீலாவிடம் நீ உறுதியாக இரு, நாம் முயற்சி செய்வோம் என்றாள். ஜெமீலாவை உறுதிபடுத்திடத்தான் இந்த வார்த்தைகளைச் சொன்னாளே அல்லாமல் அவளுக்கே அந்த வார்த்தைகளில் நம்பிக்கை இல்லை.

சமதுல்லாஹ் கனானெய் இன் மனைவி வஹிதாவின் நிலை அவளுக்கு வந்துவிடக் கூடாது என்பதனால் தான் பர்வீனா அப்படி பேசினாள்.

ஜெமீலா பர்வீனாவிடம் நாம் எடுக்கும் முயற்சி இருவருக்காகவும் இருக்கட்டும். ஒரு முறை தன் கணவனை நேரில் பார்த்துவிட்டால் வஹிதா சீராகிவிடுவாள் என்றாள் ஜெமீலா.

பர்வீனா ஜெமீலா காட்டும் உறுதியால் சற்றுப் பதறியே போய்விட்டாள். ஏனெனில் இனி வரும் நாள்கள் ஜெமீலாவுக்கு ஏக்கம் ஏமாற்றம் இவை நிறைந்ததாகவே இருக்கும் என்பதை அவள் நன்றாக அறிவாள்.

நாட்கள் நகர்ந்தன. இராணுவத்தினர் நாற்பதாயிரம் ரூபாயை வாங்கியதாகவோ புல்வாமா கிராமத்திலிருந்து இரண்டு பேரை அழைத்து வந்ததாகவோ காட்டிக் கொள்ள வில்லை. அதனால் இராணுவத்தினரின் முழு அக்கிரமத்தையும் கொடுமையையும் அப்படியே விழுங்கிட வேண்டியதாயிற்று. ஜெமீலாவால் அது முடியவில்லை.

அடுத்து முதல் தகவல் அறிக்கை ரூபாய் ஐந்தாயிரம் செலவில் பதிவு செய்யப்பட்டது.

வழக்கம்போல் நீதிமன்றத்தின் பார்வைக்கும் கொண்டு செல்லப்பட்டது. நீதிமன்றம் பத்தோடு பதினொன்று அத்தோடு இஃதொன்று என வாங்கி வைத்துக்கொண்டது.

இப்போது நாள்களல்ல, கிழமைகள் நகர்ந்தன. பர்வீனாவால் சாதிக்க முடிந்தது எதுவுமில்லை என்பதை ஜெமீலா இப்போது நன்றாக உணர்ந்தாள்.

அதனால் தனக்கொரு பாதையை வகுத்துக்கொண்டு தேட தொடங்கினாள்.

மாதங்களும் வருடங்களும் நகர்ந்தன. ஜெமீலாவுக்கு மூன்று குழந்தைகள், ஒரு மகன், இரண்டு மகள்கள். இவர்களை பள்ளிக்கு அனுப்புவதைப் பற்றியோ அவர்களை ஆளாக்குவதைப் பற்றியோ சிந்திக்க நேரமில்லை. இருந்ததையெல்லாம் விற்று கணவனை தேடிடும் முயற்சியில் செலவு செய்தார்கள்

கிராமத்தவர்கள் எத்தனைக்காலந்தான் இப்படி அலைவாய். இன்னொரு திருமணத்தை முடித்துக்கொண்டு பிள்ளைகளைக் கவனி என அறிவுரைக் கூறினார்கள்.

எந்த நிலையிலும் மறுமணம் என்பதில்லை. என் கணவனை உயிருடன் அல்லது பிணமாகப்பார்க்கும் வரை ஓயமாட்டேன் எனச் சொல்லிவிட்டாள் ஒற்றை வரியில் ஜெமீலா.

இப்போது இருந்ததெல்லாம் முடிந்தது. நாலு வீட்டில் வேலை செய்து வாழ்ந்திட வேண்டும் என்ற நிலை. கிடைத்தக் கூலி காய்ந்திடும் குழந்தைகளை காப்பாற்றிடவே போதுமானதாக இல்லை. கணவனை தேடிட திரும்பும் திசையெல்லாம் பணத்தை அள்ளி இறைத்திட வேண்டியதிருந்தது. அதை அவளால் சமாளித்திட இயலவில்லை.

தன் வயிற்றை இயன்ற மட்டும் கட்டிப்போட்டு விட்டு குழந்தைகள், கணவன் இவர்களுக்கே கையில் கிடைத்ததையெல்லாம் செலவிட்டாள்.

இப்போது ஒரு வயிற்றுவலி அவளைத் தொற்றிக்கொண்டது. அதனை அலட்சியம் செய்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. காரணம் கணவன் கிடைத்துவிட்டால் மொத்தப் பிரச்னையும் தீர்ந்து விடும் என்ற உறுதியில் இருந்தாள் அவள்.

ஒரு நாள் அவளை வயிற்றுவலி கீழேயே தள்ளிவிட்டது. துடித்துபோனாள் வலியால் .

அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அவளை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள்.

சிறுநீரகம் ஒன்று முற்றாக செயல்படவில்லை. அடுத்த கிட்னியும் ஆபத்தான நிலையில் தாம் இருக்கின்றது என்றனர் மருத்துவர்கள்.

ஆபத்தான கிட்னி அடுத்து நின்றது.

அவள் பிணமானாள்.

குழந்தைகள் அனாதைகளாயின.

ஸ்ரீநகரில் இந்தக் குழந்தைகள் தட்டழிவதைக் கண்ட எழுத்தாளர் குழந்தைகளைப் பற்றி விசாரித்ததன் விளைவே இந்த உண்மைகள் நமக்கு வந்து கிடைத்தன.

காணமற் போனவர்களின் பர்வீனா இப்போது வேறொரு வேலையை செய்து கொண்டிருந்தாள்.

அதுதான் கிடைக்காத பிணங்களின் மனைவியருக்குப் பதில் சொல்லி பயனற்றுப் போனதால் கிடைத்தப் பிணங்களாம் மன்சூர் அஹ்மத் திராலி முஹம்மத் யூசுஃப் ஆகியவற்றின் சொந்தக்காரர்களை தேடிக் கொண்டிருந்தாள் முடிவில்லாமல்...

- தொடர் முற்றும்

கஷ்மீர் மக்களின் இந்த அவலங்களை முடிந்த மட்டும் சகோதர சமுதாயத்தை சார்ந்தவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள்

இதுவே அந்த கஷ்மீர் மக்களுக்கு நீங்கள் இப்போது செய்யும் உதவி

நிறைகள் எல்லாம் நிறைந்த அல்லாஹ்வை சாரும் குறைகள் என்னைச் சாரும்

இவண்: உங்கள் அன்புள்ள மு. குலாம் முஹம்மது

இனியும் நிகழ்வுகள் தொடர்ந்து வைகறை வெளிச்சத்தில் இடம் பெறும் இன்ஷா அல்லாஹ்


வைகறை வெளிச்சம் இப்போது துபாயிலும்....

துபாய் வாசகர்கள்
வைகறை வெளிச்சம் மாத இதழை
பெற்றிட தொடர்பு கொள்ள வேண்டிய

தொலைபேசி எண் : +971551390923
சென்னை தொடர்புக்கு : 9444329594

வைகறை வெளிச்சம் மாத இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்!

| | |
|---|---|
| பின்அட்டை | ரூ 6000 |
| உள்பக்க அட்டை | ரூ 4500 |
| முழுப்பக்கம் | ரூ 1000 |
| அரைப்பக்கம் | ரூ 500 |
| விசிட்டிங்கார்டு அளவு | ரூ 250 |



owned and Published by M. Gulam Mohamed From 52/1, Mannady Street, Mannady, Chenni - 600 001. Editor : M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street Chennai - 600 002.

بسم الله الرحمن الرحيم

# அன்பகம்

17, மூன்றாவது குறுக்குத் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம், தஞ்சைமாவட்டம் - 612 001



குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கு ஓர் கல்வியகம் வேண்டும் என்ற குரல் இஸ்லாத்தை ஏற்றிடும் மக்களிடமிருந்து வந்தது. இந்த ஏக்கம் போக்கிடவே அன்பகம். இதற்கு முன் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் ஆண்களுக்கென ஒரு கல்வியகத்தையும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் பெண்களுக்கென ஒரு கல்வியகத்தையும் பெண்கள் காப்பகத்தையும் உருவாக்கி நடத்தியவரை தலைவராகக் கொண்டு இயங்குகின்றது இந்தக் கல்வியகம் அல்ஹம்துலில்லாஹ்.

**12.09.2007 முதல் கும்பகோணத்தில் ஓர் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவருகின்றது (அல்ஹம்துலில்லாஹ்)**

**குடும்பத்திலுள்ள நபர் ஒருவருக்கு ஆகும் செலவு ரூபாய் 6000/- மருத்துவ வசதிகள் உள்பட அனைத்தும் இலவசம்.**

அன்பிற்கினிய சமுதாயப் பெருமக்களே!

இந்த பணிகளில் உங்களுடைய ஆலோசனைகளையும் உதவிகளையும் தாராளமாக வழங்குங்கள். இவை நமது பணிகள். இன்ஷா அல்லாஹ் நாம் அனைவரும் இணைந்து இந்த பணிகளை விரிவாக்குவோம், நிலைநிறுத்துவோம்.

செக்/டி.டி. அனுப்புபவர்கள் :

**DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயருக்கு எடுத்து, பின் வரும் முகவரிக்கு அனுப்பவும்

52/1, மண்ணடி தெரு, 4வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.

தொலைபேசி : 044-45566909, கைபேசி : 9444239594

இணையதள முகவரி : www.darulislam.in, மின்அஞ்சல் : darultrust@yahoo.com

Please draw your cheques / DD in favour of **DARUL ISLAM FOUNDATION TRUST**

Canara Bank A/C 1287101017301 - Branch St. Mary's Road, R.A. Puram, Chennai.

and Send to : 52/1 Mannadi Street, 4th Floor, Room No.7, Mannadi, Chennai - 600 001.

Phone : 044-45566909 Mobile : 9444239594

E-mail : darultrust@yahoo.com Website : www.darulislam.in

இவண்

மு. குலாம் முஹம்மது *M.A. Journsalim*
மேனேஜிங் டிரஸ்டி

மௌலவி கே.எம். இல்யாஸ் ரியாஜி
பொருளாளர்

Vaigarai Velicham - Tamil Monthly, RNI TC No. TNTAM / 17673 / 17.08.07 RNI : TNTAM/2008/25045 Postal Registration No. TN/CNIGPO/031/2011-2013 R.DIS. NO. 1477/07 Posted at Egmore RMS Patrika Channel

# தைபா ஹஜ் சர்வீஸ்



வாருங்கள் சென்று வருவோம்!சரித்திரச் சின்னங்களைக் கண்டு வருவோம்!


## ஜியாரத் , உம்ரா அழைப்பு

அல்லாஹ் கூறுகிறான்:
அவர்கள் பூமியில் பிரயாணம் செய்து [இவற்றைப்] பார்க்கவில்லையா?
[அவ்வாறு பார்த்திருந்தால்] அவர்களுக்கு விளங்கிக் கொள்ளக் கூடிய
உள்ளங்களும் [நல்லவற்றைச்] செவியேற்கும் காதுகளும்
உண்டாகியிருக்கும் [அல் குர்ஆன் 22:46]



இறைத்தூதர்கள் புனிதப் போராளிகள் நபித்தோழர்கள் ஆகியோர் வாழ்ந்த இடங்களையும் இஸ்லாமிய வரலாற்றில் தனித்துவம் பெற்றுத்திகழும் சரித்திரச் சின்னங்களையும் நேரில் காணும் வாய்ப்பை தைபா ஹஜ் சர்வீஸ் உங்களுக்கு வழங்குகிறது.

கொடுங்கோலன் ஃபிர்அவ்னின் உடல், பிரமிடுகள், இறுதிநாளின் சமீபத்தில் ஈஸா நபி வந்திறங்கும் வெள்ளை மினரா பள்ளிவாசல், பைத்துல் முகத்தஸ், திருக்குர் ஆன் கூறும் குகை வாசிகள் வாழ்ந்த குகை, தூர் சினாய் மலை. எகிப்து, சிரியா, ஜோர்டான், ஈராக், ஃபலஸ்தீன் ஆகிய நாடுகளிலுள்ள வரலாற்றுச் சின்னங்கள்





இன்னும் பல. . . . பல. . . . இவற்றுடன்
உம்ரா மற்றும் மதினா

கோடை விடுமுறை, ரமழான் மாதங்களிலும் இதர மாதங்களிலும்
உம்ராவுக்கு குழுவாகவும் குடும்பமாகவும் அழைத்துச் செல்கிறோம்

சுவையான உணவு, தரமான தங்குமிடம், கனிவான உபசரிப்பு.
இதயத்தில் தக்வா ஏற்படும் சூழல்!

# TAIBA HAJ SERVICE

6/8, Second Floor, Rutland Gate IInd Street,
Thousand Lights, Chennai - 600 006.
Tel.: 044-28332770 / 28332771 / 9941902786 / 9941930786 Fax : 28332769
Cell:94448 54653 / 9994258002 Email : taibahajservice@gmail.com

IATA